வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை - 5

மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்



முனைவர் செ. இராஜேஸ்வரி
எம்.ஏ.,எம்.:.பில்., பிஹெச்.டி

சந்திரோதயம் பதிப்பகம்
3/422 திருவள்ளுவர் தெரு, ,தினமணி நகர், மதுரை – 625 018
தொலைபேசி எண் : 7010997639

வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை - 5

மகளிர் போற்றும்
மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்

முனைவர் செ. இராஜேஸ்வரி M. A., M. Phil., Ph. D.,

சந்திரோதயம் பதிப்பகம்,மதுரை.

Mob.:7010997639.

நூல் விவரம்

நூல் வரிசை	:	வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 5
நூலின் பெயர்	:	மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்.
ஆசிரியர்	:	முனைவர் செ. இராஜேஸ்வரி
துறை	:	சினிமா, சமூகம்
வடிவமைப்பு	:	செ. மீனாட்சி
பதிப்பாளர்	:	சந்திரோதயம் பதிப்பகம் 3/422, தினமணி நகர், மதுரை–625 018 தொலைபேசி எண் : 7010997639
பதிப்பு	:	2020
மொழி	:	தமிழ்
பக்கங்கள்	:	138
விலை	:	Rs.200/-

- - - - -

Book	:	*Vetrithirumagan MGR – 5*
Title	:	*Magalir Potrum Makkal Thalaivar MGR*
Author	:	*Dr.C.Rajeswari, M.A., M.Phil., Ph.D.,*
Subject	:	*Cinema, Society*
Cover Design	:	*C. Meenatchi*
Publisher	:	*Chandrothayam Pathippagam 3/422, Dinamani Nagar Madurai – 625 018 Phone : 7010997639*
Month of Publish	:	*2020*
Pages	:	*138*
Price	:	*Rs.200/-*

அன்பு காணிக்கை

எம்.ஜி.ஆரை தன் மகனாக,சகோதரனாக, நண்பனாக, ஆத்ம நேசராக நினைத்து வாழும் அனைத்து பெண்களுக்கும் இந்நூல் அன்பு காணிக்கை.





நூலாசிரியர் பற்றி



முனைவர். செ. இராஜேஸ்வரி மொழி பெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். **புலமை, செந்தமிழ், வளர் தமிழ், ஓங்கு தமிழ் நா.வா.வின் ஆராய்ச்சி** *போன்ற ஆய்விதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டார். மொழிபெயர்ப்பியல் ஆய்வு என்ற ஆய்வு கட்டுரைகள் அடங்கிய நூல் ஒன்றை 1992இல் வெளியிட்டார். இந்நூல் இணையத் தமிழ் பல்கலைகழகத்தின் மின் நூல் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.*

1988 முதல் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். **Indian Women–Changes and Challenges, Urban Theology, Vaigai Paripatal, Assisted reproductive technologies and its Impact on Women, Eco Vision and Mission, Bachelor's Study Materials for Social Science [IGNOU], Neuro Ophthalmology Articles** *போன்ற பல துறை சார்ந்த பனுவல்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். 1993இல் ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் இணைப் பதிப்பாசிரியராகப் [Associate editor] பணியாற்றினார். அப்போது ஜப்பானிய மொழியைத் தமிழில் கற்பது எளிது என்பதை அறிந்து அதற்கான நூல் உருவாக்கும் பணியில் ஜப்பானியப் பெண் யூகோ ஃபுகுரோயியுடன் இணைந்து செயல்பட்டார். அந்த நூல் மூன்று பாகங்களாக வெளி வந்துள்ளது. ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் வெளிநாட்டு*

மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். தமிழ் மாணவர்களுக்கு ஜப்பானிய மொழி இலக்கணம் கற்பித்தார். யுக்கோ சான் அம்மாணவர்களுக்கு ஒலிப்பயிற்சி அளித்தார்.

1986 முதல் சமயச் சொல் அகராதி, எபிரேயம் - தமிழ் அகராதி; கிரேக்கம் - தமிழ் அகராதி உருவாக்கத்திற்காக மக்கள் கல்வி அறக்கட்டளையின் இயக்குனர் மறை திரு.இராபின்சன் லேவி ஐயா அவர்களுடன் இணைந்து இருபது ஆண்டுகள் தீவிரமாகப் பணியாற்றினார். ஈரோடு மகளிர் கலை, அறிவியல் கல்லூரி, திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை, அறிவியல் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி போன்றவற்றில் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

2000இல் மதுரையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். அப்போது வெளிநாட்டவருக்கு தமிழ் கற்பிக்கப் பாட நூல் ஒன்றை உருவாக்கினார். அரவிந்த் கண் மருத்துவமனையில் மொழி பெயர்ப்பாளராகவும் வேற்று மாநிலம் மற்றும் வெளிநாட்டு மருத்துவர்களுக்கு, தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றினார். அப்போது தமிழ் தெரியாத கண் மருத்துவர்களுக்குத் தமிழ் கற்பிக்க Tamil for Non-Tamils என்ற பாட நூலை உருவாக்கினார். இன்றும் அந்தப் பாட நூல் அங்குப் பயன்பாட்டில் உள்ளது. அது போல அங்குச் செவிலியர் பயிற்சி பெறும் இளம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க Easy English என்ற ஆங்கிலப் பாட நூலை உருவாக்கினார். மக்கள் கண்காணிப்பகத்தில் வெளி மாநிலத்தவருக்கு

ஆங்கிலமும் வெளி நாட்டவருக்குத் தமிழும் கற்பித்தார்.

தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்காக சென்ட்டர் ஃபார் லேங்குவேஜ் ஸ்டடீஸ் [Centre for Language Studies] என்ற பெயரில் தனி மையம் ஒன்றை அமைத்து அவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் வந்ததனால் இவர் திமுக, அதிமுக வரலாறு குறித்து அறிந்திருந்தார். குறிப்பாக எம்.ஜி.ஆர். பற்றிய தகவல்களைத் தொகுத்து வைத்திருந்தார். தமிழ்க் கலையும் பண்பாடும் பற்றிக் கற்பிக்கும்போது தமிழ்நாட்டில் மேடைத்தமிழ், மேடை நாடகம், திரைப்படம் ஆகியன அரசியலில் உருவாக்கிய விதம் பற்றியும் விளக்கினார். அப்போது எம்.ஜி.ஆர். அரசியல் தலைவரான விதம் குறித்து மேலும் அறிந்துகொள்வதில் அமெரிக்க மாணவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். அவர்களை எம்.ஜி.ஆர். படங்களைப் பார்க்க திரையரங்குக்கு அழைத்துச் சென்றார். திரை அரங்கில் இரசிகர்கள் காட்டிய ஆர்வமும் ஆர்ப்பரிப்பும் கண்டு கேட்டு வியந்து எம்.ஜி.ஆர். குறித்து சில மாணவர்களும் பேராசிரியை முனைவர் சாரா திக்கி என்பவரும் ஆராய்ச்சி செய்தனர். அவர்களின் ஆர்வம் கண்டு எம்.ஜி.ஆர். தகவல் மையம் ஒன்றைத் தொடங்கி அவர் குறித்த நூல்களையும் அவரது படங்களையும் சேகரித்து வைத்தார். பின்னர் அமெரிக்க மாணவர்கள் இந்தியாவுக்கு வருவது குறைந்ததால் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்பட முடியவில்லை.

எம்.ஜி.ஆர். பற்றி **“ஒப்பனையும் ஒரிஜினலும் எம்.ஜி.ஆர். 100”** என்ற தலைப்பில் விகடன்.காமில்

(காம் இணைய தளத்தில்) முப்பது கட்டுரைகள் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக கனடாவில் இருந்து வரும் www.tamilauthors.com என்ற இணைய இதழில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதினார்.. எம்.ஜி.ஆரின் இரசிகர் மன்றங்களின் தனித்தன்மை குறித்து ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதிவருகிறார். எம்.ஜி.ஆர். பற்றி நூறு நூல்கள் எழுத வேண்டும் என்பது இவர் இலட்சியம். அதில் தற்போது

1. ***வெற்றித்திருமகன் என்ற பெயரில் தொடங்கும் வரிசை நூல்கள் ஆகும்,***
2. ***எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்,***
3. ***சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்),***
4. ***வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட,***
5. ***மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்.,***
6. ***எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி,***
7. ***எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி,***
8. ***ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.,***
9. ***வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – I,***
10. ***நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -I],***
11. ***பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II],***
12. ***இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.,***
13. ***முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்***
14. ***இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.***

15. ***எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு [MGR Science Fiction Films]***

16. ***படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு***

17. ***Unique Fandom of MGR** (எம்.ஜி.ஆர். பற்றிய ஆங்கில நூல்)*

18. *எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம்* (Professional Ethics in MGR Movies)

19. ***எம்.ஜி.ஆர். படத்தில் சண்டைக் காட்சிகளின் சுவாரஸ்யங்கள் - I** ஆகியவை வெளிவந்துள்ளன.*

*தஞ்சையைச் சேர்ந்த தமிழ் இலக்கியச் செம்மல் கவிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களின் பூ மர நிழல், வறட்சியின் பாடல்கள், உன்னொடு உரையாடுதல் காதலின் மொழி, திட்டிவாசல் பெண்ணொருத்தி, மற்றும் தேனடையும் வரலாறு என்ற கவிதை நூல்களை இவர் முறையே **"Shade of the Flowering Tree, Songs of Dryness, Speaking with You, Language of Love, The Flower Moon (A Lady at the little gate) and Honey Hive, Ambrosial Kiss (Editor)",** என்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந் நூல்களைச் சென்னை எமரால்டு பதிப்பகம் வெளியிட்டுள்ளது.*

*தமிழிலக்கியச் செம்மல் கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களின் பூ மர நிழல் மற்றும் திட்டி வாசல் பெண்ணொருத்தியின் தொகுப்புகளில் உள்ளடக்கப் பகுப்பாய்வு மேற்கொண்டு அவற்றைப் **பூ மர நிழலில் களமும் காலமும் மற்றும் கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பியின் பாடுபொருளும் பாசப்பொருளும் [திட்டிவாசல் பெண்ணொருத்தி மட்டும்], என்ற நூல்களையும் '2020 தை மாதத்தில் இன்று'***

கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு, முத்தமிழ் விரும்பியின் கவிதையில் காதல், முத்தமிழ் விரும்பியின் கவித்திறம் *என்ற நூலையும் வெளியிட்டார்.*

பண்பாட்டு ஆய்வு நூல் வரிசை என்ற தலைப்பில் ***பண்பாட்டு நகர்வுகள் [தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு], தேவேந்திரன், பெண் தெய்வ வழிபாடு, மருத நிலப் பெண் தெய்வங்கள்*** *ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டு ளார்.*

சென்னைப் பெருநகராட்சியின் முன்னாள் மேயர் மனித நேயச் செம்மல் சைதை சா. துரைசாமி அவர்களின் சிறப்புத் திட்டங்களும் செயல்பாடுகளும் *என்ற பெயரில் ஒரு நூல் எழுதி வெளியிட்டார். இவர் சத்தியபிரபா என்ற புனைப்பெயரில் எழுதிய சிறுகதைகள்* ***'அமராவதியின் காதல்'*** *என்ற பெயரில் தொகுக்கப்பட்டு அமேசானிலும், அச்சிலும் வெளிவந்தது. நெருஞ்சி இலக்கிய இதழில் இவரது கட்டுரைகள் வருகின்றன. தினகரன் ஜோதிட மலரில் இவர் எழுதிய* ***"என்னோட ராசி நல்ல ராசி"*** *என்ற தொடர் வந்து கொண்டிருக்கின்றது. மாதமிரு முறை வரும் ஆன்மீகம் இதழில் இவரது கட்டுரைகள் தொடர்ந்து வெளிவருகின்றன.*

உள்ளடக்கம்



உழைத்து வாழ வேண்டும்
என்ற எண்ணம் !

1. எம்.ஜி.ஆர். ரசிகையரின் அரசியல் புரட்சி



எம்.ஜி.ஆர் பொதுக் கூட்டங்களில் பேசும்போது என்ன வாழ வைத்த தெய்வங்களாகிய தாய்மார்களே என்று பெண்களை அழைப்பார். அவர் கூட்டத்துக்கு நிறைய பெண்கள் வந்ததற்கு முக்கிய காரணம் அவர் பெண்களை தாயாக மதித்து போற்றினார். அவர்களின் சுக துக்கங்களில் நேரடியாகப் பங்கு கொண்டார். ஆண்களை சார்ந்து வாழ்ந்து அவர்கள் சொல்வதை கேட்டு அதன் வழி நடந்து வந்தவர்களை எம்.ஜி.ஆர் சுயமாக முடிவெடுக்க கூடிய மிகப் பெரிய அரசியல் சக்தியாக மாற்றிக் காட்டினார். தன் படத்தை பார்க்க வரும் தாய்க்கு மகனாகவும் தங்கைக்கு அண்ணனாகவும் ஆதரவற்ற ஏழை பெண் ஒருத்திக்கு வாழ்வில் நம்பிக்கை ஊட்டும் இளைஞனாகவும் ஆடம்பரக்காரியின் ஆணவத்தை ஒடுக்கும் வல்லவனாகவும் நடித்து அவர்களின் மனங்கவர்ந்த நாயகனாக விளங்கி அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டினார். இந்த நம்பிக்கையை அடித்தளமாக கொண்டு அவர் அண்ணா திமுக கட்சி தொடங்கியதும் பெண்களை மிகப் பெரிய அரசியல்

சக்தியாக அவர் மாற்றிக் காட்டினார். இது எம்.ஜி.ஆர் திரையிலும் அரசியலிலும் செய்த மாபெரும் புரட்சி ஆகும்.

மாபெரும் அரசியல் சக்தியாக உருவெடுத்த ரசிகைகள் சங்க கால நூலான குறுந்தொகையில் வரும் ஒரு பாடல், வினையே ஆடவர்க்கு உயிரே மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரேஎன்கிறது. இவ்வாறு சங்க காலம் தொட்டு தன் குடும்பக் கடமைகளை மட்டும் நிறைவேற்றி வந்த பெண்களை அரசியல் கட்சிக் கூட்டங்களுக்கு வரவழைத்தவர் எம்.ஜி.ஆர். கம்யூனிஸ்ட் கூட்டங்களுக்கு பெண்கள் வருகையும் அவர்களின் பங்கேற்பும்கேரளா போன்ற மாநிலங்களில் ஓரளவு இருந்த போதும் அது தமிழகத்தில் அண்ணா திமுக கட்சிக்கு இருப்பது போல வலிமையாக இல்லை. மேலும் அண்ணா திமுக தொடங்கப்பட்ட பிறகு தமிழகத்திலும் கம்யூனிஸ் ஆதரவாளர்கள் பலர் அண்ணா திமுக ஆதரவாளர்கள் ஆகிவிட்டனர். எம்.ஜி.ஆர் புது கட்சி தொடங்கியதும் அண்ணா திமுக கட்சி பொதுக் கூட்டங்களில் பெண்கள் திரளாக பங்கு பெறுவதை மற்ற கட்சியினர் வியப்போடு நோக்கினர். அரசியல் என்பது ஆண்களுக்கு உரியது என்ற நிலையை மாற்றியவர் எம்.ஜி.ஆர். அரசியலில் அடித்தள மக்களின் ஈடுபாடு குறிப்பாக பெண்களின் ஈடுபாடு மிகவும் முக்கியம் என்ற நிலை எம்.ஜி.ஆரால் உருவானது என்று உறுதியாகச் சொல்ல முடியும். அண்ணா திமுக கூட்டங்களுக்கு வந்த பெண்கள் எம்.ஜி.ஆரை ஒரு சினிமா நடிகராக மட்டும் நினைத்து நேரில் பார்த்து ரசிக்க வரவில்லை. அவருடைய பேச்சைக்

கேட்கவும் ஆவலாகக் கூடினர். கூட்டம் நடக்கும் இடத்தில் மேடைக்கு முன்பு பெண்களுக்கென இடம் ஒதுக்கப்படுவது மரபாயிற்று.

எம்.ஜி.ஆரின் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்து அரசியல் கொள்கைகளில் பற்றுக் கொண்டு அவருடைய சொற்களில் உண்மை இருப்பதாகக் கருதி அவருடைய சின்னத்தில் தன் முத்திரையை பதிப்பதில் பெண்கள் உறுதியாக இருந்தனர். இதனால் 1977இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. மக்களின் ஏகோபித்த ஆதரவால் அவரும் தன் ஆயுள் காலம் முழுக்க பத்தாண்டு காலம் தொடர்ந்து [1977 – 1987] தோல்வியே காணாத முதலமைச்சராக இருந்து வரலாற்றுச் சாதனை படைத்தார்.

சினிமா கவர்ச்சியா?

மக்களிடம் குறிப்பாக பெண்களிடம் எம்ஜிஆருக்கு கிடைத்த வரவேற்பை ஆரம்பகாலத்தில் சினிமா கவர்ச்சி என்று தவறாக புரிந்து கொண்ட அரசியல்வாதிகளும் பத்திரிகை நிரூபர்களும் காலப்போக்கில் தன் கருத்தை மாற்றிக் கொண்டனர். கருணாநிதி எம் ஜி ஆரை கட்சியை விட்டு வெளியேற்றியதும் கண்ணதாசனிடம் தொலைபேசியில் சொல்கிறார். அதற்கு கண்ணதாசன் “பிரச்னை வருமே”என்றதும் கருணாநிதி “என்ன ஒரு பத்து பேர் கத்துவானுங்க”என்றார். அவர் தவறாக கணித்துவிட்டார். எம்.ஜி.ஆர் இப்பூவுலகை விட்டு மறையும் வரை கருணாநிதியை தலையெடுக்க விடவில்லை. தொடர்ந்து மூன்று முறை திமுகவை தோற்கடித்தார். ஆனால்

எம்.ஜி.ஆர் எப்போதும் மக்களைப் பற்றி சரியாகவே கணித்து வைத்திருந்தார். மலைக்கள்ளன் படம் முதல் எம்.ஜி.ஆருக்கு பெண்களின் ஆதரவு குழந்தைகளின் ஆதரவு இளைஞர்களின் ஆதரவு பெருகத் தொடங்கியது. தனக்கு மக்கள் ஆதரவு முழுமையாக இருப்பதையும் தன்னை எந்த நிலையிலும் இளைஞர், தாய்மார், குழந்தைகள் என்ற மூன்று பிரிவினரும் கைவிட மாட்டார்கள் என்பதையும் எம்.ஜி.ஆர் ஆழமாக நம்பினார்.

வாழவைத்த தெய்வங்களாகிய தாய்மார்களே

பெண்கள் மீது எம்.ஜி.ஆருக்கு இருந்த நம்பிக்கையே அவர் பொதுக் கூட்டங்களில் பேசும்போது "என்னை வாழ வைத்த தெய்வங்களாகிய தாய்மார்களே" என்று அவர்களை அழைக்க காரணமாக இருந்தது. பெண்கள் தன் வாக்கை நம்புகின்றனர். தனக்கு வாக்களிக்க முன் வருகின்றனர். அவ்வாறு



வாக்களிக்க முன் வரும் போது தங்கள் வீட்டாரின் எதிர்ப்புகளையும் துணிச்சலோடுசமாளிக்கின்றனர் என்பனவற்றை எம்.ஜி.ஆர் தெளிவாக உணர்ந்திருந்ததால் ஒரு பொதுக்கூட்டத்தில் அவர் பேசும்போது "பெண்கள் தங்கள் வீட்டில் கணவன்மார் சொல்வதைக் கூட கேட்க மாட்டார்கள்; ஆனால் நான் சொல்வதைக் கேட்பார்கள்" என்று ஆணித்தரமாகவும் பகிரங்கமாகவும் தெரிவித்தார். இந்த கருத்து அரசியல் சம்பந்தப்பட்டது மட்டுமே தவிர தனிநபர் வாழ்க்கை சம்பந்தப்பட்டது அல்ல. எந்த அரசியல் கட்சிக்கு வாக்களிப்பது என்ற கேள்வி எழும்போது பெண்கள் தங்கள் கணவன்மார் காங்கிரஸ் அல்லது அதிமுக கட்சிகளுக்கு வாக்களிக்கும்படி வற்புறுத்திக் கூறினால் அவர்களின் பேச்சைக் கேட்க மாட்டார்கள்; அதற்கு ஒப்புக் கொள்ள மாட்டார்கள்என்பது எம்.ஜி.ஆரின் உறுதியான கருத்தும் நம்பிக்கையும் ஆகும் அந்த நம்பிக்கை பலித்தது.



எம்.ஜி.ஆருடைய வேண்டுகோளை ஏற்று அவருடையான கட்சியான அண்ணா திமுக கட்சிக்கு அதற்குரிய இரட்டை இலை சின்னத்தில் வாக்களிக்கவே பெண்கள் ஒப்புக்கொள்வர் என்ற எம்.ஜி.ஆரின் நம்பிக்கை வீண் போகவில்லை. எம்.ஜி.ஆரும் பெண்களும் ஒருவர் மீது ஒருவர் கொண்டிருந்த பரஸ்பர நம்பிக்கை தமிழகத்தில் 1977இல் மிகப்பெரிய ஆட்சி மாற்றத்தை கொண்டு வந்தது. எம்.ஜி.ஆரை அரசியலில் வாழவைத்தவர்கள் தாய்மார்கள் தான் என்பதால் அவர் அவர்களை வாழவைத்த தெய்வங்கள் என அழைத்ததும் பொருத்தமாயிற்று.

பத்திரிகைகள் ஏமாற்றம்

ஒருமுறை தினமணியின் மூத்த நிருபர் ஒருவர் மதுரை காமராசர் பல்கலைக்கழக தொடர்பியல் துறை கருத்தரங்கு ஒன்றில் பேசும்போது 1977இல் தேர்தலுக்கு முந்தைய கருத்துக் கணிப்பை நிகழ்த்துவதற்காக ஒரு நிருபர் குழு தமிழகத்தின் பல்வேறு நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் பட்டி தொட்டிகளுக்கும் சென்று ஆய்வு நடத்திய நிகழ்வு பற்றிக் குறிப்பிட்டார். அந்த ஆய்வில் திமுக கட்சிக்கு வெற்றி வாய்ப்பு இருப்பதாக அவர்கள் அறிந்து வந்து தலைமை அலுவலகத்திற்கு தெரிவித்து கருத்துக்கணிப்பு கட்டுரையும் வெளியாகிவிட்டது. தேர்தல் முடிவுகள் வெளிவந்ததும் இந்தக் கருத்துக் கணிப்பு பொய்யாகிவிட்டது. எங்கே தவறு நடந்தது? என்று ஆராயும் போது கருத்துக் கணிப்பு நடத்தியவர்கள் எவரும் “பெண்களிடம் போய் நீங்கள் எந்த கட்சிக்கு வாக்களிப்பீர்கள் என்று

கேட்கவில்லை.அவர்களுக்கென்று என்ன தனி அபிப்பிராயம் இருக்கப்போகிறது. அவர்களின் தந்தை அல்லது கணவன் சொல்லும் கட்சிக்கு தானே வாக்களிப்பார்கள்”என்று இவர்களாகவே முடிவு செய்து அவர்களை கருத்துக் கணிப்பில் சேர்க்காமல் விலக்கி வைத்துவிட்டனர். இந்த உண்மை தெரிய வந்த போது பெண்கள் அந்த தேர்தலில் ஆட்சி மாற்றத்தை உருவாக்கும் மாபெரும் சக்தியாக உருவெடுத்திருப்பதை கண்டறிந்தனர்.

எம்.ஜி.ஆர் தொடங்கிய அண்ணா திமுக கட்சிக்கு வாக்களிக்க பெண்கள் பெருவாரியாக முடிவு செய்திருந்தனர். கருத்து கணிப்பு நடத்தியோர் அவர்களிடம் கேட்டிருந்தால் அவர்கள் பதில் சொல்லியிருக்கக்கூடும். பத்திரிகையாளர்கள் எம்.ஜி.ஆரை பற்றியும் சரியாகக் கணிக்கவில்லை, அவருக்கிருந்த பெண்கள் ஆதரவு குறித்தும் சரியாக அறிந்துகொள்ளவில்லை. ஆனால் பெண்கள் தங்கள் மனசாட்சிப்படி இரட்டை இலைக்கு வாக்கு அளித்து எம்.ஜி.ஆரை முதலமைச்சராகப் பதவியில் அமர்த்தி விட்டனர். அதன் பிறகு பத்திரிகைகள் பெண்களின் வாக்குரிமைக்கு முக்கியத்துவமும் உண்டு என்று உணர்ந்து கொண்டனர். மற்ற அரசியல் கட்சிகளும் பெண்களின் ஆதரவைப் பெற நாம் தனியாக முயல வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர்.

அரசியல் விழிப்புணர்ச்சி

அண்ணா திமுகவின் தோற்றத்திற்கு பிறகு பெண்களிடம் மிகப்பெரிய அளவில் அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. பெண்களுக்கென்று தனி கருத்து உண்டு; அவர்களுக்கும் அரசியலில் பங்கு



உண்டு; ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவதில் அவர்களும் முயற்சி மேற்கொள்வர்; அவர்களை இரண்டாம் தரக் குடிமக்களாக விலக்கி விட இயலாது; பெண்கள் நினைத்தால் அதை நடத்திக் காட்ட முடியும் என்ற கருத்துக்களை எல்லாம் எம்.ஜி.ஆர் உணர்ந்து இருந்ததைப் போல மற்ற கட்சிகளும் பத்திரிகைகளும் 1977இல் நடந்த தேர்தலுக்குப் பிறகு அறிந்து கொண்டன.

திரைப் பிம்பத்தின் மாயத் தோற்றம்அல்ல

திரைப்படங்களில் தாய் சொல்லைத் தட்டாத தாயை காத்த தனயனாக; தாய்க்கு தலைமகனாக, தாயில்லாமல் நானில்லை என்று உணர்ந்த எளியவனாக பெண்களை ஆபத்திலிருந்து காக்கும் ஆபத்பாந்தவனாக ஏழைகளை இரட்சிக்கும் அனாதை ரட்சகனாக ஒரு பிம்பத்தை உருவாக்கி நடித்து வந்த எம்.ஜி.ஆர் அந்த பிம்பத்தின் மாயத் தோற்றத்தால் மட்டுமே பெண்களின் உள்ளங்களை கவரவில்லை. சினிமா கவர்ச்சியை மட்டும் கொண்டு எம்.ஜி.ஆர் மகளிரின் வாக்குகளை அள்ளவில்லை. சினிமா கவர்ச்சி என்பது அவருக்கு ஒரு அறிமுகமாக அமைந்தது; ஆனால் அவர் செய்த பல மனிதநேய செயற்பாடுகளும் ஆபத்துக்காலத்தில் உடனுக்குடன் வந்து செய்த

உதவிகளும் ஏழை எளிய மக்களின் மனதில் ஆழமாக அவருக்கு ஓர் இடத்தை உருவாக்கி தந்தது.

எம்.ஜி.ஆர். நிஜ வாழ்க்கையில் ஏழைகளுக்கு உதவுகிறார் என்ற உண்மை சினிமா கவர்ச்சியையும் மீறி அவர் அன்புள்ளம் கொண்டவர், கருணை நிரம்பியவர் என்ற எண்ணங்களை பெண்கள் மனதில் விதைத்தன. பொதுமக்களிடம் அன்பு, கருணை, இரக்கம், வள்ளல் தன்மை போன்ற பண்புகள் எம்.ஜி.ஆருக்கு இருப்பதை உறுதியாக நம்பிய காரணத்தினால் பெண்களின் ஆதரவு அவருக்கு இறுதிவரை இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இரவு காட்சிக்குப் பிறகும் பாதுகாப்பு

திரைப்படங்களில் பெண்களுக்கு ஆதரவாக இருந்த எம்.ஜி.ஆர் நிஜ வாழ்விலும் பெண்களுக்கு ஒரு துயரம் என்றால் அவர்களுக்கு உதவி செய்வதில் முதல் ஆளாக நின்றார். இரவு காட்சிகளுக்கு பெண்கள் வருவதுண்டு. உழைக்கும் மகளிர் பகலெல்லாம் வேலை செய்துவிட்டு மாலை வேளையில் வீட்டிற்கு வந்து உணவு சமைத்து வீட்டினருக்கு பரிமாறி விட்டு அதன் பிறகு இரண்டாம் காட்சிக்கு, அதாவது இரவுக்காட்சிக்கு திரைப்படம் பார்க்க வருவர். ஒரு தெருவில் வாழும் நான்கைந்து பெண்கள் சேர்ந்து வீட்டிற்கு அருகிலுள்ள திரையரங்குக்கு இரவு 10 மணிக்கு படம் பார்க்க வருவார்கள். இரண்டு இரண்டரை மணிக்கு படம் முடிந்து அவர்கள் நடந்து போகும்போது சில இளைஞர்கள் அவர்களிடம் முறைதவறி பேசவும் நடக்கவும் முயலலாம் அல்லது கருதலாம். இவ்வாறு அவர்களுக்கு இடையூறு

ஏற்பட்டால் அவர்கள் படம் பார்க்க வருவது நின்றுவிடும். வீட்டில் இருப்பவர்களும் பெரியவர்களும் இந்த பெண்களை திரைப்படங்களுக்கு போக விடமாட்டார்கள். பெண்களுக்கு இருக்கும் ஒரே பொழுது போக்கான திரைப்படத்திற்கு தடை வந்துவிடும். எம்.ஜி.ஆர் இதற்கு ஒரு தீர்வு கண்டுபிடித்தார்.

ஓமப்பொடி பிரசாத் சிங், என். எஸ். ராமதாஸ், முசிறிப்புத்தன் போன்றோரைக் கொண்டு ஒரு மகளிர் காவல் படை அமைத்தார். இரவு காட்சிகளுக்கு வந்து வீட்டுக்கு திரும்பும் பெண்களுக்கு இந்த மகளிர் காவல் படையைச் சேர்ந்த எம்.ஜி.ஆர். ரசிகர்கள் காவலாக இருந்து பணியாற்ற வேண்டும். இந்தப் பெண்கள் முன்னே நடந்து செல்லும் போது அவர்களுக்கு சில அடி தூரத்தில் இந்த காவல் படை வீரர்களும் நடந்து சென்று அவர்கள் வீடு சென்று முடியும்வரை பாதுகாப்பாக தொடர்ந்து செல்ல வேண்டும். எவராலும் அவர்களுக்கு தொந்தரவு ஏற்படாமல் அப்பெண்களைப் பாதுகாக்க வேண்டும்.எம்.ஜி.ஆர் தான் நடிக்கின்ற காலத்திலேயே பெண்களின் பாதுகாப்பு குறித்து அதிகமும் கவலைப்பட்டார் அக்கறை காட்டினார். பெண்கள் நல்ல முறையில் வாழ வேண்டும் பாதுகாப்பாக இருக்க வேண்டும் பண்போடு நடந்து கொள்ள வேண்டும் என்பதில் அவர் மிகுந்த அக்கறை காட்டி வந்தார்.

ஆண்களுக்கு மட்டும் ஒரு ரகசியம்

ஒருமுறை அவருடைய பொதுக்கூட்டத்திற்கு பெண்கள் கூட்டமும் ஆண்கள் கூட்டத்திற்கு சரி

நிகராக அதிக அளவில் சேர்ந்திருந்தது. மேடைக்கு முன்னால் பெண்களும் அதற்குப் பின்னால் ஆண்களையும் உட்கார வைப்பது மரபு. கண்ணுக்கெட்டிய வரை பெண்கள் கூட்டம் நிறைந்திருந்ததைப் பார்த்த எம்.ஜி.ஆர் தான் பேசி முடித்ததும் ஆண்களைப் பார்த்து “பெண்கள் போகட்டும்; ஆண்கள் மட்டும் கொஞ்சம் இருங்கள்; உங்களிடம் நான் ஒரு விஷயம் தனியாக பேசவேண்டும்”என்றார். ஆண்கள் கூட்டம் அப்படியே அமர்ந்து விட்டது. நம்மிடம் தனியாக என்ன பேசப்போகிறார். அந்த விஷயம் என்னவாக இருக்கும், என்று அவர்கள் தங்களுக்குள் பேசி கொண்டு இருந்த இடத்தை விட்டு அசையாமல் இருந்தனர் பெண்கள் கூட்டம் மெல்ல மெல்ல கலைந்து விட்டது.

பெண்கள் கூட்டம் அந்த இடத்தை விட்டு சற்று தூரம் போகும் வரை அமைதியாக மேடையில் அமர்ந்திருந்த எம்.ஜி.ஆர். அதன்பிறகு மைக் முன்னே வந்து நின்றார். பெண்கள் செல்வதற்கு வசதியாக வழி கிடைக்க வேண்டும் என்பதற்காக தான் உங்களை சற்று நேரம் இருக்க சொன்னேன். அவர்கள் சென்று விட்டார்கள். இனி நீங்கள் அமைதியாக செல்லலாம் என்றனர். கூட்டத்தினர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அவருடைய சாதுர்யத்தை ஆண்கள்வெகுவாக ரசித்தனர்.பெண்களிடம் எம்.ஜி.ஆர் கொண்டிருந்த அக்கறை குறித்து அவர்களின் பாதுகாப்புக்காக அவர் மேற்கொண்ட உத்தி குறித்து அவர்கள் தங்களுக்குள் பேசி சிரித்து மகிழ்ந்தனர். எம்.ஜி.ஆரின் சாதுரியம் அவர்களுக்கு வியப்பை அளித்தது. ஆண்களுக்கு அவர்மீது மிகுந்த மரியாதையைஏற்படுத்தியது.

திரையரங்கில் பெண்களுக்கு பாதுகாப்பு

எம்.ஜி.ஆர் சினிமாவில் நடிக்கும்போது அவருடைய படங்களுக்கு பெண்கள் அதிக அளவில் வருவது கண்டு அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டியது அந்த திரையரங்குகளின் முக்கியக் கடமை என்று திரையரங்க உரிமையாளர்களிடம் அவர் சொல்லியிருந்தார். பெண்களுக்கும் தன்னுடைய ரசிகர்களுக்கும் திரைப்படம் பார்க்க வரும்போது எந்த தொந்தரவும் இருக்கக்கூடாது; அதற்கு ஏற்றாற் போல அவர்களை வரிசையாக நிற்க வைத்து முறையாக டிக்கெட் கொடுத்து அவர்களை படம் பார்க்க வைத்து பத்திரமாக அனுப்பி வைக்க வேண்டும் என்று அவர் கட்டளை இட்டிருந்தார். இவ்வாறு பாதுகாப்பாகச் செயல்படும் திரையரங்குகளுக்கு மட்டுமே தன்னுடைய படம் கொடுக்கப்படும் என்று அவர் திரையரங்க உரிமையாளர்களிடம் தெரிவித்திருந்தார். எனவே, லாபம் கருதி படத்தை எடுக்கும் உரிமையாளர்கள் அதற்குரிய பொறுப்பையும் உணர்ந்து படம் பார்க்க வருகின்றவர்களுக்கு பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று செயல்பட்டனர்.

காவல்காரன் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர் குண்டடிபட்டு மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பி குரல் பயிற்சி எடுத்துக்கொண்ட பிறகு காவல்காரன் படத்தில் தொடர்ந்து நடித்தார். ஏற்கனவே பாதிப் படம் முடிந்த நிலையில் அவர் குண்டடிபட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சை முடிந்த பிறகு வந்து மீதி படத்தை முடித்துக் கொடுத்தார். இதற்கிடையே தமிழகத்தில் வாழ்ந்த தாய்மார்களும் இளம்

பெண்களும் எம்.ஜி.ஆருக்கு என்ன ஆயிற்றோ? எம்.ஜி.ஆர் பிழைத்து வருவாரோ என்று கவலைப்பட்டனர். ஏனென்றால் எம்.ஜி.ஆரின் எதிரணியினர் இனி அவரால் நடிக்க முடியாது; அவரால் பேச முடியாது; என்று பொய்ப் பிரச்சாரம் செய்து வந்தனர். இவர்களின் பேச்சை கேட்ட ரசிகைகள் மிகவும் கவலைப்பட்டனர். இச்சூழ்நிலையில் காவல்காரன் படம் திரைக்கு வந்தது. திரை அரங்கில் பெண்கள் கூட்டம் அலைமோதியது.

காவல்காரன் படத்தில் எம்.ஜி.ஆருக்கு ர ட ல போன்ற ஒலிகளை உச்சரிக்க சிரமப்படுவது தெரிந்தது. இருந்தாலும் அவரது ரசிகர்கள் அதை ஒரு குறையாகக் கருதவில்லை. குழந்தையின் மழலை போல ரசித்தனர். பெற்ற தாய் தன் குழந்தையின் குறையை பெரிதாகக் கருதுவாரா. அது போல அவரது உச்சரிப்பு குறைபாடு ஒரு குறையாகவே தோன்றவில்லை. பயில்வான் போல இருந்த எம்.ஜி.ஆர். காவல்காரன் படத்தில் உடல் மெலிந்து இருபத்தைந்து வாலிபன் போல காட்சியளித்தார். ஜெயலலிதா அவருக்கு பொருத்தமான ஜோடியாக தோன்றினார். எம்.ஜி.ஆர். நன்றாக பேசுகிறார் பாடுகிறார் ஜெயலலிதாவை திருமணம் செய்து குழந்தை பெறுகிற காட்சிகள் எல்லாம் வருகின்றன என்பது தெரிந்ததும் பெண்கள் ஆரவாரமாக இந்த படத்திற்கு வரத்தொடங்கினர்.

அடங்கொப்புரான சத்தியமாநான் காவல்காரன்
நீ ஒப்புக்கொள்ள மறுத்தாலும்நான் காவல்காரன்

என்ற பல்லவியுடன் தொடங்கும் பாடலில் எம்.ஜி.ஆர்.

என் இல்லம் புகுந்தாலும்
உள்ளம் கவர்ந்தாலும்
நான்தான் காவலடி

என்று ஜெயலலிதாவை பார்த்து பாடும் வரிகள் பெண்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றன. பெண்களின் கூட்டம் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போவதைக் கண்ட திரையரங்க உரிமையாளர்கள் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க சிரமப்பட்டனர். என்ன செய்வது என்று கவலைப்பட்டனர். இதை கேள்விப்பட்ட எம்ஜிஆர் பெண்களுக்காக தனி காட்சி நடத்தலாம் என்று ஆலோசனை தெரிவித்தார்.

காவல்காரன் படத்திற்கு பெண்களுக்காக தனி காட்சிகள் நடைபெற்றன. தன் பிள்ளை குண்டடிபட்டு உயிரோடு திரும்பி பழையபடி தன் தொழிலை நடிப்பை தொடங்கிவிட்டான் என்பதை காணவும் கேட்கவும் தாய்மார் கூட்டம் திரண்டது. இளம் ரசிகைகள் எம்.ஜி.ஆரின் கட்டுடலையும் ஜெயலலிதாவுடன் பாடும் ஜோடிப் பாட்டுக்களையும் இருவரும் சேர்ந்து குடும்பம் நட்ததும் அழகையும்‘‘காது கொடுத்து கேட்டேன் ஆஹா குவா குவா சத்தம்’’பாட்டையும் கண்டு ரசிக்கக் கூடினர். இந்தப் பாட்டில் கருவுற்ற பெண்ணின் கால மாற்றங்களும் உடல் வேதனைகளும் அழகாக எடுத்துசொல்லப்பட்டு அவற்றை எம்.ஜி.ஆர் ஒரு பெண்ணாக தன்னை பாவித்து நடித்துக் காட்டியதை பெண்கள் வெகுவாக

ரசித்தனர். பெண்ணுக்கு பெண்ணாகவும் ஆணுக்கு ஆணாகவும் அந்த படத்தில் நடித்த எம்.ஜி.ஆர் ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தார். ஆணுக்கு ஆண் ஆசைப்படும் பேரழகன் எம்.ஜி.ஆர் என்று இன்றைக்கும் கூட்டங்களில் பேசப்படும் அளவுக்கு எம்.ஜி.ஆர். ஆண்களையும் கவர்ந்திருந்தார். இதனால் ஆண்கள் கூட்டமும் அலை மோதியது. ஆண்கள் உணர்ச்சி பிழம்பாக இருந்தனர். எம்.ஜி.ஆர் பிழைத்து வந்தது கண்டு மகிழ்ச்சி பெருக்கில் உணர்ச்சி வசப்பட்டு கோஷங்களை விண்ணதிர முழங்கினர். எம்.ஜி.ஆர் படம் பார்க்க வரும் ரசிகர்கள் இன்றும் பத்து பதினைந்து நிமிடங்களாவது வாழ்த்து கோஷமிடுவது மரபு. ரசிகர்களின் ஆர்ப்பாட்டம் அதிகமானதால் பெண்களுக்கு பிரத்யேகக் காட்சிகள் நடந்தன. அப்போது ஆண்களுக்கு அனுமதி இல்லை.

பெண்களும் திரும்பத்திரும்ப வந்து காவல்காரன் படத்தைநிம்மதியாக கண்டு ரசித்தனர்.

அனாதரட்சகனாக எம்.ஜி.ஆர்.

பெண்கள் தன் மீது கொண்டிருந்த அன்பையும் தன் கட்சிக்கு அளித்து வந்த ஆதரவையும் அறிந்து கொண்ட எம்.ஜி.ஆர். தான் முதலமைச்சரானதும் அவர்களுக்கு ஒரு தலைவராக ஒரு ரட்சகராக உதவ வேண்டும் என்ற எண்ணத்தில் குழந்தைகளுக்கு சத்துணவு திட்டம் தொடங்கப்பட்ட போது பெண்களை மட்டும் அத்திட்டத்தி பணிக்கு அமர்த்தினார். கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு, விதவைகளுக்கு முதிர்கன்னிகளுக்கு என ஆதரவற்ற பெண்களுக்கு சத்துணவு டீச்சர்

மற்றும் ஆயா வேலைகளில் முன்னுரிமை அளித்தார். இந்த பணிகள் வழங்கப்பட்டபோது தாய் உள்ளம் கொண்டவர்களாக இருப்பவர்களால் மட்டுமே நல்ல உணவு பொருட்களை வாங்கி நல்ல முறையில் சமைத்து அவற்றை அன்போடு பரிமாற முடியும் என்று நம்பிய எம்.ஜி.ஆர் பெண்களுக்கு மட்டும் இந்த வாய்ப்பை அளித்தார். இத்திட்டத்தால் ஒரே நாளில் சுமார் பத்தாயிரம் பெண்கள் அரசு பணியாளர்கள் ஆயினர். அன்றைய காலகட்டத்தில் இவர்களுக்கு அரசு சலுகைகள் எதுவும் கிடைக்காவிட்டாலும், பின்னர் மெல்ல மெல்ல இவர்கள் அரசு பணியாளர்களுக்குரிய சலுகைகளை, நன்மைகளைப் பெற்றனர்.

ஆதரவற்ற பெண்களுக்கு வேலை அளித்ததேன்?

சத்துணவு திட்டம் அரசு பள்ளிகளில் மட்டுமல்லாமல் அரசு உதவி பெறும் அனைத்து பள்ளிகளிலும் கிறிஸ்தவர்கள் போன்ற சிறுபான்மையர் நடத்தி வந்த பள்ளிகளிலும் தொடங்கப்பட்டது. இதனால் அதிகளவில் மாணவர்கள் பயன்பெற்றனர். தாய்மார் நிம்மதி அடைந்தனர். வேலையில்லாத இளைஞர்களுக்கு இந்த வேலைகளை கொடுக்காமல் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற பெண்கள், விதவைகள் என வாழ்க்கையில் நிராதரவாக இருக்கும் பெண்களுக்கு எம்.ஜி.ஆர். இந்த சத்துணவு தொடர்பான வேலைகளை ஏன் வழங்கினார்? இப்பணி அவர்களுக்கு ஒரு பாதுகாப்பை அளிக்கும்; அப்பெண்களின் பொருளாதாரத்தை உயர்த்தும்;

அவர்களுக்கு வாழ்வில் நம்பிக்கை அளிக்கும். அவர்களின் பிள்ளைகளை ஓரளவுக்கு நல்ல முறையில் வளர்க்க அவர்களுக்கு ஊக்கமாக அமையும். ஆக ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல இந்த சத்துணவுத் திட்டத்தின் மூலம் ஆதரவற்ற பெண்களையும் பள்ளிக்கூடத்தில் படிக்கும் குழந்தைகளையும் ஒரு சேர உணவளித்து எம்.ஜி.ஆர். அவர்களுக்கு வாழ்வில் ஆக்கமும் ஊக்கமும் அளித்தார்.

அரசியல் புரட்சியாக மாறிய கடமை உணர்ச்சி

சத்துணவு திட்டத்தில் மதிய உணவு சாப்பிட்ட பிள்ளைகள் பலர் இன்றும் நன்றியுணர்வுடன் எம்.ஜி.ஆருக்கு ஆதரவாக இருக்கின்றனர். எம்.ஜி.ஆரின் ரசிகைகள் பலர் அடித்தள மக்கள் பிரிவினர் என்பதால் இவர்களுக்கு தன்னாலான உதவிகளைச் செய்வதை எம்.ஜி.ஆர். தன் கடமையாகக் கருதினார். பெண்களும் எம்.ஜி.ஆருக்கு ஆதரவாக இருப்பதை அவர் கட்சிக்கு வாக்களிப்பதை தன் கடமையாகக் கருதினர். எம்.ஜி.ஆரும் அவரது ரசிகைகளாக இருந்த தாய்மாரும் அல்லது பெண்களும் பரஸ்பரம் கடமை உணர்ச்சியுடன் செயல்பட்டனர். இந்த கடமை உணர்ச்சி தமிழகத்தில் அரசியலில் மாபெரும் புரட்சியாக மாறியது. நடிகன் நாடாள முடியுமா என்று கேட்ட அரசியல் தலைவர்களுக்கு பதிலடி கொடுத்தது. அரசியலில் உலக சாதனை படைத்த மாபெரும் மனிதராக தலைவராக மனித நேயராக எம்.ஜி.ஆரை உயர்த்தியது.



2. தாய்க்கு தலைமகன் எம்.ஜி.ஆர்.



உலகமெங்கும் பரவியிருக்கும் தமிழினத் தாய்மார்கள் தங்களின் தலைப் பிள்ளையாக எம்.ஜி.ஆரை கருதுவதற்கு பல காரணங்கள் உண்டு. எம்.ஜி.ஆர் தன் தாயைத் தெய்வமாக மதித்தவர்; தன் தாய்க்கு ஒரு கோயிலை எழுப்பி தினமும் வீட்டை விட்டு கிளம்பும் போது அந்தக் கோயிலின் வாசலில் சில நிமிடம் நின்று தன் தாயை வணங்கி விட்டுத்தான் அவர் தன் வேலைகளை கவனிக்க செல்வார்.

திமுகவும் அண்ணா திமுகவும் ஒன்றிணைய முயற்சிகள் எடுக்கப்பட்டபோது திடீரென்று அதனை மறுத்த எம்.ஜி.ஆர் தன் தாய் கனவில் வந்து திமுகவுடன் சேர வேண்டாம் என்று தனக்கு உத்தரவிட்டதாக பொதுக் கூட்ட மேடையில் அறிவித்தார். இதைப்போலவே ஜெயலலிதா அண்ணா திமுகவில் பல இன்னல்களை அனுபவித்த போது எந்தச் சூழ்நிலையிலும் கட்சியை விட்டு விலகக் கூடாது என்று தன் தாயின் படத்தின் மீது

எம்.ஜி.ஆர் தன்னிடம் சத்தியம் வாங்கியதாகவும் அதனால் கட்சியில் தொடர்ந்து இருப்பதாகவும் ஜெயலலிதா ஒரு முறை தெரிவித்திருந்தார்.

எம்.ஜி.ஆர் தன் தாயைத் தெய்வமாக மதிப்பதை உண்மை என உணர்ந்த தமிழ் மக்கள் அவர் தனிக் கட்சி ஆரம்பித்த பிறகு அவருக்கு ஆதரவு அளிக்கும் விதமாக தங்களின் பெண் குழந்தைகளுக்கு எம்.ஜி.ஆரின் தாயார் பெயரை அதிக அளவில் சூட்டினர். 1972க்குப்பிறகு பிறந்தபெண் குழந்தைகளுக்கு சத்தியா, சத்தியப் பிரியா, சத்தியலட்சுமி என்ற பெயர்கள் சூட்டப்பட்டு இருப்பது ஆவணங்களில் காணப்படும் உண்மையாகும்.

எம்.ஜி.ஆரின் தாய்ப்பற்றை உணர்ந்த தமிழ் இன மக்கள் தமிழின தாய்மார் அவர் தன் வயிற்றில் பிறந்திருக்கக் கூடாதா என்று ஏங்கி அவரை தனது தலைமகனாக போற்றினர். நீரும் நெருப்பும் படத்தில் ‘‘கடவுள் வாழ்த்து பாடும் இளம் காலை நேரக் காற்று’’ எனத் தொடங்கும் பாடலில் முதல் பல்லவியாக இடம்பெற்றிருக்கும் வரிகள் எம்.ஜி.ஆரின் தாயை தெய்வமாக போற்றி வணங்கும் கொள்கையைப்பற்றியதாகும்.

தாயின் வடிவில் வந்து
என் தெய்வம் கண்ணில் தெரியும் அவள்
தாள் பணிந்து எழுந்தால்
நம் தொழிலில் மேன்மை விளங்கும்

என்ற இந்த வரிகள் வெறும் திரைக்காகப் பாடப்பட்டவை அல்ல. தாய் வழிபாடு என்பது அவருடைய வாழ்வின் அன்றாட நடைமுறையாகும்.

எம்.ஜி.ஆரின் தாய்ப்பற்று கண்டு போற்றிய தமிழினத் தாய்மார் அவரைத் தன் குடும்பத்தில் ஒருவராக கருதி எங்க வீட்டுப்பிள்ளை எம்ஜிஆர் என்று அன்பு பாராட்டினர். மாணிக்கவாசகர் சிவபெருமானைப் பற்றி பாடும்போது ‘‘பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்து’’ இறைவன் தன்னிடம் அன்பு செலுத்துவதாக கூறுவார். தன் குழந்தைக்கு இந்நேரம் பசிக்குமே என்று குழந்தையின் பசியை நினைத்து அதற்கு பாலூட்டுவாள் ஒரு தாய்.

நல்ல தாயின் நல்ல மகனுக்கு உதாரணமாக திகழ்ந்தவர் எம்.ஜி.ஆர். ஒரு தாயின் அனைத்து எதிர்பார்ப்புகளையும் அவர் நிறைவேற்றினார். ஒரு தாயின் எதிர்பார்ப்பு தன் குழந்தை பசியாற வேண்டும்; தன் பிள்ளை நல்லவனாக வளர வேண்டும்; ஊரார் போற்றும் உத்தமனாக திகழவேண்டும்; அவன் வல்லவனாக இருக்க வேண்டும், யாரிடமும் அவன் தோல்வியடையக் கூடாது, அவமானப்படக் கூடாது; அவன் வெற்றித் திருமகனாக விளங்க வேண்டும், தீய பழக்கங்களுக்கு ஆட்படக்கூடாது, பெரியவர்களின் ஆசி பெறுகின்றவனாக அவர்களை மதித்து நடக்கின்றவனாக இருக்க வேண்டும்; பின்வரும் சந்ததியினருக்கு முன்மாதிரியாக திகழ வேண்டும்; இளைஞர்களுக்கு வழிகாட்டும் நல்லவனாக விளங்க வேண்டும்; பெண்களை கண்ணியத்துடன் நோக்கும் சிறந்த பண்புடையவனாக திகழ வேண்டும் என்பவை ஆகும். இவை அனைத்தும் ஒருங்கே பெற்றவர் எம்.ஜி.ஆர் என்பதால் அவர் தமிழினத் தாய்மாரின் இலட்சிய மகனாகத் திகழ்ந்தார். தன்னுடைய மகன்

எம்.ஜி.ஆரை போல இருக்க வேண்டுமென்பது தாய்மாரின் இலட்சியக் கனவாக இருந்தது.

ஒரு தாய் தன் மகனிடம் கொண்டிருக்கும் பொதுவான எதிர்பார்ப்புக் அப்பால் இன்னும் சில உலகப்பூர்வமான விஷயங்களும் உண்டு. அவையாவன, அவன் முறையான வழியில் நிறைய பணம் சம்பாதிக்க வேண்டும்; தன் வாழ்நாளை மகிழ்ச்சியாகக் கழிக்க வேண்டும்; தான் சம்பாதித்த பணத்தை நல்ல முறையில் செலவிட வேண்டும்; ஒரு தாயின் மேற்கூறிய ஆசைகளையும் எதிர்பார்ப்புகளையும் ஒருங்கே நிறைவேற்றியவர் எம்.ஜி.ஆர்.தன் படங்களில் மட்டுமல்ல நிஜ வாழ்விலும் மேற்கூறிய அனைத்துப் பண்புகளும் பெற்றவராக தமிழக தாய்மார்கள் போற்றப்பட்டார்.



எனவே தமிழின தாய்மார்கள் அவர் மீது கொண்டிருந்த அபரிமிதமான ஒருமித்த நம்பிக்கை இன்றளவும் அவருக்கு அழியாப் புகழைப் பெற்றுத் தந்துள்ளது. ஜாதி மத இன பேதமின்றி அவர் மக்களை ஆரம்பம் முதல் இறுதிவரை நேசித்ததால் மக்களும் இன்றும் அவரை அவ்வாறு நேசிக்கின்றனர். அவரை எவரும் ஜாதி மதம் இனம் என்ற குறுகிய வட்டத்துக்குள் சிக்க வைக்கவில்லை அவர் தமிழினத்தாருடன் வாழ்ந்திருந்தாலும் அவர் மனித குலத்தின் பொது சொத்து ஆவார். அவர் இரக்க குணம் கொண்டவராக மனித நேயம் மிக்கவராக இருந்ததால் ஜாதி மதஇனங்களுக்கு அப்பாற்பட்டு அவருடைய உதவிக் கரங்கள் நீண்டன. மனிதன் என்ற ஒரே அடிப்படையில் அவர் மக்களை கவர்ந்தாரே தவிர சாதி இன மத அடையாலங்களால் அவர் ஒருபோதும் ஈர்க்கப்படவில்லை. தாய்மை ஓர் உலக பொதுப் பண்பு அது போல மனித நேயமும் உலக பொதுப் பண்பு எம்.ஜி.ஆரும் ஓர் உலகத் தாய் ஸ்தானத்தில் வைத்து போற்றப்படுகிறார். அவர் தாய்க்கு தலை மகனாக மட்டுமல்ல தாய்மாருக்கெல்லாம் சிறந்த தாயாகவும் வழிகாட்டியாகவும் கூட விளங்கினார். [முந்தைய தொடரில் எம்.ஜி.ஆரின் பிள்ளை வளர்ப்பு முறைகள் பற்றி வாசித்திருப்பீர்கள்].

அவ்வையார் பாடியதுபோல "இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்; பட்டாங்கில் உள்ள படி" என்ற வாக்குக்கேற்ப எம்.ஜி.ஆர் வாழ்ந்து வந்தார். வள்ளுவரது 'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம், உயிரினும் ஓம்பப் படும்' என்ற குறளின் வழியில் அவர் தன் வாழ்க்கையில் உடலை

பேணுவதிலும் மனநலத்தைக் காப்பதிலும் மிகுந்த கட்டுப்பாடுகளை கொண்டு வாழ்ந்து வந்தார். மனம் போன படி நடக்கும் பழக்கம் அவருக்கு என்றும் இருந்ததில்லை. அவர் மட்டுமல்ல அவர் குடும்பத்தில் இருக்கும் அனைவரும் அவர் பின்பற்றி வந்த உடற்பயிற்சியையும் உணவுக் கட்டுப்பாடுகளையும் பின்பற்றினர். தான் மட்டும் நல்லவனாக வல்லவனாக இருந்தால் போதாது தன்னைச் சுற்றி இருப்பவரும் அவ்வாறு இருக்க வேண்டும் என்பதில் எம்.ஜி.ஆர். செலுத்திய அக்கறை அவர் காட்டிய அன்பு தமிழகத் தாய்மார்களின் மனங்களில் பால் வார்க்கும் வகையில் சத்துணவு திட்டத்தையும் பெரிய தனியார் கல்வி நிறுவனங்களில் கூட இலவசக் கல்வியையும் மாணவர்களுக்கு வழங்கியது.

எம்.ஜி.ஆர். நடித்த படங்கள் ஒரு தாய் தன் பிள்ளைக்கு செய்ய வேண்டிய கடமையை செய்தன. அவருடைய படங்கள் குழந்தைகளுக்குப் பாடமாக அமைந்தன. அவர் படம் திரையிடப்படும் திரையரங்குகள் சமுதாயக் கல்வி கூடங்களாக மாறிவிட்டன. ஒரு குழந்தையிடம் திருடக்கூடாது; பொய் சொல்லக்கூடாது; பெரியவர்களை மதிக்க வேண்டும்; பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்று ஒரு தாய் கற்பிக்க வேண்டிய போதனைகளை எல்லாம் அவருடைய படங்கள் பாடல்களாகவும் காட்சிகளாகவும் கற்பித்து சிறுவர்களின் மனதில் பசுமரத்தாணி போல பதிந்து விட்டன. தமிழகத் தாய்மார்களின் பிள்ளை வளர்ப்பு கடமையை எம்.ஜி.ஆர் தனி ஒருவனாக இருந்து தன் படங்கள் மூலமாக நிறைவேற்றினார்.

இன்றைக்கு எம்.ஜி.ஆர். ரசிகர்களாக இருக்கும் பலர் எம்.ஜி.ஆரை தன் வழிகாட்டியாகக் கொண்டு நான் மது அருந்துவதில்லை, சிகரெட் பிடிப்பதில்லை பெற்ற தாயை தெய்வமாகக் கருதி என் வீட்டில் வைத்து பாதுகாக்கின்றேன், கவனிக்கின்றேன் என்று பெருமையோடு கூறுகின்றனர். ஒரு தாய் செய்ய வேண்டிய கடமைகளை எல்லாம் எம்.ஜி.ஆர். செய்த படங்களின் மூலமாக நடித்தும், தன் வாழ்க்கையின் மூலமாக வாழ்ந்தும் காட்டி விட்டார். அவருடைய நடிப்பும் அவருடைய வாழ்க்கையும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து இருந்த காரணத்தால் ஒரு தாயின் ஸ்தானத்தில் இருந்து தன் ரசிகர்களை குழந்தைகளாகக் கருதி அவர்களுக்கு நற்போதனைகளை அவ்வழியில் தானும் வாழ்ந்து காட்டி மக்களுக்கு முன்மாதிரியாக இருந்ததால் அவரை ஒரு தாயாகவோ தாயின் பதிலியாகவோ [substitute of a mother] தமிழினத் தாய்மார் போற்றுகின்றனர்.

எம்.ஜி.ஆரின் படங்கள் தாய்மாரின் ஆதரவு பெற்று அவர்களின் குழந்தைகளின் ஆதரவைப் பெற்றதால் தமிழ் திரையுலகில் அவர் நடித்த காலம் வரை அவரது படங்களே மிகப்பெரிய வசூல் சாதனையை செய்தன. 1977இல் முதலமைச்சர் ஆகும்வரை எம்.ஜி.ஆர். திரையுலகில் ஏக போக சக்கரவர்த்தியாக கோலோச்சி வந்தார். 1977 வரை ஒரு கோடி ரூபாய் வசூல் செய்த படங்கள் மொத்தம் 13.அவற்றில் பிரம்மாண்ட தயாரிப்பான அவ்வையார் மற்றும் சந்திரலேகாவை விலக்கி விட்டால் மீதி 11 படங்களும் எம்.ஜி.ஆர். நடித்த படங்கள் மட்டுமே.

வேறு யார் நடித்த படமும் ஒரு கோடி ரூபாய் வசூல் செய்யவில்லை. தமிழினத் தாய்மார், இளைஞர், அவர்தம் குழந்தைகள் என இந்த முப்பெரும் பிரிவினரின் ஆதரவைப் பெற்ற எம்.ஜி.ஆர். நடித்து கோடிக்கணக்கில் வசூலித்த படங்களின் பட்டியலை காண்போம். இப்பட்டியல் பாக்யா இதழில் வெளியிடப்பட்டதாகும்.

1956இல் மதுரை வீரன் ஒரு கோடியே 10 லட்சம் வசூலித்தது. இப்படம் அவரை வசூல் சக்கரவர்த்தி ஆக்கியது. 1958-ல் நாடோடி மன்னன் ஒரு கோடியே 20 இலட்சம்; 1965ல் எங்க வீட்டுப் பிள்ளை ஒரு கோடியே 35 லட்சம்; 1968இல் குடியிருந்த கோவில் ஒரு கோடி ரூபாய்; 1969இல் அடிமைப்பெண் ஒரு கோடியே 40 லட்சம்; 1970இல் மாட்டுக்கார வேலன் ஒரு கோடியே 35 லட்சம்; 1971 இல் ரிக்ஷாக்காரன் ஒரு கோடியே 40 லட்சம்; 1973 இல் உலகம் சுற்றும் வாலிபன் ஒரு கோடியே 90 லட்சம்; 1974இல் இதயக்கனி ஒரு கோடியே 50 லட்சம்; 1977இல் இன்று போல் என்றும் வாழ்க ஒரு கோடியே 10 லட்சம்; அதே ஆண்டில் வெளிவந்த அவரது மற்றொரு படமான மீனவ நண்பன் ஒரு கோடியே 15 லட்சம் வசூலித்தது. இப்பட்டியல் காட்டும் விவரங்கள் வேறு எவர் நடித்த படங்களும் கோடி ரூபாய் வசூலிக்க வில்லை என்பதை தெளிவுபடுத்துகிறது. மேலும் உலகம் சுற்றும் வாலிபன் படம் மூன்று நான்கு கோடி வசூலித்ததாக கூறுவோரும் உண்டு. ஆனால் ஆதாரப்பூர்வமான ஆவணங்களின்படி மேற்கூறிய வசூல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய பெரும் வெற்றியை தமிழ் திரையுலகில் பெறுவதற்காக

எம்.ஜி.ஆர். தொடர்ந்து எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஏராளம்.

எம்.ஜி.ஆர் பெண்களின் மனம் கோணாதபடி தன் பாத்திரப்படைப்பை அமைத்து கொண்டார். எக்காரணம் கொண்டும் அவர் தவறான பழக்க வழக்கங்களை திரையில் காட்ட வில்லை. பெண்கள் ரசிக்கும் வகையில் மட்டுமே அனைத்து காட்சிகள் அமைக்க பட்டனவே தவிர, அவர்கள் வெறுத்து ஒதுக்கும் வகையிலும் ஆபாசம் எனக் கருதி கண்ணை மூடிக் கொள்ளும் வகையில் அவருடைய படத்தில் எந்தக் காட்சியும் இடம் பெறாது. திரவுபதி, சந்திரமதி, நல்ல தங்காள் பட்ட துயரங்களுக்கெல்லாம் அவர்கள் குடும்பத்தின் ஆண் உறுப்பினர்கள் காரணம் என்பதால் எம்.ஜி.ஆர் தன் படங்களின் பெண்களை கண்ணீர் விட வைக்கும் காட்சிகளை வைக்க மாட்டார். அவர் ஒரு பாதுகாவலனாக இருந்து பெண்களின் நம்பிக்கையை பெற்றார். அவர் படத்தில் நல்லவனுக்கு அழிவு வருவதும் கிடையாது; கெட்டவர்கள் வாழ்ந்து மகிழ்ந்ததும் கிடையாது. இதனால் ஏழை மக்களுக்கும் நல்லவர்களுக்கும் வாழ்வில் நல்ல நிலைமை வரும் அவர்களுக்கு தீமை ஏற்படாது என்ற நல்ல நம்பிக்கையை எம்.ஜி.ஆர். தனது படங்கள் வாயிலாகத் தெரிவித்தார்.

எம்.ஜி.ஆர். படத்தை பார்த்து திரும்பும் பெண்கள் தங்கள் பிள்ளைகளைப் பார்த்து எம்.ஜி.ஆரைப் போன்று நீ நல்லவனாக இருக்க வேண்டும் என்று சொல்லி வளர்த்தார்கள். மற்றவர்கள் படத்துக்கு போய்விட்டு வரும் தாய்மார்

இவரைப் போல் நீ இரு என்று சொன்னால் அவரைப் போல நீ சிகரெட் குடி, மது குடி என்பதும் சேர்ந்து அதில் அர்த்தமாகிவிடும். எனவே தமிழின தாய்மார்கள் தங்களுடைய பிள்ளைகள் எம்.ஜி.ஆரை போல நல்லவனாக இருக்க வேண்டும் என்று விரும்பியதால் எம்.ஜி.ஆரையும் தன்னுடைய பிள்ளையாகவே கருதினர். இவ்வாறு கருதியவர்கள் ஏழைகளும் ஏதிலிகளும் மட்டும் அல்லர். பிரபல குடும்பத்தை சேர்ந்த பெண்களும் எம்.ஜி.ஆரை தன் மகனாகக் கருதினர். இவர்களைப் பற்றி அடுத்த கட்டுரையில் காண்போம்.

3. எம்.ஜி.ஆரை வாழ வைத்த தெய்வங்கள்

எம்.ஜி.ஆர் மீது தாய்மார் கொண்ட அன்பு மனித இனத்தில் மட்டுமல்ல மற்ற உயிர்களிடத்திலும் காணப்பட்டது. அவர் வந்தால் மழை பெய்வதும் அவர் காலடி மண்ணை எடுத்து நிலத்தில் போட்டால் நிலம் பொன் விளையும் பூமியாக மாறும் என்பதும் இயற்கை தந்த வரம். இது எல்லோருக்கும் வசப்படுவது அல்ல. அடிமை பெண் படத்துக்கு தாயின் பெருமையை பற்றி எம்.ஜி.ஆர் பாடலாசிரியர்களிடம் பாடல் எழுதச் சொல்கிறார். யார் எழுதிய பல்லவியும் இவர் கருதியது போல்ஆகவில்லை. உடனே ஒரு எழுத்தட்டையை வாங்கி பேனாவை எடுத்து இரண்டு வரிகள் எழுதி இதையே பல்லவியாக வைத்துக்கொண்டு எழுதுங்கள் என்கிறார். அந்த வரிகள் தான்,

தாயில்லாமல் நானில்லை
தானே எவரும் பிறந்ததில்லை,



பாடல் காட்சி ராஜஸ்தானில் உள்ள அபு மலையில் எடுக்கப்பட்டது. அப்போது அங்கு ஒரு குருவி தன் குஞ்சுகளுக்கு இரை ஊட்டுவதைக் காண்கிறார். ஒளிப்பதிவாளரை அழைத்து அதை படம் பிடிக்க சொல்கிறார். பொதுவாக ஆளரவம் கேட்டால் பறவைகள் பறந்துவிடும் அல்லது அருகில் போய் நின்று கொண்டு கீச் கீச் என்று கத்தும், ஆனால் எம்.ஜி.ஆர் தன்னை பார்ப்பது தெரிந்தும் அந்தக் குருவி பறக்கவில்லை. இது தெய்வாம்சம் பொருந்தியவருக்கு மட்டுமே சாத்தியம். அது தான் எம்.ஜி.ஆர். அவர் மனதில் இருந்த ஈவு இரக்கம் அனைத்து உயிர்களிடமும் காட்டும் அன்பு அவலத்தில் இருப்பவரை தேடி போய் உதவும் அருங்குணம் ஆகியன அவருக்கு ஒரு தெய்வாம்சத்தை கொடுத்திருந்தது.

தாய்மாரின் எதிர்ப்பார்ப்புகளை நிறைவேற்றிய எம்.ஜி.ஆர்.

பெண்கள் தங்கள் மகனாகக் கருதி எம்.ஜி.ஆரை போற்றிப் பாராட்டும் பண்பு தமிழகத்தில் தாய்மார்களிடம் பரவலாக காணப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் ஒரு தாய் தன் மகன் எத்தகைய நற்பண்புகளுடன் இருக்க வேண்டும் என்று கருதுகிறார்களோ அத்தகைய நற்பண்புகளுடன் எம்.ஜி.ஆர். தன் படங்களில் தாயை நேசிக்கும் நல்ல மகனாக மேன்மையான கதாபாத்திரங்களை தேர்ந்தெடுத்து நடித்து இருக்கிறார்.

சிவபெருமான் காரைக்கால் அம்மையாரை அம்மையே என்று அழைத்ததனால் அவர் சிவனுக்கே தாய் என்ற உயர்ந்த நிலையை அடைந்தார். சைவத்

திருக்கோயில்களில் அறுபத்து மூன்று நாயன்மார்களில் காரைக்கால் அம்மையார் மட்டுமே உட்கார்ந்திருக்கும் நிலையில் சிலை அமைக்கும் பேறுபெற்றவர் ஆனார். மற்ற நாயன்மார்கள் எல்லோரும் நின்ற கோலத்தில் கைகூப்பி வணங்கியபடி சிலை அமைக்கப்பட்டு இருப்பர். காரைக்கால் அம்மையார் மட்டும் உட்கார்ந்த கோலத்தில் சிலையாக வடிக்கப்பட்டிருப்பார். இதுபோல பிரியமானவர்களை அவரவர் வயதுக்கு ஏற்றபடி தந்தையாகவும் மகனாகவும் சகோதரனாகவும் நண்பனாகவும் கருதுகின்ற பண்பாட்டில் பல பெண்கள் எம்.ஜி.ஆரை தன் மகனாகக் கருதி அன்பு பாராட்டினர். இவ்வாறு கருதிய அவர்கள் ஒரு சிலரின் வரலாற்றை இக்கட்டுரையில் காண்போம்.

மகனின் கடமையை செய்தவர் எம். ஜி. ஆர்

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பூரில் பிறந்தவர் குமரன். இவர் கொடிகாத்த குமரன் என்று அழைக்கப்பட்ட சுதந்திரப் போராட்ட வீரர் ஆவார். இவர் பிரிட்டிஷ் போலீசார் தடியடி நடத்திய போதும் அஞ்சாமல் மூவர்ணக்கொடியை ஓங்கி உயர்த்திப் பிடித்தபடி தலையில் இருந்து ரத்தம் வழிய பாரத மாதா கி ஜே என்று சுதந்திரக் குரல் எழுப்பினார். பதினெட்டு வயதில் சுதந்திர போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட குமரன் பிரிட்டிஷ் போலீஸாரின் தடியடிக்கு பலியாகி இறந்து போனார். அவர்கள் மண்டையில் அடித்து ரத்தம் ஒழுக கிடந்தபோதும் குமரன் கையிலிருந்த கொடியை விடவில்லை. பாரத மாதாவுக்கு வாழ்த்தொலி எழுப்பவும் தயங்கவில்லை.

இறந்து போன குமரனுக்கு வீட்டில் ஒரு பதினாறுவயது மனைவி இருந்தார். அவர் பெயர் ராமாயி. இந்த ராமாயி அம்மாள் எம்.ஜி.ஆரை என் மகன் என்று பாராட்டியிருக்கிறார். ஏனென்றால் எம்.ஜி.ஆர். ராமாயி அம்மாளை நேரில் பார்த்து அவருடைய வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து அவர் காலத்துக்கும் அவருக்கு தேவையான வாழ்க்கை வசதிகளை செய்து கொடுத்தார். ஒரு தாயைப்போல கவனித்துக்கொண்டார். அதனால் ராமாயி அம்மாள் எம்.ஜி.ஆர். இறந்த போது “என் மகன் இறந்து விட்டதை போல நான் உணர்கிறேன். ஒரு மகன் தன் தாயை பார்த்துக்கொள்வது அவனது கடமை. ஆனால் எம்.ஜி.ஆர் எனக்கு அவர் காலத்துக்கு பிறகு என் காலம் வரை அந்த கடமையை நிறைவேற்றி சென்றிருக்கிறார். என் மகனுக்காக நான் கண்ணீர் வடிக்கிறேன் என்று சொல்லிச் சொல்லி அழுதார். ஒருவருக்கு உதவி செய்வது என்பது இரக்கத்தின் பாற்பட்டதாகும். ஆனால் அந்த உதவி பெற்றவர்கள் தமது காலம் முழுக்க உதவி செய்தவரை வாழ்த்துவதும் பாராட்டுவதும் நன்றி கடன் எனலாம். இவை இரண்டிற்கும் மேலாக பாச உணர்வால் கட்டுண்டு இருப்பது இயல்பாக எல்லோரிடத்திலும் காணக்கூடியதல்ல. ஆனால் இதுபோன்ற எம்.ஜி.ஆருக்கு தோன்றிய புதுப்புது தாய்மார்கள் எண்ணற்றோர்.

என் மகன் ராமச்சந்திரன் இருக்காரு

திரையுலகில் ஆரம்ப காலத்தில் எம்.ஜி.ஆருக்கு பல வகையிலும் உதவியாகவும் வழிகாட்டியாகவும்

இருந்தவர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள். சிக்கனமாக வாழ்வது பற்றியும் பிறருக்கு உதவுவது பற்றியும் எம்.ஜி.ஆர் இவரிடம் ஏராளமாகக் கற்றுக் கொண்டார். என்.எஸ்.கிருஷ்ணன் இறந்து போன பிறகு அவரது குடும்பம் மிகுந்த வறுமையில் இருந்தது. அப்போது எம்.ஜி.ஆர். கடனில் இருந்த அவருடைய வீட்டை மீட்டுக் கொடுத்தார். நாகர்கோவிலில் என் எஸ் கிருஷ்ணன் தன் மனைவி பெயர் வாங்கிய மதுரம் நிவாஸ் ஜப்தியில் இருந்து மீட்டு அவரது முதல் மனைவியின் மகன் கோலப்பனுக்கு கொடுத்தார்.

சென்னையில் இருந்த வீட்டை கடனிலிருந்து மீட்டு டி.ஏ.மதுரம் அம்மையாரிடம் ஒப்படைத்தார். மதுரம் அம்மையார் சிக்கலான தருணங்களில் இதோ என் மகன் ராமச்சந்திரன் வந்து விடுவார்; என் மகன் எனக்கு வேண்டிய உதவிகளைச் செய்கிறார்; என் மகன் என்னையும் என் பிள்ளைகளையும் பார்த்துக் கொள்வார்; என்று வார்த்தைக்கு வார்த்தை எம்.ஜி.ஆரை என் மகன் என்று தான் அழைப்பார். அதுபோலஎம்.ஜி.ஆரும் ஒரு மகனாக இருந்து என் எஸ் கிருஷ்ணனின் மகன்களை படிக்கவைத்து ஆளாக்கி இன்றைக்கும் உயர்ந்த நிலையில் அவர்கள் இருக்கும்படி கவனித்துக் கொண்டார். எம்.ஜி.ஆர். மைசூரில் பொறியியல் படிக்க வைத்தார். மற்றொரு மகன் சிறப்பாக கல்வி பெற செய்தார் இருவருக்கும்தமிழக அரசில் உயர் அதிகாரியாக பணி கிடைக்கவும் உதவினார். இவர்களில் ஒருவர் சொந்த வீடு கட்டியதும் அதற்கு ஜானகி எம்.ஜி.ஆர் இல்லம் என்றுதான் பெயர் சூட்டினர். கலைவாணரின் இரண்டு மகள்களுக்கும் 100 பவுன்

நகை அளித்து ஆபட்ஸ்பரி கல்யாண மண்டபத்தில் ராஜாஜி, கருணாநிதி என அனைத்து கட்சி தலைவர்களையும் வரவழைத்து வெகு சிறப்பாக திருமணத்தை நடத்தினார்.

திருமணத்திற்கு முதல் நாள் அவர் மண்டபத்தில் நடக்கும் ஏற்பாடுகளை கவனிக்கச் சென்றிருந்தபோது அந்த மண்டபத்தில் வெளியூரில் இருந்து திருமணத்துக்கு வந்திருந்த பெண்கள் சாதாரண சேலை கட்டி இருப்பதைக் கண்டு ‘இவர்கள் யார் எங்கிருந்து வந்து இருக்கிறார்கள்’ என்று விசாரித்து தெரிந்து கொண்டார். அவர்கள் அனைவரும் என் எஸ் கிருஷ்ணனின் உறவினர்கள். நாகர்கோவிலில் இருந்து வந்த பெண்கள், என்பதை அறிந்து கொண்ட எம்.ஜி.ஆர்மணியை பார்த்தார் மணி பத்தாகிவிட்டது. இருந்தாலும் அந்நேரமே சென்னையில் உள்ள பெரிய ஜவுளிக் கடையின் பூட்டியிருந்த கதவுகளை திறக்கச் சொல்லி நிறைய பட்டுச்சேலைகளை, பட்டு வேட்டியும் வாங்கிக் கொண்டு வந்து அங்கிருந்த பெண்களுக்கும் ஆண்களுக்கும் கொடுத்து மறுநாள் கல்யாணத்திற்கு அவர்களை பட்டுடுத்தி வரச்செய்தார். என் எஸ் கிருஷ்ணன் உதவினார் என்பதற்காக அவர் பிள்ளைகளுக்கு உதவலாம்; ஆனால் அவர் உறவினர்களுக்கெல்லாம் பட்டு வாங்கி தர வேண்டும் என்பது எம்.ஜி.ஆருடைய அன்புள்ளத்தை காட்டுகின்றது.

என் எஸ் கிருஷ்ணன் இன்னொரு மகனுக்கு நடிப்பிசைப் புலவர் கே ஆர் ராமசாமியின் மகளைத் திருமணம் செய்வித்தார். அவர்கள் அமெரிக்காவில்

இருக்கின்றனர். அந்த தம்பதியின் மகள் திவ்யா அமெரிக்காவில் படித்துவிட்டு இப்போது தமிழ் திரையுலகில் பின்னணி பாடகியாக இருந்து வருகிறார்.

என் எஸ் கிருஷ்ணன் குடும்பத்திற்கு உதவும் போது ஒருமுறை அவர் என் எஸ் கிருஷ்ணனின் மகனைப் பார்த்து ‘உன் அப்பா எவ்வளவு வரி கட்டுவார் தெரியுமா’ என்று கேட்டார் அவர் தெரியாது என்றார் ‘இரண்டு கோடி ரூபாய்க்கு வரி கட்டுவார்; அப்படி என்றால் அவர் எவ்வளவு சம்பாதித்து இருப்பார் என்பதை கணக்கிட்டு பார்; என்று கேட்டுவிட்டு இவ்வளவு சம்பாதித்த உன் அப்பா எல்லா பணத்தையும் மற்றவர்களுக்கு தானமாக தர்மமாக வழங்கினார். நீ நல்லபடியாக படித்து பிறருக்கு உதவியாக இரு’ என்று சொல்லி அவரைப் படிக்க வைத்தார். ஒரு மகனுக்கு உதவி செய்யும் போது அவருடைய பெற்றோர்களின் சிறந்த பண்புகளை எடுத்துரைத்து இன்னாருடைய வழியில் வந்த நீ இன்னின்ன சிறப்புகளோடு வரவேண்டும் என்று வாழ்த்தி அவர்களை வளர்ப்பது தற்பெருமை பாராட்டாத எம்.ஜி.ஆரின் குணத்தை புலப்படுத்துகிறது. இன்றும் இக்குடும்பத்தினர் எம்.ஜி.ஆர் பற்றி பேசினால் நன்றியுணர்ச்சியுடன் கண் கலங்கி பேசுவதை காணலாம்.

வருமான வரி பாக்கியை செலுத்த முன் வந்த தாய்

திமுகவில் எம்.ஜி.ஆர். இந்திய அதீத வளர்ச்சியை கண்டு பொறாமைப்பட்ட தலைவர் 1970லேயே எம்.ஜி.ஆருக்கு எதிராக உள்ள வேலைகளை செய்ய ஆரம்பித்தார். முதலில்

சினிமாவுக்கு போகும் இளைஞர்களை திசை திருப்ப கருணாநிதி சாராயக் கடையைத் தொடங்கினார். அதன் பிறகு எம்.ஜி.ஆரை போலவே தன் மகன் மு.க. முத்துவை நடிக்க வைத்து சில படங்களை எடுத்து வெளியிட்டார். எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றங்களை அழித்து மு.க.முத்து ரசிகர் மன்றங்களாக மாற்ற வேண்டும் என்று ரகசிய கட்டளை விதித்தார். புதிதாக எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றம் ஆரம்பிப்பதற்கு ஏராளமான தடைகளை ஏற்படுத்தினார். ரசிகர் மன்றங்களை ஆரம்பிக்க விடாமல் மு. க. முத்து மன்றங்களை ஆரம்பிப்பதற்கு பொருளுதவி செய்து ரசிகர்களை மு. க. முத்து ரசிகர்களாக மாற்ற நினைத்தார். ஆனால் அவருடைய இந்தச் சதித் திட்டங்கள் எதுவும் பலிக்கவில்லை. இந்த நிலையில் அவர் வருமான வரி பாக்கி வைத்து இருக்கிறார் என்று ஒரு வதந்தியை கிளப்பி விட்டார். வருமான வரி பாக்கிக்காக அவர் கைது செய்யப்படலாம் என்றும் அவருடைய திரை வாழ்வு பாதிக்கப்படும் என்றும் புரளி கிளப்பி விடப்பட்டது.

எம்.ஜி.ஆர். வருமான வரி செலுத்த பணம் இல்லாமல் சிரமப்படுகிறார் என்பதைக் கேள்விப்பட்ட ஒரு முஸ்லிம் தாய் ‘ஐயோ தன் மகனுக்கு வாழ்வில் இப்படி ஒரு சிக்கல் ஏற்பட்டு விட்டதே; தான் சம்பாதித்ததை எல்லாம் ஊருக்கு தானம் செய்துவிட்டு தான் வரி கட்ட இயலாமல் சிறைக்குப் போகும் நிலைக்கு வந்து விட்டாரே, என வருந்தி உடனே வெளிநாட்டில் இருக்கும் தன் மகனுக்கு ஒரு கடிதம் எழுதினார். “மகனே உன் அண்ணன் எம்.ஜி.ஆர். வரி கட்ட இயலாமல் சிரமப்படுகிறார். நீ உடனே இங்கு வா. நீயும் இங்கே

இருக்கும் உன் தம்பியும் சேர்ந்து கையெழுத்து போட்டால் தான் நாம் சொத்துக்களை விற்க முடியும். நாம் சொத்துக்களை விற்று முதலில் உன் அண்ணன் எம்.ஜி.ஆரின் வருமான வரி பாக்கியை செலுத்துவோம்''. இந்தக் கடிதத்தைப் பார்த்ததும் வெளிநாட்டில் இருந்த மகன் தமிழ்நாட்டிற்கு வந்தார். அவர் வந்ததும் தன் அன்னையின் முடிவைத் தெரிவித்து எம்.ஜி.ஆருக்கு ஒரு கடிதம் எழுதினார். உடனேஎம்.ஜி.ஆர் அந்த அன்புத்தாயின் பாசத்தில் நெகிழ்ந்து போய் 'அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை; இது எதிரிகள் செய்யும்சதி. என் பேரை கெடுக்க வீண் புரளியை கிளப்புகிறார்கள், நீங்கள் சிரமப்பட வேண்டாம் நீங்கள் உங்கள் ஊருக்கு செல்லுங்கள் உங்கள் வேலைகளைப் பாருங்கள் அம்மாவிடம் சொல்லுங்கள் எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை நான் வந்து அம்மாவை பார்க்கிறேன் என்று சொல்லுங்கள்'' என்று பதிலளித்தார். அந்த மகனும் உண்மை நிலையை தன் தாயிடம் தெரிவித்தார்.

ஆண்டுகள் கடந்தன. அன்புத் தாய்க்கு வயதாகிவிட்டதால் நோய்வாய்படுகிறார். எம்.ஜி.ஆரை பார்க்க விரும்புகிறார். எம்.ஜி.ஆருக்கு செய்தி அனுப்பப்படுகிறது. எம்.ஜி.ஆர். அந்த தாயின் வீடு தேடி சென்று அவரைச் சந்திக்கின்றார். படுக்கையில் இருக்கும் அந்தத் தாயின் அருகில் சென்று 'அம்மா உங்க மகன் எம்.ஜி.ஆர். வந்து இருக்கேன்; நான் எம்.ஜி.ஆர். வந்து இருக்கேன் அம்மா என்று சொல்லவும் உடனே அந்த தாயார் கண் திறந்து பார்த்து ''மகனே நீ நல்லா இருக்கியாப்பா உனக்கு ஒன்னும் பிரச்சனை

இல்லைல வரியெல்லாம் கட்டிட்டியா எதுவும் பிரச்சனை வந்தால் அம்மாகிட்ட சொல்லுப்பா. உன் தம்பிமார் இருக்காங்க; உன்ன பாத்துக்கிடுவாங்க'' என்று கண் கலங்க சொல்கிறார். ''இல்லம்மா எனக்கு எந்த பிரச்சினையும் இல்ல; நீங்க கவலையில்லாம இருங்க என்று சொல்லி அவரைத் தேற்றி விட்டு அவருக்கு நிறைய பண உதவியும் செய்துவிட்டு வருகிறார். இனி இறந்தாலும் அந்தம்மா ஆத்மா சாந்தி அடையும்.

இவர்களுக்கு நான் என்ன செய்யப் போகிறேன்?

எம்.ஜி.ஆர். மீது நிறைந்த அன்பு கொண்டிருக்கு தாய்மார்களுக்கு நான் என்ன செய்யப் போகிறேன் இவர்கள் என் மீது வைத்திருக்கும் அன்புக்கு பாத்திரமாக நான் கடைசி வரை இருக்க வேண்டும் என் வாழ்நாளில் நான் என் காலத்துக்குப் பிறகும் நான் தாய்மாரின் அன்புக்கு பாத்திரமானவனாக இருக்க வேண்டும் என்று கண்கள் கலங்கி கூட வந்தவர்களிடம் தன் எண்ணத்தைப் பரிமாறிக் கொள்கிறார். இவர்களின் அன்புதான் தன்னை வாழ வைப்பதாக நினைத்த எம்.ஜி.ஆர். ஒவ்வொரு கூட்டத்திலும் என்னை வாழ வைத்த தெய்வங்களாகிய தாய்மார்களே என்று அழைக்கிறார் இந்த சம்பவத்தை எம்.ஜி.ஆரின் மெய்க்காப்பாளராக இருந்த ராமகிருஷ்ணன் தன்னுடைய நூலில் விவரமாக எழுதி இருக்கிறார்.

ஒரு மகன் சினிமாவுல இருக்குறான்

மதுரைக்கு அருகே உள்ள வைகை அணைக்கட்டில் மாட்டுக்கார வேலன் படத்துக்கு

படப்பிடிப்பு நடந்து கொண்டிருக்கிறது. அப்போது பொதுமக்கள் கூட்டம் ஏராளமாக அங்கு கூடி இருக்கிறது. எம்.ஜி.ஆர். அவர்களுக்கு உடனடியாக தண்ணீர் வரவழைத்து குடிக்க கொடுக்கிறார். அவர் கேமரா கோணத்துக்கு ஏற்றபடி அவர்கள் முன் கையை நீட்டி விலகுங்கள் என்று கையசைத்தால் உடனே அந்தக் கூட்டம் மந்திரத்துக்கு கட்டுப்பட்டது போல அவர் கையை அசைக்கும் பக்கத்தில் விலகி வழிகொடுக்கும். இவ்வாறு போலீசாரின் கட்டளைக்கு கூட கட்டுப்படாத கூட்டம் எம்.ஜி.ஆரின் கை அசைவுக்கு கட்டுப்பட்டு இருந்ததை பார்த்து அனைவரும் ஆச்சரியப்பட்டுப் போனார்கள். அப்போது அங்கு ஒரு வயதான பாட்டி தினமும் வருவதைப் பார்த்து எம்.ஜி.ஆர். அந்த பாட்டியை அழைத்து அவரிடம் சிறிது நேரம் பேசினார். ''உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்? அவர்கள் என்ன செய்கிறார்கள்?'' என்று கேட்டார். அதற்கு 'எனக்கு இரண்டு மகன். ஒருத்தன் பட்டாளத்துல இருக்கான், அடுத்தவரு சினிமாவில் இருக்காரு' என்று அந்த தாய் சொன்னார். 'அப்படியாம்மா சினிமாவுல இருக்காரா? யாரு? பேர் என்ன? சினிமானா எனக்கு தெரிஞ்சிருக்குமே! அவரு பேர் என்ன சொல்லுங்க' என்று கேட்டார். ''நீ தான்பா அது'' என்று அந்த தாய் சொல்லவும் எம்.ஜி.ஆர். கண்கலங்கி விட்டார்.

எம்.ஜி.ஆரின் மந்திரச் சொல்

தாயின் அன்பு மொழிகளை கேட்டு நெகிழ்ந்த எம்.ஜி.ஆர் உடனே அருகில் இருந்த ஜெயலலிதாவிடம் சொல்லி உன் அறைக்கு

யாரையாவது அனுப்பி அங்கிருந்து ஒரு நல்ல புதிய சேலையை கொண்டு வரச் சொல் என்று சொல்லி ஒரு நல்ல பட்டுச்சேலையை அந்த அம்மாவுக்கு கொடுத்து கையில் பணமும் கொடுத்து 'அம்மா உங்க மகன் கொடுக்கிறேன் வாங்கிக்கங்க' என்று சொன்னார். இது எம்.ஜி.ஆர். பயன்படுத்தும் மந்திரச்சொல். தாய்மாரை பார்க்கும்போது அவர்கள் எங்கே மறுத்து விடுவார்களோ என்று இவருக்கு தோன்றினால் உடனே அவர் 'உங்க மகன் கொடுக்குறேன்மா வாங்கிக்கங்க' என்று சொல்லுவார். அவர்களும் மறுக்காமல் பெற்றுக்கொள்வார்கள்.

'என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே'

எம்.ஜி.ஆரின் ரசிகர்கள் தனிப்பண்பு உடையவர்கள். அவர்கள் எம்.ஜி.ஆரிடம் இருந்து எதையும் பெற வேண்டும் என்று ஆசைப்பட மாட்டார்கள். எம்.ஜி.ஆர். எல்லோருக்கும் கொடுக்க



வேண்டும் என்று ஆசைப்படுவார்; ஆனால் அவரது ரசிகர்கள் அவரைப் போலவே அவருக்குத் தாம் ஏதாவது கொடுக்க வேண்டும் என்றுதான் நினைப்பார்கள். எம்.ஜி.ஆர். உனக்கு என்ன வேண்டும் என்று கேட்கும் போதும் 'ஒன்னும் வேண்டாம் அண்ணே உங்களை பார்த்ததே போதும் என்று சொல்லியவர் ஏராளம்.எம்.ஜி.ஆர். வற்புறுத்தி அவர்களுக்கு கடை வைக்கவும் ஏதாவது தொழில் செய்யவும் உதவியிருக்கிறார். எம்.ஜி.ஆரிடம் இருந்து எதையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசை அவரது ரசிகர்களுக்கு இல்லை. இது ஒரு அதிசயிக்கத்தக்க தனிபண்பு.

மாட்டுக்கார வேலன் படம் வெற்றி விழா கொண்டாடிய போது எம்.ஜி.ஆர். அந்த வெற்றி விழாவில் பங்கு கொள்ள கோவைக்கு வந்து இருந்தார். அப்போது அந்த திரையரங்க உரிமையாளர் 'ஒரு பாட்டியை அழைத்துக் கொண்டு வந்து எம்.ஜி.ஆரிடம் காட்டி இந்த பாட்டி தினமும் வந்து உங்கள் படத்தை பார்த்தார் என்று அறிமுகம் செய்து வைத்தார். எம்.ஜி.ஆர்.

அந்த பாட்டியை அருகில் அழைத்து 'அம்மா நீங்க என்ன வேலை செய்றீங்க? எதுக்கு ஒரே படத்தை தினமும் பார்க்குறீங்க? என்று கேட்டார். 'நான் கீரை விற்கிறேன் ஐயா'என்றார். எம்.ஜி.ஆர் 'கீரை விற்கிறீங்களா? அதுல ஒரு நாளைக்கு எவ்வளவு கிடைக்கும்?' என்று கேட்க 'மூன்று ரூபாய் கிடைக்கும்; இரண்டு ரூபாய் நான் வச்சுக்கிட்டு ஒரு ரூபாய்க்கு உங்க படம் பார்ப்பேன்' என்று சொன்னார். 'ஒரே படத்தை எதுக்கு தினம்

பார்க்குறீங்க?' என்று கேட்டார் அய்யா 'என் மகனை நான் வந்து தினம் பாக்குறதுக்கு என்னய்யா கணக்கு?' என்று அந்த பாட்டி சொன்னார். என் மகனை நான் தினமும் வந்து பார்ப்பதற்கு என்னையா கணக்கு என்று பாட்டி சொன்னதைக் கேட்கவும் எம்.ஜி.ஆர். கண்கலங்கிவிட்டார். தன் பையிலிருந்து ஆயிரம் ரூபாயை எடுத்து அந்த பாட்டியின் கையில் கொடுத்தார். இதை வச்சுக்கங்கம்மா என்றார் அதற்கு அந்த பாட்டி "வேணாம்யா உன்ன பார்த்ததே எனக்கு போதும்" என்று பதிலளித்தார். 'உங்க படத்தை ஏதேனும் பார்த்தாலே எனக்கு சந்தோசம்பா' என்று மறுத்துவிட்டார். தன் உழைப்பில் மூன்றில் ஒரு பங்கை தனக்காக செலவழிக்கும் தன்னை வாழ வைத்துக்கொண்டிருக்கும் அந்தத் தாயின் நல்ல உள்ளம் அவரது பிரார்த்தனை அவரது நல்லெண்ணம் தான் தன்னை வாழ வைத்துக் கொண்டிருப்பதாக எம்.ஜி.ஆர். தெரிவித்தார். அக்கருத்தை அன்புத் தாய்மாரை சந்திக்கும் ஒவ்வொரு கூட்டத்திலும் 'என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே' என்று சொல்லி சொல்லி உறுதி செய்து கொண்டார்.

நம்பியார்கிட்ட ஜாக்கிரதையா இருந்துக்கப்பா

எம்.ஜி.ஆர். மீது தாய்மார் கொண்ட அன்புக்கு இன்னும் ஒரு வேடிக்கையான உதாரணத்தை இங்கு பதிவு செய்ய வேண்டும். இச்சம்பவம் பற்றி இன்றைக்கு பலருக்கும் தெரிந்திருந்தாலும் கூட இனி வரும் தலைமுறைக்கு இச்சம்பவம் தெரிந்திருப்பது அர்த்தமுள்ளதாக இருக்கும். எம்.ஜி.ஆர். படங்களில் நம்பியாரை வில்லனாக

ஒப்பந்தம் செய்வதுண்டு. நம்பியாருக்கும் எம்.ஜி.ஆருக்கும் நல்ல சண்டைப்பயிற்சி இருந்ததால் இருவரும் சண்டைக்காட்சிகளில் கால முறை [timing] தவறாமல் நடித்தனர். எம்.ஜி.ஆர். ரசிகையான ஒரு வயதான தாய் உண்மையிலேயே நம்பியார் எம்.ஜி.ஆரின் பகைவன் என்று நம்பி விட்டார். நாடகங்களிலும் கதைகளிலும் புராணங்களிலும் ராமனுக்கு ராவணன் நிஜ எதிரி தானே. அதுபோலத்தான் திரைப்படத்திலும் எம்.ஜி.ஆருக்கு நம்பியார் நிஜ எதிரி என்று நம்பிய அந்தத் தாய் ஒருமுறை ஒரு பொதுக்கூட்டத்தில் எம்.ஜி.ஆர். பேசி முடித்ததும் அவர் அருகே வேகமாக சென்று அவரை கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்து 'ஐயா இந்த நம்பியார் கிட்ட மட்டும் கொஞ்சம் ஜாக்கிரதையாக இரு' என்று அவருக்கு ஆலோசனை வழங்கினார். இந்த சம்பவத்தில் இந்த பாட்டியின் அறியாமையை கேட்டு ரசிப்பதைவிட அவர் எம்.ஜி.ஆர். மீது கொண்டிருந்த அக்கறையை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

எம்.ஜி.ஆர். ஒரு சினிமா நடிகர், அவர் பணம் வாங்கிக் கொண்டு நடிக்கின்றார்; வேஷம் போட்டுக்கொண்டு நடிக்கின்றார், என்று நினைத்திருந்தால் அந்த தாய் அவருக்கு அறிவுரை சொல்லி இருக்க மாட்டார். எம்.ஜி.ஆர். என்ற மனிதர் அல்லது நடிகர் 'நீண்ட நாள் வாழவேண்டும்; அவருக்கு யாராலும் எந்த இடையூறும் வந்து விடக்கூடாது' என்று கருதியதால் தான் அந்த தாய் நம்பியாரிடம் எச்சரிக்கையாக இருக்கும்படி கூறினார். அது நம்பியாராக இல்லாமல் வேறு யாராகவும் இருக்கலாம். ஆனால் எம்.ஜி.ஆர்.

நீண்டநாள் நல்ல தேக சுக ஆரோக்கியத்துடன் வாழவேண்டும் என்பது பாட்டியின் ஆசை, பிரார்த்தனை. இதுதான் இச்சம்பவத்தின் முக்கிய கருத்தாகும். எம்.ஜி.ஆர். நீண்ட நாள் நன்றாக வாழ வேண்டும் என்று தமிழினத் தாய்மார் கொண்டிருந்த நல்லெண்ணம் அவருக்கு பாதுகாப்பு கவசமாக இருந்து அவரை பல இடையூறுகளில் இருந்து காப்பாற்றியது. எம்.ஜி.ஆர். சத்யா அம்மையாரின் புதல்வனாக இருந்தாலும் உலகில் உள்ள எண்ணற்ற தாய்மாரின் பிரார்த்தனை அவருக்காக எப்போதும் உலகில் எங்காவது ஒரு மூலையில் ஒரு குக்கிராமத்தில் 'மகராசன் நல்லா இருக்கனும்' என்ற வாழ்த் பரிணமித்தது. அந்த வாழ்த்து அவரை ஆயுட்காலம் முழுவதும் உயர்ந்த இடத்தில் வைத்திருந்தது.

தர்மம் தலைகாக்கும்

தமிழினத் தாய்மார் இந்த உலகில் நல்லவர் ஒருவர் இருக்கிறார் என்றால் அவர் எம்.ஜி.ஆராக மட்டுமே இருக்கமுடியும். பிறருக்கு ஒருவர் உதவி செய்கிறார் என்றால் அவர் எம்.ஜி.ஆர். ஆக மட்டுமே இருக்க முடியும் என்று தம் வாழ்நாள் முழுக்க கருதியதுண்டு. ஒரு முறை பாலாஜி ஒரு ஏழை பாட்டிக்கு 100 ரூபாய் கையில் கொடுத்தார். சிவந்த நிறத்துடன் சுருள் சுருளான தலை முடியுடன் இருக்கும் பாலாஜியை எம்.ஜி.ஆர். என்று நினைத்துக்கொண்ட அந்தப் பாட்டி 'ஐயா எம்.ஜி.ஆர். நீ நூறாண்டு வாழனும்' என்று வாழ்த்தினார். உடனே பாலாஜி அருகிலிருந்தவரிடம் 'பாருங்கள் இந்த மக்கள் யார்

கொடுத்தாலும் அது எம்.ஜி.ஆர். கொடுத்ததாகத்தான் நினைக்கிறார்கள். எம்.ஜி.ஆர். அந்த அளவுக்கு இவர்கள் மனதில் குடி கொண்டிருக்கிறார். இவர்களின் நம்பிக்கை பெற்றிருக்கிறார்'. என்று தெரிவித்தார். ஏழைகளுக்கு தர்மம் செய்தால் அது எம்.ஜி.ஆராக மட்டுமே இருக்க முடியும் என்று மக்கள் மனதில் பதிந்திருந்த ஆழமான எண்ணம் அவருக்கு வாழ்த்தாகவும் வாக்குகளாகவும் வந்தன. இச்சம்பவம் நடக்கும்போது எம்.ஜி.ஆர். கட்சி ஆரம்பித்திருக்கவில்லை. ஆனால் அவர் தனிக்கட்சி ஆரம்பித்ததும் இந்த தாய்மார்கள் தாமாகவே தமது வாக்குகளை எம்.ஜி.ஆருக்கு அளித்து அவரை வெற்றி பெறச் செய்தனர். அவர் காலம் முழுக்க அவரை முதலமைச்சராகவே வைத்து அழகு பார்த்தனர்.

முதலமைச்சரானதும் எம்.ஜி.ஆர். வயதான பெண்கள் தன் மீது காட்டும் அன்புக்கு கைம்மாறாக ஒரு திட்டம் கொண்டு வந்தார். எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் அறிமுகம் செய்தபோது அவர் வயதான ஆண்களுக்கும் பெண்களுக்கும் அதே சத்துணவு கூடத்தில் மதிய உணவை இலவசமாக அளிக்கும் திட்டத்தை அறிமுகம் செய்தார். இதனால் ஏராளமான மூத்த குடிமக்கள் ஒரு நாளைக்கு ஒருமுறையாவது நல்ல சத்துணவு சாப்பிடும் வாய்ப்பைப் பெற்றனர். வயதானவர்களுக்கு முதியோர் பென்ஷன் என்ற பெயரில் ஒரு திட்டத்தையும் அறிமுகம் செய்தார். இன்றைக்கு இந்த வயதான பெண்கள் அந்த முதியோர் பென்சனை எம்.ஜி.ஆர். பணம் என்றே அழைக்கின்றனர். ‘‘ஒரு மகனின் கடமை தன் தாயை பராமரிப்பது; அதை என் மகன் எம்.ஜி.ஆர். எனக்கு

செய்திருக்கிறார் என்று கொடி காத்த குமரனின் மனைவி ராமாயி அம்மாள் கூறியது போல இன்று ஏராளமான தாய்மார் தெரிவிக்கின்றனர். எம்.ஜி.ஆர். செய்த தர்மம் அவர் தலையை மட்டுமல்ல அவர் புகழையும் காத்துக்கொண்டிருக்கிறது. பெற்ற மகன் இருந்தாலும் முதியோர் பென்ஷன் மற்றும் மதிய உணவளித்த எம்.ஜி.ஆரை என் மகன் என்று தம் காலம் முழுக்க அவருக்காக தமிழினத் தாய்மார் இறைவனை வேண்டுகின்றனர். இதனால் எம்.ஜி.ஆர். தன் இறப்பிற்கு பிறகும் இந்த அன்பு தாய்மார்களால் புகழுடம்பு பெற்று வாழ்ந்துகொண்டிருக்கிறார்.



4. நடிகையர் தேர்வில் கலைநுட்பமும் வாழ்வியல் அறமும்

கலையும் பண்பாடும்

எம்.ஜி.ஆர். தன் படங்களை வெறும் நடிப்புக்கான தொழிலாக வருமானத்துக்கான வழியாக மட்டும் நினைக்கவில்லை. அவர் அறவழியில் பொருள் ஈட்ட வேண்டும் அதை



மக்களுக்கு வழங்கி இன்புற வேண்டும் என்ற நோக்கம் உடையவர். அவரது வாழ்வில் அறம் பொருள் இன்பம் என்ற மூன்றும் சம விகிதத்தில் இடம்பெற்றன. ஈத்துவக்கும் இன்பம் என வள்ளுவர் போற்றிய இன்பத்தை திகட்ட திகட்ட நுகர்ந்தவர் எம்.ஜி.ஆர். அவர் சினிமா என்பதை மக்களுக்கான கலையாக கருதினார். மக்களுக்கான சேவையாகக் கொண்டார். கலை நுட்பத்தோடும் வாழ்வியல் அறத்தையும் போற்றினார். கலையையும் பண்பாட்டையும் எம்.ஜி.ஆர். தன் இரு கண்களாகக் கருதினார். எனவே தான்

நாம பாடுற பாட்டும் ஆடுற ஆட்டமும்

படிப்பினை தந்தாகணும் நாட்டுக்கு

படிப்பினை தந்தாகணும் என்றார்.

தன் படத்தில் காண்பிக்கப்படும் ஒவ்வொரு காட்சியும் பேசப்படும் ஒவ்வொரு வார்த்தையும் மக்களை அறத்தின் வழியே வழிநடத்துகின்ற வழிகாட்டிகளாக இருக்க வேண்டும் என்பது அவருடைய ஆழமான நம்பிக்கை. கலைப்படைப்பில் அறம் பேணிய உயர் கொள்கை எம்.ஜி.ஆரிடம் இருந்தது.

கலைக்கும் அறத்துக்கும் அடிப்படை காரண கர்த்தா பெண்களே என்பதால் இவர் படத்தில் பெண்கள் ரசிக்கக் கூடிய வகையில் மட்டுமே காட்சிகள் அமைக்கப்படும். வசனங்கள் பேசப்படும். நடனங்கள் உருவாக்கப்படும். ரசிகர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் மட்டுமே படத்தின்

திரைக்கதை அமைப்பு இருக்கும். பெண்கள் கூட்டத்தை வைத்தே அவர் படத்தின் வெற்றியை கணிப்பார். பெண்கள் வந்து படத்தை பார்க்க எவ்வித இடையூறும் இருக்கக் கூடாது என்பதில் கவனமாக இருப்பார்.

ஆதி சமூகத்தில் பெண்கள்

தமிழ் சமூகமே மனித இனத்தின் ஆதி சமூகம் ஆகும். அதுவே இவ்வுலகில் முதலில் தோன்றிய பண்பட்ட சமூகம் ஆகும் உலகத்துக்கே பண்பாட்டை கற்றுக்கொடுத்த தமிழ்ச் சமூகம், தமிழ்ப் பண்பாடு, தமிழர் அறம் ஆகியவற்றின் மீது எம்.ஜி.ஆர். அளவற்ற மதிப்பு கொண்டிருந்தார். ஆதியில் தாய் வழிச் சமூகமாக இருந்து காலப்போக்கில் ஆண் முதன்மைச் சமூகமாக வளர்ந்து பரிணமித்த இச்சமூகத்தின் மூத்த உயர் குடிமக்கள் பெண்களே என்பதை ஆழமாக நம்பினார். பெண்களை மதிக்காத எந்த ஒரு சமூகமும் முன்னேற முடியாது என்பதில் ஆழமான நம்பிக்கை கொண்டிருந்த எம்.ஜி.ஆர். தன்னுடைய பேட்டிகளிலும் படங்களிலும் நிஜவாழ்விலும் பெண்களுக்கு அதிக மரியாதை கொடுத்து வந்தார். பெண்கள் ஏற்றுக்கொண்டால் மட்டுமே தனக்கு சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் இருக்கும் என்பதை நன்கு உணர்ந்த எம்.ஜி.ஆர். பெண்கள் ரசிக்கும் வகையில் மட்டுமே ஒவ்வொரு காட்சியையும் அமைத்தார். அவருடன் நடிக்கும் தாய் தங்கை ஜோடி வில்லி என ஒவ்வொருவரையும் பார்த்து பார்த்து தெரிவு செய்தார்.

எம்.ஜி.ஆர் படங்களில் கதாநாயகிகள்

எம்.ஜி.ஆர். படங்களில் காதல் காட்சிகள் ஸ்வீட்டாக இருக்கும் என்று ஸ்ரீதேவி ஒரு பேட்டியில் தெரிவித்திருந்தார். ஆபாசம் இல்லாமல் ரசிக்கக் கூடிய வகையில் மிக அழகாக காதல் காட்சிகளை அமைப்பதில் எம்.ஜி.ஆர். திறமையானவராக இருந்ததால் பெண்கள் அவருடைய படங்களில் காதல் காட்சிகளை ரசித்து பார்த்தனர். காதல் காட்சிகளில் நடிப்பதற்கு உரிய கதாநாயகிகளை தேர்ந்தெடுப்பதில் எம்.ஜி.ஆர். தீவிர கவனம் செலுத்தினார். அந்தக் கதாநாயகி தன்னுடைய தோற்றத்துக்கும் நடன அசைவுகளுக்கும் ஈடு கொடுக்கக் கூடியவராக பொருத்தமானவராக இருக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தி கதாநாயகிகளை தெரிவு செய்தார்.

காதலுக்கு ஒரு முன்னுதாரணம்

எம்.ஜி.ஆருடன் காதல் காட்சிகளில் நடித்த ஜெயலலிதா மற்றும் சரோஜாதேவியை பார்த்தவர்கள் நம்முடைய காதலியும் மனைவியும் போல இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டனர். ஜெயலலிதாவும் சரோஜா தேவியும் எம்.ஜி.ஆரிடம் அன்பு செலுத்துவதை போல நம் வாழ்வின் இணையர் நம்மை நேசிக்க வேண்டும் என்று விரும்பி அந்த ஜோடியை தங்களது முன்மாதிரியாக ஏற்றுக் கொண்டனர். எம்.ஜி.ஆர். தன் ஜோடியிடம் காட்டிய அன்பும் காதலும் நேசமும் கட்டுப்பாடும் தன்னடக்கமும் மற்றவர்களுக்கு முன் மாதிரியாக இருந்தது. அவருடைய காதல் காட்சிகளில் நடிக்க கதாநாயகிகள் தயங்கியதே இல்லை. அவர் எவ்வித



வன்முறையும் ஆபாசமும் அசிங்கமும் இல்லாமல் காட்சிகளை நாசுக்காகவும் நயமாகவும் ரசிக்கத்தக்க வகையிலும் பெண்கள் கண் திறந்து பார்த்து வாய் மலர்ந்து சிரித்துப் பேசி மனம் குளிர தக்கவகையில் தன்னுடைய காதல் காட்சிகளை அமைத்து இருந்தார்.

ஆணுக்கு ஆண் ஆசைப்படும் அழகும் காதலும்

ஆணுக்கு ஆண் ஆசைப்படும் பேரழகு படைத்தவராக கருதப்பட்ட எம்.ஜி.ஆர். காதல் காட்சிகளில் நடிக்கும்போது அவரது ரசிகர்களும் எம்.ஜி.ஆர். தம்மையே காதலிப்பதை போல காதல்வயப்பட்டு தன்னை மறந்தனர். எடுத்துக் காட்டாக ஒரு புராண சம்பவத்தை இங்கு குறிப்பிடலாம். கண்ணனின் அழகைக் கண்டு மயங்கிய நாரதர் தானும் ஒரு பெண்ணாக மாறி கண்ணனுடன் கூடி அறுபது குழந்தைகளை பெற்றார். அந்த அறுபது குழந்தைகளின் பெயர்களே பிரபவ முதல் தொடங்கும் அறுபது வருடங்களின்

பெயர்கள் ஆகும். இது புராணம் சொல்லும் கருத்தாகும். இதை போல ஒரு வேடிக்கை எம்.ஜி.ஆர் வாழ்க்கையில் நடந்தது. ஒருமுறை டான்ஸ் மாஸ்டர் சலீம் எம்.ஜி.ஆருக்கு நடனம் கற்றுக் கொடுத்த போது 'நீ நன்றாக பெண் பிள்ளை போல ஆடுகிறாய்' என்று சலீமை எம்.ஜி.ஆர். பாராட்டினார் அப்போது சலீம் 'நான் மட்டும் பெண்பிள்ளையாக பிறந்திருந்தால் உங்களைத்தான் காதலித்து திருமணம் செய்து இருப்பேன். எனக்கு உங்கள் மீது அளவுகடந்த காதல் உண்டு' என்று எம்.ஜி.ஆரிடம் கூறினார். உடனே எம்.ஜி.ஆர்.சிரித்தபடி அவரை அடிக்க போனாராம். இது ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போன்ற ஒரு சம்பவம். நிறைய ரசிகர்கள் எம்.ஜி.ஆரின் படத்தில் வரும் காதல் காட்சிகளை கண்டு ரசிக்கும் போது தான் ஒரு பெண்ணாக இருக்கக் கூடாதா என்று நினைத்ததாக பேட்டிகளிலும் கூட்டங்களிலும் சொல்வதைக் கேட்கலாம். இது ஒரு ரகசியமல்ல அனைவருக்கும் தெரிந்த ஒரு பொதுவான கருத்து; பொதுவான ஆசை.

கதாநாயகிகளை தெரிவு செய்வதில் வாழ்வியல் அறம்

1960களில் இந்தித் திரையுலகிலும் தமிழ் திரையுலகிலும் பெரும்பாலும் நிஜவாழ்வில் ஜோடிகளாக சேர்ந்தவர்களே திரைப்படங்களிலும் ஜோடிகளாக இணைந்து நடித்தனர். தமிழில் ஜெமினி சாவித்திரி; ஏவிஎம் ராஜன் புஷ்பலதா; எஸ் எஸ் ஆர் விஜயகுமாரி; என் எஸ் கே மதுரம்; காளி என் ரத்தினம் சி டி ராஜகாந்தம்; தங்கவேலு சரோஜா போன்றோர் நடிக்க வரும்போது தனித்தனியாக வந்தாலும் வந்த பிறகு ஜோடிகளாக வாழ்வில்

இணைந்து படங்களிலும் இணைந்து நடித்து வந்தனர். இந்த ஜோடிகளுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. நிஜ வாழ்வில் பகிரங்கமாக இணையாத ஜோடிகளைப் பற்றி ரசிகர்களிடையே அவர்கள் ரகசியமாக ஜோடிகளாகவே வாழ்கிறார்கள் என்று வதந்திகளும் இருந்து வந்தன. இந்த வதந்திகள் அவர்களின் நடிப்பு இயற்கையானது என்று கருதுவதற்கு இடம் அளித்தது.

தமிழக ரசிகர்கள் நடிப்புக்காகக் கூட யாரோ முன்பின் தெரியாத ஒரு ஆணும் பெண்ணும் காதலிப்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே அவர்கள் சினிமாவில் வரும் ஜோடிகள் நிஜவாழ்விலும் அவர்கள் இணைந்து வாழ்வதாகவே கற்பனை செய்து கொண்டனர். நம்பினர்; பத்திரிகைகளிலும் செய்திகள் வெளிவந்தன; சில நடிகர்கள் இச்செய்திகளை அவர்களே உருவாக்கி பத்திரிகைகளுக்கு அளித்தனர்.

நடிகர்களிடம் இயற்கையான உணர்ச்சிகளை தமிழ் ரசிகர்கள் விரும்பினர். தொடர்பு இல்லாதவரோடு போலியாக நடிப்பதை அவர்கள் ஆதரிக்கவில்லை. சிவாஜி ஜெமினி படங்களில் ஜோடிகள் மாறி சகோதரர்களாக நடித்த படங்களை ரசிகர்கள் புறக்கணித்ததால் அவை தோல்வியை தழுவின. ஜோடி சேர்தல் என்பது பண்பாடு சார்ந்த விஷயம் என்பதை நன்குணர்ந்த எம்.ஜி.ஆர். ஜோடி நடிகையை தெரிவு செய்வதில் மிகவும் கவனமாக இருந்தார். அதனால் அவரது படங்கள் வெற்றிசித்திரங்களாய் வசூலைஅள்ளி குவித்ததுடன் மக்கள் மத்தியில் அவரது செல்வாக்கை அதிகரித்த்து.

எம்.ஜி.ஆர்.பின்பற்றிய தமிழ்ப் பண்பாடு

எம்.ஜி.ஆர். தன் படங்களில் பெண் நடிகைகளை தாயாகவும் சகோதரியாகவும் ஜோடியாகவும் ஒப்பந்தம் செய்வதில் தமிழ் பண்பாட்டை பின்பற்றினார். ரசிகர்களின் முழு ஆதரவை பெறுவதற்கு எம்.ஜி.ஆர். வாழ்வியல் அறத்தை மதித்தார். பல படங்களில் பிரபல ஜோடியாக நடித்து விட்டு பின்பு அதே நடிகையோடு அண்ணனாக நடிப்பதில்லை. இந்த அறப்பண்பு அவருக்கு பெண் ரசிகர்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்றுத்தந்தது.

படத்தில் நடிக்க தொடங்கிய காலத்தில் ஓரிரு படங்களில் ஜோடியாக நடித்து இன்னாருக்கு இன்னார் எனப் பிரபலமாகாத நடிகையை பிற்காலத்தில் சகோதரியாகவும் தாயாகவும் நடிக்க வைத்தார். ரசிகர்களின் அமோக ஆதரவு பெற்ற பிரபல ஜோடியான ஜெயலலிதா, சரோஜாதேவி, லதா போன்றோருடன் அவர் அப்பா எம்.ஜி.ஆராக வரும்போது கூட ஜோடியாக நடித்தது கிடையாது.

சிவாஜி கணேசன் காத்தவராயன், அமரதீபம் போன்ற படங்களில் ஜோடியாக சாவித்திரியுடன் நடித்தார். பின்பு பாசமலர் படத்தில் சாவித்திரியுடன் அண்ணனாக நடித்த பின்பு அவர் சாவித்திரியை கதாநாயகியாகப் போட்டு நடித்த படங்கள் வெற்றி பெறவில்லை. இதற்கு விதிவிலக்கு திருவிளையாடல். திருவிளையாடலில் அவர்களின் தோற்றம் முற்றிலுமாக சிவன் பார்வதி போல இருந்ததனால் மக்கள் அதனை ஏற்றுக் கொண்டனர். ஆனால் சாவித்திரியை சிவாஜி கணேசனின் தங்கையாகவே ஏற்றுக்கொண்ட தமிழக ரசிகர்கள்

அவரை ஜோடியாக ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. இதுபோல பிரச்சினைகள் தனக்கு வரக்கூடாது என்பதனால் எம்.ஜி.ஆர். முன்கூட்டியே ஒரே நடிகையை தங்கை மகள் அம்மா சகோதரி ஜோடி என பல கதாபாத்திரங்களிலும் தன்னுடன் நடிக்க வைப்பதை அவர் முற்றிலுமாகத் தவிர்த்து விட்டார்.

யாருக்கு யார் ஜோடி?

ராஜா தேசிங்கு படத்தை தமிழ் தெலுங்கு என இரு மொழிகளிலும் எடுக்க முடிவாயிற்று. தமிழில் எம்.ஜி.ஆர். தேசிங்காகவும் தெலுங்கில் என் டி ஆர் தேசிங்காகவும் நடிப்பதென முடிவு செய்யப்பட்டது. தமிழில் எம்.ஜி.ஆர். தேசிங்கு ராஜா என் டி ஆர் மகமத் கானாகவும் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டனர். இவர்களுக்கு ஜோடியாக எம்.ஜி.ஆருக்கு பத்மினியும் என்.டி.ஆருக்கு பானுமதியும் ஒப்பந்தம் ஆயினர். அப்போது மதுரை வீரன் படத்தில் எம்.ஜி.ஆர். பத்மினி ஜோடி பிரபலமாயிருந்தது. இப்படத்துக்கு வசனம் எழுதியவர் கவிஞர் கண்ணதாசன்.

ஒருநாள் என்.டி.ஆர் பேசவேண்டிய வசனங்களை படித்துப் பார்த்த கலைவாணர் என் எஸ் கிருஷ்ணன் ‘இந்த வசனங்களை பேச தமிழ் திரையுலகில் ஒருவர் தான் இருக்கிறார். அவர்தான் இலட்சிய நடிகர் எஸ்.எஸ். இராஜேந்திரன். இந்த வசனங்களை அவருக்குக் கொடுங்கள்’ என்று கருத்து தெரிவித்தார். இந்தப் படம் மேகலா பிக்சர்ஸ் சார்பில் கருணாநிதி எம்.ஜி.ஆர்., எம் ஜி சக்கரபாணி ஆகியோரின் கூட்டு படைப்பாக உருவானது. எனவே

என் எஸ் கேயின் கருத்துக்கு மதிப்பளித்து என். டி.ஆரை சமாதானப்படுத்தி "நீங்கள் தெலுங்கு உலகில் ஜொலிக்கலாம்; என்னைப்போல முதன்மையான நடிகராக உருவாகலாம்; உங்களுக்கு நல்ல காலம் அங்கு இருக்கின்றது;" என்று அவரை நம்பிக்கையூட்டி அனுப்பி வைத்த பிறகு அந்த மகமத்கான் கதாபாத்திரத்திற்கு எஸ்.எஸ்.ஆரை ஒப்பந்தம் செய்தனர்.

மகமத் கானுக்கு ஜோடி பானுமதி; ஆனால் அதற்கு முன்பு வெளியான ரங்கோன் ராதா படத்தில் சிவாஜிக்கு பானுமதி ஜோடியாகவும் பின்பு சிவாஜிக்கு வயதான பிறகு அவரது மகன் எஸ் எஸ் ஆருக்கு அம்மாவாகவும் நடித்திருந்தார். இதனால் இப்படத்தில் எஸ் எஸ் ஆருக்கு ஜோடியாக நடிக்க மறுத்துவிட்டார் 'அம்மாவாக நடித்த நான் எஸ் எஸ் அவருக்கு ஜோடியாக நடிப்பதா? அது கூடாது. ரசிகர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்' என்று அவர் கூறியதால் இப்போது ஜோடி மாற்றப்பட்டது. எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக நடிக்க ஒப்பந்தமான பத்மினியை எஸ் எஸ் ஆருக்கு ஜோடியாக ஒப்பந்தம் செய்தனர். பானுமதியை எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக ஒப்பந்தம் செய்தனர். அந்தக் காலத்தில் ஜோடியாக நடிப்பவர் அக்காவாக தங்கையாக அம்மாவாக மகளாக நடிப்பதை மக்கள் ஏற்றுக் கொள்வது இல்லை என்பதால் நடிகர்களும் முன்வருவதில்லை. இதற்கு விதிவிலக்கு சிவாஜி கணேசன். அவர் தன் மகளாக நடித்த ஸ்ரீதேவியுடன் பின்னர் ஜோடியாகவும் நடித்து இருந்தார்.

நீண்ட நாள் கழித்து வந்த அக்கா அம்மா

ரிக்க்ஷாக்காரன் படத்தில் சகுந்தலா எம்.ஜி.ஆருக்கு அக்கா வேடத்தில் கௌரவ தோற்றத்தில் வந்திருந்தாலும் அவருக்கும் எம்.ஜி.ஆருக்குமான காட்சிகள் எதுவும் கிடையாது. அக்காவாக வரும் சகுந்தலா தன் தோழி பத்மினியுடன் பேசும் காட்சி மட்டுமே உண்டு. இதனால் சகுந்தலாவும் எம்.ஜி.ஆரும் அக்கா தம்பி என்று அழைத்துப் பேசும் பாசமான காட்சிகள் எடுக்கப்படாததால் சகுந்தலாவுக்கு அக்காவாக நடிக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டது.

எம்.ஜி.ஆர். நடித்த மருதநாட்டு இளவரசி படத்தில் அவருடன் நாடகங்களில் நடித்து வந்த ஜி சகுந்தலா ஜோடியாக நடித்திருந்தார் ஜி சகுந்தலாவுக்கு அந்தப் படத்தில் சிறப்பான காதல் காட்சிகளோ எம்.ஜி.ஆரோடு நெருக்கமாக நடிக்கும்



பாடல்களோ கிடையாது. ஏனென்றால் அந்தப் படத்தில் முக்கியமான பாத்திரத்தில் நடித்தவர் மாதுரி தேவி. எனவே பின்னர் இதயவீணை படத்தில் அம்மாவாக நடிக்க ஜி சகுந்தலாவை ஒப்பந்தம் செய்யலாம் என மணியன் கேட்ட போது சம்மதித்தார். எம்.ஜி.ஆரும் ஜி சகுந்தலாவும் நடித்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் இந்தப் படத்திலும் அவர் சிறுவயதிலேயே அம்மா அப்பாவை விட்டு காஷ்மீருக்கு ஓடி போய் விடுவார். இருபத்தைந்து வருடங்கள் கழித்து அவர் மீண்டும் சென்னைக்கு வரும்போது இவர்களுடன் சேர்ந்து நடிக்கும் காட்சிகள் அதிகமாக இல்லை. எனவே சரஸ்வதி, பண்டரிபாய்,எம் வி ராஜம்மா போன்ற நடிகைகளுடன் நடிக்கும் போது இருந்த தாய் மகன் உறவு காட்சிகள் இந்தப் படத்தில் இல்லாததால் சகுந்தலா எம்.ஜி.ஆருக்கு அம்மா வேடத்தில் நடித்தார் .

5. பெண்களின் காதலுக்கும் பாசத்துக்கும் வழி காட்டி

எம்.ஜி.ஆர்.படங்களில்தனக்கான ஜோடியைத் தெரிவு செய்வது போலவே தனக்கு தங்கையாக மற்றும் அக்காவாக நடிக்கும் நடிகைகளையும் இரண்டாவது கதாநாயகியாக வந்து தன்னை ஒருதலையாகக் காதலிக்கும் நடிகையரையும் எம்.ஜி.ஆர் வெகு கவனமாகத் தெரிவு செய்தார். தனக்கு ஜோடியாக நடித்து பிரபலமான சரோஜாதேவி மற்றும் ஜெயலலிதா போன்றவர்களை சகோதரியாக ஒப்பந்தம் செய்வதில்லை என்பதை ஒரு குறிக்கோளாகக் கொண்டிருந்தார்.

படங்களில் எம்.ஜி. ஆரின் தங்கைமார்

என்தங்கை, காஞ்சித்தலைவன் படத்தில் விஜயகுமாரி, அரசிளங்குமரி படத்தில் பத்மினி, என்கடமை படத்தில் எல்விஜயலட்சுமி, தனிப்பிறவி படத்தில் ரேவதி, எங்கள் தங்கத்தில் புஷ்பலதா, இதய வீணையில் லக்ஷ்மி, நினைத்ததை முடிப்பவனில் சாரதா ஆகியோர் தங்கை வேடத்தில் நடித்திருந்தனர்.

கதாநாயகி அல்லாத நடிகைகள்

எல் விஜயலட்சுமி ஒரு பாட்டுக்கும் சில காட்சிகளுக்கு மட்டும் ஜோடியாக கொடுத்து வைத்தவள் படத்தில் நடித்திருப்பார். பாலாற்றில் தேனோடுது, இடையில் நூலாடுது, மனது போராடுது என்ற பாட்டுக்கு எம்.ஜி.ஆருடன் நடனமாடி இருப்பார். குடியிருந்த கோயில் படத்தில் ஆடலுடன்

பாடலை கேட்டு என்ற பங்கரா நடனக்காட்சியில் ஆடியிருப்பார். மற்றபடி பல ஜெய்ஷங்கர் படங்களில் அவருக்கு ஜோடியாக நடித்து இளைஞர்களால் இவர் ஜேம்ஸ்பாண்ட் கதாநாயகியாக அடையாளம் காணப்பட்டார். லட்சுமி குமரிகோட்டத்தில் எம்.ஜி.ஆருக்கு ஆதரவளிக்கும் தங்கை போன்ற கதாபாத்திரத்தில் ஆனால் ஜெயலலிதாவுக்கு பொறாமை ஊட்டுவதற்காக எம்.ஜி.ஆரின் காதலியைபோல நடித்திருப்பார் இவர் அதற்கு முன்னர் வந்த குடியிருந்த கோயில் மற்றும் சங்கேமுழங்கு படங்களில் எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக நடித்திருப்பார். அங்கொன்றும் இங்கொன்றுமாக இவர் நடித்ததாலும் மேலும் முத்துராமன், சிவகுமார், சிவாஜி எனப் பல நடிகர்களோடு ஒரே சமயத்தில் நடித்து வந்ததாலும் இவர் எம்.ஜி.ஆர். ஜோடி என அங்கீகாரம் பெறவில்லை.

ஜோடியாக மட்டுமே நடித்த நடிகைகள்

ஜெயலலிதாவோ சரோஜாதேவியும் லதாவோ எம்.ஜி.ஆருக்கு சகோதரியாகவோ தாயாகவோ நடிக்கவில்லை. இவர்கள் மூவரும்தான் எம்.ஜி.ஆருடன் அதிகபடங்களில் தொடர்ந்து ஜோடியாக நடித்தவர்கள். ஜெயலலிதா 28 படங்களிலும், சரோஜாதேவி 26 படங்களிலும் இவற்றுக்கு அடுத்தபடியாக லதா 12 படங்களிலும் ஜோடியாக நடித்திருந்தனர். 1977இல் சரோஜாதேவி இஞ்சினியர் ஹர்ஷாவைத் திருமணம் செய்த பிறகு அவரோடு எம்.ஜி.ஆர். எந்த படத்திலும் நடிக்கவில்லை. அரச கட்டளை படத்தில் அவரை

தியாகி ஆக்கி ஜெயலலிதாவை ஜோடி ஆக்கினர். எம்.ஜி.ஆர். மீது கொண்டிருந்த மரியாதை காரணமாக சரோஜாதேவி தன் மகனுக்கு கௌதம் ராமச்சந்திரன் என்று எம்.ஜி.ஆர். பெயரைச் சூட்டினார்.

தங்கையாக மாறிய காதலிகள்

எம்.ஜி.ஆர். படங்களில் ஒருதலையாக காதலிக்கும் பெண்களை அவர் தனக்கு வேறு காதலி இருப்பதால் அவளுக்கு தன்னால் துரோகம் செய்ய இயலாது என்பதை வலியுறுத்தி இந்தப் பெண்ணைத் தன் தங்கையாக ஏற்றுக்கொள்வதாக கூறுவார். இந்த காட்சியை கண்டு சிலர் நகைப்பதுண்டு. ஆனால் மிகத்தெளிவாக படத்தில் எந்த இடத்திலும் அந்த பெண்ணை தான் காதலிப்பதாகவும் திருமணம் செய்து கொள்வதாகவும் அவர் சொல்லி இருக்கவே மாட்டார். கதாபாத்திர வடிவமைப்பில் எம்.ஜி.ஆர். காட்டும் அக்கறையும் கவனமும் அவர் நாடோடி மன்னன் படத்தின் கதாபாத்திர உருவாக்கம் பற்றி எழுதியிருக்கும் கட்டுரையில் விரிவாக படித்து உணரலாம். ஒரு பெண் தானாக தன் மனதிற்குள் வளர்த்துக்கொண்ட கற்பனைக்கு அவர் எந்தவிதத்திலும் பொறுப்பாளி இல்லை என்றாலும் தன்மேல் கொண்டிருந்த அன்பை வெறுக்காமல் அவளை தன்னுடைய சகோதரியாக ஏற்றுக் கொள்ளும் பெருந்தன்மை எம்.ஜி.ஆர். இருந்ததை இத்தகைய காட்சிகள் புலப்படுத்துகின்றன.

காதலித்து வாடும் இரண்டாம் கதாநாயகிகள்

கதாநாயகி எம்.ஜி.ஆர். படங்களில் எம்.ஜி.ஆரை ஒருதலையாக காதலிக்கும் இரண்டாம் கதாநாயகிகள்

உண்டு. இவர்கள் பணக்கார குடும்பத்தை சேர்ந்தவர்களாக இருப்பார்கள். ஆனால் எம்.ஜி.ஆர். காதலிக்கும் பெண் ஏழையாக இரக்க குணம் உள்ளவராக இருப்பார். சில படங்களில் அவர் முதலில் ஒரு பெண்ணை காதலித்து அவளை திருமணம் செய்துகொள்ள முடியாத சூழ்நிலையில் அல்லது அவள் இறந்துவிடும் கட்டத்தில் அவளைப் பிரிந்து விடும் சூழ்நிலையில் பின்பு வேறு பெண்ணை திருமணம் செய்து கொண்டு வாழ்வதாக கதைகள் இருப்பதுண்டு. இதுபோன்ற படங்களில் இரண்டு கதாநாயகிகளுக்கும் இடம் உண்டு. நாடோடி படத்தில் பாரதி முதல் கதாநாயகியாக முதல் காதலியாக வந்து இறந்து விடுவாள். அன்னமிட்டகை படத்தில் அவரை ஒருதலையாகக் காதலித்தார். இதுபோல பறக்கும் பாவை படத்திலும் நான் ஏன் பிறந்தேன் படத்திலும் காஞ்சனா எம்.ஜி.ஆர். ஒருதலையாக காதலித்தார். புதிய பூமியில் ஷீலா, பணம் படைத்தவனில் சௌகார் ஜானகி, உழைக்கும் கரங்கள் படத்தில் பவானி; உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் தாய்லாந்து நடிகை மேத்தா ஆகியோர் எம்.ஜி.ஆரை. ஒருதலையாக காதலிக்கும் காட்சிகள் இருப்பதால் அவர்களோடு பாடல் காட்சிகளும் உண்டு.

காதலில் தோல்விக்கு கலைஞனாக எம்.ஜி.ஆர் காட்டும் தீர்வு

எம்.ஜி.ஆர். படங்களில் ஒருதலைக் காதலுக்கு நல்ல புத்திமதி சொல்லி இருப்பார். காதல் நிறைவேறாத போது தற்கொலை செய்வதோ காதலித்தவரின் குடியை கெடுக்க முனைவதோ

கூடாது. அவ்வாறு செய்தால் அந்தப் பெண் வில்லியாகி அவள் வாழ்க்கையை தானே அழித்து கொள்வாள். எனவே அவள் அந்த ஆணை தன் சகோதரனைப் போலக் கருதி அவனது வாழ்க்கையில் அன்பும் அக்கறையும் கொண்டவளாக மனமாற்றம் பெற வேண்டும். இவ்வாறு மனித நேயம் போற்றி ஒருவர் வாழ்வில் ஒருவர் ஏதேனும் ஒரு ஆரோக்கியமான உறவு நிலையில் தம்மை இணைத்துக்கொள்ள வேண்டும். கலைகள் மூலமாக தமிழ்ப் பண்பாடும் சமூக வாழ்க்கையும் காக்கப்பட வேண்டும் அதுவே கலைஞனாக வாழும் ஒரு தனி மனிதனின் வாழ்வியல் கடமை ஆகும்.

மறு உறவு பாராட்டுதல்



ஒவ்வொரு பெண்ணும் தான் விரும்பிய ஆணையே அடைய வேண்டும் என்று நினைத்தால் அது நடக்காது. அப்போது அந்த தோல்வி மனப்பான்மையை வெற்றி கொள்வது எவ்வாறு? ஒரு உறவு இல்லையென்றால் மறு உறவு பாராட்டி பண்பாடு கெடாமல் வாழ்க்கைப் பயணத்தை தொடர வேண்டும் என்று எம்.ஜி.ஆர். தன் படங்களில்

பெண்ணுக்கு அறிவுரை வழங்கிக் கொண்டு செல்வார். உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் மேத்தாவுக்கு அவர் வழங்கும் அறிவுரை காதலில் தோற்ற அனைத்து பெண்களுக்கும் ஒரு அண்ணன் சொல்லும் அறிவுரை ஆகும். எந்த பிரச்சினைக்கும் சாவு ஒரு தீர்வாகாது. வாழ்வதற்கான வழிகளை ஆராய வேண்டுமே தவிர சாவதோ கொலை செய்வதோ ஒரு ஆரோக்கியமான தீர்வு அல்ல. தற்காலப் படங்களில் பெண்கள் கொலை செய்வது அதிகரித்து வருகிறது. நடைமுறை வாழ்க்கையிலும் பெண்கள் கொலை செய்வது அதிகரித்துள்ளது. இதற்கு முக்கிய காரனம் எம்.ஜி.ஆரை போல அறிவுரை சொல்லும் ஆட்கள் இன்று பொது வாழ்வில் கலை உலகில் இல்லை.

கலைஞனின் மற்றும் கலைப்படைப்பின் சமூகக் கடமை

காதல் தோல்வியில் பாதிக்கப்பட்டோர் தன் வீட்டார் சொல்லும் அறிவுரைகளை கேட்கமாட்டார்கள். அதே சமயம் பொது வாழ்வில் இருப்போர் கலைப் படைப்புகளை அளிப்போர் திரைப்படங்கள் நாடகங்கள் மூலமாகச் சொல்லும் அறிவுரைகளும் காட்டும் தீர்வுகளும் தனி மனித வாழ்வில் பெரும் மாற்றத்தை விளைவிக்கும். எனவே, பெண்களை வாழவைக்க ஒரு தீர்வை காட்டினார். காதல் தோல்வி அடைந்த பெண்கள் கண்ணீரோடு தனிமையில் காலத்தை கடத்துவதை எம்.ஜி.ஆர். விரும்பவில்லை. அனைத்து அறங்களும் கூட்டு வாழ்க்கை மற்றும் குடும்பவாழ்க்கைக்கு உரியவை; வழ்வியல் அறம் எதுவும் மரணத்துக்கு

வழி காட்டக் கூடாது, என்பது எம்.ஜி.ஆரின் கொள்கை.

இலட்சியத்துக்கும் யதார்த்தத்துக்கும் ஓர் உன்னத எடுத்துக்காட்டு

எம்.ஜி.ஆர். ஒரு யதார்த்தவாதி. இலட்சியங்கள் வாழ்க்கைக்கு தேவை என்றாலும் அவை வாழ்வதற்கு ஊக்குவிக்கவேண்டுமே தவிர சாவுக்கு அல்ல என்பதை உணர்ந்தவர். வாழத்தான் வழிகளை தேட வேண்டும் என்பதை அவர் தன் அனுபவத்தில் கற்றுக்கொண்டார். அதை தன் வாழ்வில் பின்பற்றினார். அவர் தன் வாழ்வில் கஷ்டப்பட்ட எத்தனையோ பெண்களை சந்தித்திருக்கிறார். அவர்களுக்கு பிரச்சனை வந்த போது அறிவுரை கூறி காப்பாற்றி இருக்கிறார்.

இரண்டு முறை திருமண வாழ்வில் தோல்வி அடைந்த ஒரு பிரபல நடிகை அவரை சந்தித்து தான் படும் அவதியை கூறிய போது எம்.ஜி.ஆர். அந்த பெண்ணிடம் “உனக்கு விருப்பம் இருந்தால் அரசியலுக்கு வா; கட்சி உன்னை பாதுகாக்கும் அல்லது இன்னொரு திருமணம் செய்துகொள்; பாதுகாப்பாக வாழ்வதே சரி தனியாக இருக்காதே” என்றார். அந்த பெண் எம்.ஜி.ஆர். சொன்னபடி மீண்டும் ஒரு முறை திருமணம் செய்துகொண்டு சிறப்பாக வாழ்ந்து வருகிறார். எம்.ஜி.ஆர். அந்த பெண்ணிடம் “உன் தலை எழுத்து; தலைவிதி; உனக்கு இரண்டு திருமண வாழ்க்கையும் சரியாக அமையவில்லை” என்று எதிர்மறையாகப் பேசாமல். “மீண்டும் முயன்று பார். இந்த உலகில் நாம் வாழப் பிறந்திருக்கிறோம்; நம்மால் முடியும்” என்று

ஊக்கப்படுத்தி ஒரு மூத்த சகோதரனை போல தெம்பூட்டினார். அந்தப் பெண்ணுக்கு துன்பம் கொடுத்தவரை அழைத்து 'கண்டித்து' புத்திமதி சொல்லி அனுப்பினார். இது அவர் வேலையில்லை என்றாலும் சினிமாவை போலவே அவர் தன் நிஜ வாழ்விலும் ஒரு மூத்த அண்ணனைப் போலவே நடந்துகொண்டார். அதன் பிறகு அந்த நடிகைக்கு அரசியல்வாதிகளாலும் பத்திரிகையாளர்களாலும் எந்த துன்புறுத்தலுமில்லை. எம்.ஜி.ஆருக்கு விஷயம் தெரிந்துவிட்டது என்றவுடன் அதுவரை துன்பம் கொடுத்த அனைவரும் வாலை சுருட்டிக்கொன்டு அமைதியாக இருந்தார்கள்.

எம்.ஜி.ஆர். பெண்களுக்கு பாதுகாப்பு தருவதில் எப்போதும் தயங்கியதே இல்லை என்று அந்தப் பெண் தனது பேட்டியில் தெரிவித்திருக்கிறார். ஒரு தலைக் காதலாக இருந்தாலும் இருவரும் மனம் ஒப்பி காதலித்து பிரிய நேர்ந்தாலும் பெண்கள் இந்த உலகில் பாதுகாப்பாக வாழ வழி வகுக்கும் எண்ணத்தில் "வாழ்க்கை வாழ்வதற்கே; வாழு, வாழ விடு" என்ற கருத்தாக்கங்களின் படி அவர்கள் வாழ எம்.ஜி.ஆர். நேரிலும் திரையிலும் வழி காட்டுகிறார்.

பிரச்சனையை தீர்க்க ஒரு முற்போக்கு சிந்தனை

எம்.ஜி.ஆரின் எதிர் அணியை சேர்ந்தவர்கள் எம்.ஜி.ஆர். படங்களில் ஒருதலைப்பட்சமாக காதலித்த பெண்கள் அடுத்த காட்சியில் அண்ணா என்று அழைக்கும் போது கேலியும் கிண்டலும் செய்ததுண்டு. ஆனால் ஒரு ஆணின் வாழ்வில் அன்றைய காலத்தில் ஒரு பெண் மனைவியாக அல்லது சகோதரியாக மட்டுமே இடம்பெற சமூகம்

அனுமதித்தது. இரண்டில் ஒன்றை மட்டுமே ஒருத்தி தேர்ந்தெடுக்க வேண்டும் இன்று நண்பராக தொடர முடியும் அன்று அந்நிலை இல்லை. எனவே காலத்துக்கு ஏற்ற தீர்வை எம்.ஜி.ஆர். தன் படங்களில் வழங்கினார். எம்.ஜி.ஆர். அறிவுறுத்திய இந்த உறவு முறை மாற்றத்தை முற்போக்கு சிந்தனையாகக் கொள்ள வேண்டும்.

விஜயகுமாரிக்கு தங்கை வேடம் மட்டுமே கொடுத்ததேன்?

எம்.ஜி.ஆர், எஸ்.எஸ்.ஆர், நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ராமசாமி போன்றோர் திமுகவில் இருந்துகொண்டே திரைப்படங்களிலும் நடித்து வந்தனர். எஸ்.எஸ்.ஆர். உடன் இணைந்த விஜயகுமாரி கண்ணகியாக பூம்புகார் படத்தில் சிறப்பாக நடித்திருந்தார். அவருடைய நடிப்பு பல



படங்களில் சிறப்பாக பேசப்பட்டது. அப்போது படத்தயாரிப்பாளர்கள் எம்.ஜி.ஆரின் ஜோடியாக சேர்த்து ஒருபடத்தில் நடிக்கவைக்க வேண்டும் என்று முயன்றனர். அதற்கு எம்.ஜி.ஆர். அவர்களிடம் விஜயகுமாரியை ஜோடியாக போட்டு நடிக்க இயலாது என்று பதிலளித்து விட்டார். "விஜயகுமாரியை என் தம்பி எஸ்.எஸ்.ஆர். ஆசையாக திருமணம் செய்திருக்கிறார், அவர்கள் இருவரும் கணவன் மனைவியாக வாழ்கிறார்கள் தம்பி மனைவியுடன் எப்படி நான் ஜோடியாக நடிப்பது?" என்று ஒரு கேள்வியை கேட்டார். இது ஒரு வாழ்வியல் அறம் சார்ந்த கேள்வி நடிப்புக்காக இன்னொருவரின் மனைவியை தொட்டு நடிக்கக் கூடாது தன் காதலியாக பாவிக்கக்கூடாது என்ற அறத்தை பின்பற்றியவர் என்கிறார் .

6. எம்.ஜி.ஆர். படத்தால் பிரபலமான ஜோடிகள்

தமிழ்த் திரையுலகில் பல இயக்குனர்களால் புது முகங்களாக அறிமுகமான நடிகைகள் எம்.ஜி.ஆர். படங்களில் நடித்த பிறகு பிரபலமாயினர். அவர்களில் முக்கியமான ஒரு சிலரை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

கே.ஆர். விஜயா

கற்பகம் படம் எம்.ஜி.ஆரை கதாநாயகனாகக் கொண்டு தயாரிப்பதாக திட்டமிடப்பட்டது. ஆனால் எம்.ஜி.ஆரின் கால்ஷீட் கிடைக்க காலதாமதம் ஆனதால் தயாரிப்பாளர் வேறு ஒருவரைக் கொண்டு



படத்தை முடிக்க கருதினார். அதனால் ஜெமினி கணேசன் படத்தின் கதாநாயகன் ஆனார். அவருடைய மனைவி சாவித்திரி படத்தில் கதாநாயகியாக ஒப்பந்தம் செய்யப்பட்டார். புதுமுகமாக கே ஆர் விஜயா ஒப்பந்தமானார். கே ஆர் விஜயாவின் குழந்தைத்தனமான சிரித்த முகத்தை பார்த்த இயக்குனர் மற்றும் வசனகர்த்தாவான கே. எஸ். கோபால கிருஷ்ணன் அவரை அந்த படத்தில் ஒப்பந்தம் செய்தார். மாடு முட்டிச் சாகும் கே ஆர் விஜயா பெண்களின் உள்ளம் கவர்ந்த நடிகை ஆனார். இவர் எம்.ஜி.ஆர். படத்தில் அறிமுகமாகியிருக்க வேண்டியவர் அடுத்த படமான தொழிலாளியில் எம்.ஜி.ஆருடன் நடித்தார். தொடர்ந்து தாழம்பூவில் நடித்தார்.

தொழிலாளியில் இரண்டாவது கதாநாயகியாக நடிக்க ஆள் தேடியபோது வசனகர்த்தா ஆரூர்தாஸ் கற்பகம் படத்தில் நடித்த கே ஆர் விஜயாவைப் பற்றி தன் மனைவி புகழ்ந்து பேசியதாக சொல்லவும் தயாரிப்பாளர் இந்த படத்திலும் கே ஆர் விஜயாவை ஒப்பந்தம் செய்யலாம் என்று முடிவு செய்து எம்.ஜி.ஆரிடம் கேட்டார். எம்.ஜி.ஆர். விஜயாவை பார்த்துவிட்டு சம்மதம் தெரிவித்தார்.

கே ஆர்.விஜயா தொழிலாளி படத்தில் காதல் ரசம் ததும்பும் காட்சியிலும் கோபம் பொங்கும் காட்சியிலும் வெறுப்பை வெளிப்படுத்தும் காட்சியிலும் இயலாமையால் தவிக்கும் காட்சியிலும் முகபாவங்களையும் உடல் மொழியையும் மிகச்சரியாக வெளிப்படுத்தி இருந்தார். இதனால் கே ஆர்.விஜயாவுக்கு

நல்லதொரு எதிர்காலம் திரையுலகில் உண்டானது. இப்படத்தின் இரண்டாவது கதாநாயகி என்றாலும் தொடக்கம் முதல் முடிவு வரை இவருடைய காட்சிகள் நீண்டன.

கே ஆர் விஜயா திருமணம் செய்துகொண்ட பிறகு இவரும் இவர் கணவரும் எம்.ஜி.ஆருடன் நல்ல நட்புறவு கொண்டிருந்ததனால் தொடர்ந்து எம்.ஜி.ஆர். படங்களில் நடித்து வந்தார். விவசாயி, நல்ல நேரம், நான் ஏன் பிறந்தேன் ஆகிய வெற்றிப்படங்களில் விஜயா எம்.ஜி.ஆருடன் ஜோடியாக நடித்திருந்தார். ஒருசமயம் எம்.ஜி.ஆருக்கு தேர்தல் செலவுக்கு பணம் தேவைப் பட்டபோது விஜயாவின் கணவர் வேலாயுத நாயர் ஒரு சூட்கேஸ் நிறைய பணம் கொடுத்ததாகவும் செய்திகள் வந்தன.

ஜெயலலிதா, காஞ்சனா, சரோஜா தேவி ஆகியோர் முதன்முதலாக எம்.ஜி.ஆர். படத்தில் அறிமுகம் ஆகவில்லை என்றாலும் எம்.ஜி.ஆர். நடித்த பிறகுதான் அவர்கள் பிரபலமானார்கள் சரோஜாதேவி ஒரு குழு நடனக்காரரர் ஆக அறிமுகமானார் பின்பு மூன்று படங்களில் நடிக்க மொத்தமாக குறைந்த சம்பளத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டார். அதன் பிறகு திருடாதே படத்தில் எம்.ஜி.ஆருடன் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டார். ஆனால் இந்தப் படம் வருவதற்குள் எம்.ஜி.ஆருக்கு மேடையில் இன்பக் கனவு நாடகத்தில் நடிக்கும் பொழுது கொண்ட மணி அவர் மீது விழுந்ததால் கால் எலும்பு முறிந்து ஆறுமாதம் சிகிச்சையில் இருந்ததனால் இப்படம் முடிவடைய ஒரு வருடத்துக்கு மேலாயிற்று.

சரோஜாதேவி எம்.ஜி.ஆருடன் நடித்த திருடாதே படமும் வெளிவராத நிலையில் நாடோடி மன்னன் படத்தில் நடித்து வந்த பி பானுமதி படப்பிடிப்பின் போது முகம் கோனியதால் அவருடன் *ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அவர் அப்படத்திலிருந்து நீக்கப்பட்டார். அதன்பிறகுவேறு புதுமுகம் நடிகையை தேடியபோது சரோஜாதேவி எம்.ஜி.ஆருக்கு அறிமுகப்படுத்தப்பட்டார்.*

சரோஜாதேவி

சரோஜாதேவி பேசும் வசனங்கள் அப்போதைய நடிகைகளில் பேசுவதைப் போல இல்லாவிட்டாலும் எம்.ஜி.ஆருக்கு அவர் பேசியது பிடித்து இருந்த காரணத்தால் அவருடைய நடையில் சற்று வேறுபாடு காணப்பட்டாலும் அதுவும் ஒரு கவர்ச்சியாக தோன்றுகிறது என்று எம்.ஜி.ஆர். கருதியதால் நாடோடி மன்னன் படத்திற்கு அவரை ஒப்பந்தம் செய்தார். பி. பானுமதியை நீக்கிவிட்டு ஒரு புதுமுகத்தை ஒப்பந்தம் செய்து படம் எடுக்கும் போது உள்ள இடர்பாடுகளை நினைத்துப் பார்த்த எம்.ஜி.ஆர். தொழில்நுட்ப ரீதியாக அதை சரி செய்ய முனைந்தார் உடனே சரோஜாதேவி நடிக்கும் காட்சிகளை மன்னர் படமாக எடுக்க முடிவு செய்தார். அவருடைய காட்சிகள் அனைத்தும் கன்னித்தீவு என்ற தீவில் படமாக்கபடுவதாக காட்டப்பட்டன. எம்ஜிஆருடன் சரோஜாதேவி நாடோடி மன்னன் என்ற வண்ணப் படத்தில் நடித்து

கண்ணில் வந்து மின்னல் போல் காணுதே இன்ப
காவிய கலையே ஓவியமே



என்ற காதல் பாடலை கடலுக்கு அடியே தரைத்தளத்தில் பாடுவதாக கற்பனை காட்சி படம் பிடிக்கப்பட்டு திரையில் வெளிவந்தபோது ரசிகர்களின் உற்சாகத்திற்கு அளவேயில்லை. ரசிகர்களும் ரசிக்கும் ரசிகர்கள் மிகவும் ரசித்து இந்த வண்ண படக்காட்சியை கடலுக்கு அடியில் நடக்கும் காதல் காட்சியை ரசித்து ரசித்து பார்த்தனர். இதன்பிறகு எம்.ஜி.ஆர். சரோஜாதேவி ஜோடி பிரபலமாயிற்று 26 படங்களில் தொடர்ந்து இருவரும் ஜோடியாக நடித்து வந்தனர்.

1967இல் எம்.ஜி.ஆரை எம்.ஆர்.ராதா சுடப்பட்டு மருத்துவமனையில் இருந்தபோதுசரோஜாதேவியின் தாயார் அளித்த பேட்டியில் இனி அவர் நடிக்க வருவாரா என்பது தெரியாத நிலையில் அவருடன் என் மகள் நடிப்பாரா என்ற கேள்வி கேட்கிறீர்களே நான் எப்படி நடிப்பார் என்று சொல்ல முடியும் அவர்

முதலில் நடிக்கட்டும் பார்க்கலாம் என்று பதிலளித்த அதைக் கேட்டு அறிந்த எம்.ஜி.ஆர்.மிகவும் வேதனைப்பட்டு ஒரு முடிவுக்கு வந்தார். இனி சரோஜாதேவியோடு படம் நடிப்பதில்லை. புதிய ஒரு புதுமுகத்தை போட்டு நடிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தார். இவ்வேளையில் சரோஜாதேவிக்கு திருமண ஏற்பாடு நடந்தது அவரை வாழ்த்தி புகுந்த வீட்டுக்கு அனுப்பிவிட்டு அவர் நடித்த கடைசி படமான அரசகட்டளை இரண்டாம் கதாநாயகியாக நடித்துக் கொண்டிருந்த ஜெயலலிதாவை ஜோடியாக இறுதிக்காட்சியில் முடிவு செய்துவிட்டனர். முடிவு செய்துவிட்டு சரோஜாதேவிக்கு பிரியா விடை கொடுத்து விட்டார்.

ஜெயலலிதா

ஜெயலலிதா பத்தாம் வகுப்பு முடித்தவுடன் பதினைந்தாவது வயதில் சரோஜாதேவி



கதாநாயகியாக நடிக்கும் கன்னடப் படத்தில் ஒரு பாடல் காட்சியில் இருவரில் ஒருவராக இடம் பெற்றார். இதற்கு முன்பு அவர் The epistle என்ற ஆங்கிலப் படத்தில் நடித்திருந்தார். ஆனால் இந்திய படத்தில் அவர் முதன்முதலாக அறிமுகமானது கன்னட படத்தில் தான்.

ஸ்ரீதர் தன்னுடைய வெண்ணிற ஆடை படத்தில் நடிக்க ஏராளமான பெண்களை ஆய்வு செய்து இறுதியில் ஜெயலலிதாவை தேர்வு செய்து நடிக்க வைத்தார். பின்பு பத்மினி பிக்சர்ஸ் பந்துலு அவர்கள் சிவாஜி படங்களை எடுத்து பிரபலமாகி இருந்து பின்னர் கஷ்டப்பட்டு அந்த நஷ்டத்தை தீர்ப்பதற்காக எம்.ஜி.ஆரிடம் வந்து சேர்ந்தார். அவர் வண்ணப்படம் ஒன்று தயாரிக்க முடிவு செய்தார். அதில் ஜெயலலிதா கதாநாயகி ஆனார்.

அனைத்து பெரிய நிறுவனங்களும் முதலில் வண்ணப் படம் எடுக்கும் பொழுது வேறு எந்த நடிகரையும் போட்டு ரிஸ்க் எடுப்பதில்லை. எம்.ஜி.ஆரை மட்டுமே ஒப்பந்தம் செய்தன. அதுபோல எம்.ஜி.ஆரை ஒப்பந்தம் செய்து ஆயிரத்தில் ஒருவன் என்ற படத்தை எடுத்தார். இப்படத்தின் காட்சிகள் கோவாவில் எடுக்கப்பட்டன. புதிய படம் வண்ணப்படம் என்பதால் ஒரு இளம் கதாநாயகியை ஒப்பந்தம் செய்யலாம் என்ற முடிவுடன் தேடிக் கொண்டிருந்தபோது ஜெயலலிதாவைப் பற்றி அறிந்து எம்.ஜி.ஆரின் ஒப்புதலை பெற்றனர்.

ஜெயலலிதா வெண்ணிற ஆடை படத்தில் சிறப்பாக நடித்திருந்தார். எம்.ஜி.ஆர். ஜெயலலிதா ஜோடி ரசிகர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது. அதன்பிறகு சரோஜாதேவி நடித்த படங்களை முடித்துக் கொடுத்துவிட்டு புதிய படம் எதிலும் அவரை ஒப்பந்தம் செய்யவில்லை ஜெயலலிதாவோடு புதிய படங்களில் எம்.ஜி.ஆர். நடித்தார். ஜெயலலிதா காட்டிய ஒத்துழைப்பும் சுறுசுறுப்பும் அழகும் ரீடேக் வாங்காத திறமையும் நிறைய படங்களை விரைவாக முடிக்க உதவின. கன்னித்தாய் 12 நாட்களில் முகராசி 30 நாட்களில் தனிப்பிறவி 42 நாட்களில் என்று தேவர் ஃபிலிம்ஸ் எம்.ஜி.ஆரையும் ஜெயலலிதாவையும் ஒப்பந்தம் செய்து மளமளவென்று படங்களை எடுத்து குவித்தன.

ரவிச்சந்திரனுடன்அதிக படங்களில் நடித்து வந்த ஜெயலலிதா அதன்பிறகு எம்.ஜி.ஆரின் பிரத்தியேக கதாநாயகியாகி 28 படங்களில் எம்.ஜி.ஆருடன் நடித்தார்.

ஆயிரத்தில் ஒருவன் படத்தில் நடித்து முடித்த பிறகு ஜெய்சங்கர் ரவிச்சந்திரன் போன்றோருடன் வேறு பல படங்களில் நடித்து வந்தாலும் கருப்பு வெள்ளை படங்களில் நடித்த போதும் எம்.ஜி.ஆர். கதாநாயகி என்று ஆன பிறகு தான் இவர் பிரபலமடைந்தார். அதன்பின்னர் தமிழிலும் தெலுங்கிலும் அதிக சம்பளம் வாங்கும் நம்பர் ஒன் நாயகியாக விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

காஞ்சனா

ஸ்ரீதர் தான் இயக்கிய காதலிக்க நேரமில்லை என்ற படத்தில் அறிமுகமாகி பல படங்களில் நடித்திருந்தாலும் எம்.ஜி.ஆருடன் பறக்கும் பாவை படத்தின் இரண்டாம் கதாநாயகியாக நடித்து அவரை ஒருதலையாக காதலிக்கும் நர்ஸ் பெண்ணாக வந்து பின்னர் அவர் தன்னை காதலிக்கவில்லை என்பதை அறிந்ததும் அவர் காதலிக்கும் சரோஜாதேவியை கொலை செய்ய ஆட்களை நியமிக்கும் கொலைகார எண்ணம் கொண்ட ஒரு வில்லியாகவும் இந்தப் படத்தில் நடித்த பின்பு பிரபலமானார். அதுவரை இது போன்ற அழகிய வில்லியை பார்த்திராத தமிழக ரசிகர்களின் மனதில் காஞ்சனா இடம் பிடிக்க தொடங்கினார். பின்னர் எம்.ஜி.ஆருடன் நான் ஏன் பிறந்தேன் படத்தில் நடித்தார்.



ஏ.வி.எம். ராஜன், இரவிச்சந்திரன் ஜெமினி கணேசன் போன்ற நடிகர்களுடன் சிறப்பாக நடித்து வந்த காஞ்சனா சிவாஜியுடன் ஜோடி சேர்ந்து சிவந்தமண் படத்தில் நடித்தபிறகு கொஞ்சம் கொஞ்சமாக திரையுலகை விட்டு காணாமல் போய்விட்டார்.

இவ்வாறாக எம்.ஜி.ஆர். அறிமுகம் செய்த கதாநாயகிகள் சிறப்பாக நடித்தனர் வாழ்ந்தனர். அவருடைய படத்தில் நடித்தபிறகு பிரபலமானவர்கள் திரையுலகில் சிறப்பான இடத்தைப் பெற்றனர். சரோஜாதேவி, பாரதி, கே. ஆர் விஜயா போன்ற சிலர் இன்றும் கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளில் நடித்துக் கொண்டிருக்கிறார்கள்.



7. தேவையறிந்து உதவிய தெய்வத்தின் பிள்ளை

திரையுலகிலும் வெளி உலகிலும் இடர்ப்பாடுகள் வந்த போது பெண்களை காவல் காக்கும் காவல்காரனாக எம்.ஜி.ஆர். விளங்கினார். திரைப்படங்களில் பெண்கள் ஆதரவின்றி தவிக்கும் பொது அபயக் குரல் கொடுக்கும் போது அது எப்படியோ எம்.ஜி.ஆரின் காதுகளுக்கு எட்டி அங்கு எம்.ஜி.ஆர். ஆபத்பாந்தவன் போல அனாதரட்சகன் போல வந்து நிற்பார். நிஜ வாழ்விலும் அவர் தன்னை நோக்கி அழைத்தவர்களுக்கு மட்டுமல்ல தன்னிடம் வந்து உதவி என்று கேட்காதவர்களுக்கும் அவர்களின் தேவை அறிந்து தானாக முன்வந்து உதவி இருக்கிறார்.

"தன்னை நாடியவருக்கு தானே உதவ முடியும் நாடாருக்கு எப்படி உதவ முடியும்" என்று கேட்ட முதலமைச்சர்கள் வாழ்ந்த தமிழகத்தில் தேவை



இருப்போரை தேடி போய், ஓடி போய் உதவிய தனி பண்பு உடையவர் எம்.ஜி.ஆர்.

உதவி செய்வது ஓர் தன்னிச்சை செயல்

வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன் என்று திருமூலர் சொன்னது போல எம்.ஜி.ஆர். வாடிய மனிதர்களை காணும் போதெல்லாம் இவர்கள் என் மீது இவ்வளவு அன்பு வைத்திருக்கிறார்களே இவர்களுக்கு நான் என்ன செய்ய போகிறேன் என்று வாடி கண் கலங்குவாராம். வாடி இருப்போர் யாராக இருந்தாலும் எம்.ஜி.ஆரின் மனதில் ஈரம் கசிந்தது. உடனே உதவினார். உதவ வேண்டும் என்று அவர் நினைக்கும் முன்னரே அவர் மனம் தன்னிச்சையாக உதவிற்று.

பிறருக்கு உதவுதல் எம்.ஜி.ஆரின் உடம்பில் அமைந்துவிட்ட reflexive action. அதாவது தன்னிச்சை செயல். கண் அருகே பூச்சி பறந்தால் உடனே கை அதை தட்டி விடும். காலில் பூச்சி கடித்தால் தூக்கத்தில் கூட கை அதை தட்டி விடும். இதை தான் தன்னிச்சை செயல் என்பார் உடலியல் அறிஞர்.

திருவள்ளுவர் நட்பு பற்றிய அதிகாரத்தில் இந்த தன்னிச்சை செயலை ஒரு உவமையாக காட்டுவார்.

உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

என்பார். நழுவும் ஆடையை சரி செய்யும் கைகள் போல நண்பனுக்கு ஒருவன் உதவ வேண்டும் என்கிறார் வள்ளுவர். இதை போலவே எம்.ஜி.ஆரின் உதவும் குணமும் இருக்கும். அவர் நல்லவர் கெட்டவர் நமக்கு வேண்டியவர் வேண்டாதவர்

என்று ஆலோசிக்காமல் சட்டென்று உதவிவிடுவார். எனவே உதவி செய்வது அவரிடம் தன்னிச்சையாக அமைந்த செயல்பாடு.

மூதாட்டி மற்றும் இளம்பெண்

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். மைசூரில் இருந்து பகலில் சென்னைக்கு காரில் திரும்பி கொண்டிருக்கிறார். அவருடன் அவரது மனைவி ஜானகி அம்மையாரும் மைத்துனர் மகள் லதாவும் இருக்கின்றனர். ஒரு இடத்தில் கார் வரும் போது 'வண்டிய நிறுத்து' என்று சொல்லி 'ஜானு உன் செருப்பை கழட்டு' என்றார். 'லதா நீயும் கழட்டும்மா' என்றார். இருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. கழட்டிவிட்டனர். ஒரு மூதாட்டியும் இளம்பெண்ணும் தலையில் விறகு சுமையுடன் வெயிலில் கால் சூடு தாங்காமல் ஓட்டமும் நடையுமாக வருகின்றனர். மர நிழலில் நின்று சற்று இளைப்பாறுகின்றனர். பிறகு நடக்கி றனர். அவர்கள் காருக்கு அருகில் வரும்போது அவர்களை அழைத்து செருப்பை கொடுக்க சொல்கிறார். அவர்கள் கண்களில் கண்ணீர் பெருக நன்றி சொல்கின்றனர். காலில் செருப்பை மாட்டிக்கொண்டு கொஞ்சம் ஆசுவாசமாக நடக்கின்றனர். அதை பார்த்துவிட்டு எம்.ஜி.ஆரின் கார் கிளம்புகிறது.

டபுள்ஸ்

அவர் முதலமைச்சரானதும் மிதிவண்டியிலிருவர் செல்லலாம் என்ற உத்தரவை பிறப்பித்தார். இதனால் கணவனும் மனைவியுமாக இருவரும் சேர்ந்து பயணித்து மகிழ்ந்தனர். மடியில் ஒரு குழந்தையும் முன்கம்பியில் பொருத்தப்பட்டுள்ள சிறு இருக்கையில்



மூத்த குழந்தையுமாக குடும்பத்துடன் கோவில் திருமணம் திரையரங்கு என்று சென்று வந்தனர். இது சிறிய விஷயமாக இப்போது தோன்றலாம் ஆனால் அந்தக் காலகட்டத்தில் பெண்கள் பெரும்பாலும் மாமியார் நாத்தனாருடன் தான் விசேஷங்களுக்கும் திரையரங்குக்கும் செல்வதுண்டு கணவனோடு செல்வதற்கு வாய்ப்பில்லை. இந்த சைக்கிள் சவாரிக்கு அனுமதி கிடைத்ததும் ஜோடி ஜோடியாக செல்லத் தொடங்கினர். வீட்டில் பேச முடியாத ரகசியங்களை கணவனின் காதில் சொல்லிக்கொண்டே செல்லலாம். இந்த சைக்கிள் சவாரி அவர்களுக்கு ஒரு தனிமையும் நெருக்கமும் கிடைக்கக் காரணமாயிற்று.

பணியிட மாற்றம்

எம்.ஜி.ஆர். திரைப்படங்களில் பெண்களுக்கு ஆதரவாக இருப்பது போலவே நிஜ வாழ்விலும் இருந்தார். கணவன் மனைவி என இருவரும் வேலை செய்தாலும் இருவரும் வெவ்வேறு இடங்களில் பணி செய்தால் அவர்களுக்கு இடையே நிம்மதி இராது. திருமணமான பெண்களுக்கு அவர் தன் கணவரே பாதுகாப்பு அரண் என்பதை நன்கு உணர்ந்த எம்.ஜி.ஆர். தமிழக முதல்வரானதும் பெண்கள் வேலை பார்க்கும் ஊர்களுக்கு அவர்களின் கணவன்மாருக்கு பணியிட மாற்றம் கிடைக்க அரசாணை பிறப்பித்தார். குடும்பம் பிரிந்து இருப்பதால் பல பிரச்சனைகளை பெண்கள்

சந்திக்க கூடும்; அவர்கள் பாதுகாப்பற்றவர்களாக உணர்வர் என்பதை அறிந்து எம்.ஜி.ஆர். ஒரு மூத்த சகோதரனைப் போல அவர்களின் எண்ணங்களுக்கும் ஏக்கங்களுக்கும் மதிப்பளித்து கணவன்மார் பணியிடம் மாற்றம் பெற வழி வகைகள் செய்தார். குடும்ப ஒற்றுமையை பேணி காப்பதில் வேறு எந்த முதலமைச்சரும் எம்.ஜி.ஆரைப் போல அக்கறை எடுத்ததில்லை.

விதவையர் மறுமணம்

கணவன் பணியில் இருக்கும்போது இறந்து போனால் அவரது துறையில் வாரிசுகளுக்கு வேலை வழங்கப்படும். அவரது சகோதரருக்கோ அவரது மனைவிக்கோ அவர்களின் படிப்புக்கு ஏற்ற ஒரு வேலை கிடைக்கும். அப்போது சில இளம்பெண்கள் கணவரின் வாரிசு வேலையை பெற்றுக்கொண்டு பிறகு மறுமணம் செய்து கொண்டனர். இதை முதல்வரின் கவனத்துக்கு சிலர் கொண்டு சென்றனர். விதவைகள் பொருளாதார ஆதரவில்லாத காரணத்தால் கணவரின் மரணத்துக்கு பின் வாரிசு வேலை பெறுகின்றனர். ஆனால் மறு மணம் செய்துகொள்ளும் போது இவர்களுக்கு சம்பாதித்து போட இன்னொருவர் வந்துவிட்டபடியால் முதல் கணவரின் வாரிசு வேலையை ராஜினாமா செய்து விட வேண்டும் என்று அரசாணை பிறப்பிக்கும்படி எம்.ஜி.ஆரிடம் வேண்டி கொண்டனர்.

எம்.ஜி.ஆர்., விதவையை மறுமணம் செய்துகொள்ள எவரும் விரும்புவதில்லை. மனைவியை இழந்தவன் கூட முன்வருவதில்லை. இச்சூழ்நிலையில் ஒருவன் ஒரு விதவையை திருமணம்

செய்ய முன்வருகிறான் என்றால் அவளது வேலையும் வருமானமும் தான் முக்கிய காரணம். அந்த வேலையை இழக்க வேண்டும் என்றால் இந்த விதவைப் பெண்களுக்கு மறு மணம் நடக்க வாய்ப்பில்லை. எனவே அந்த வேலையில் அவர்கள் தொடரட்டும் என்று சொல்லிவிட்டார். இந்த பதிலுரையை பத்திரிகையில் படித்த இளம் விதவைகள் எம்.ஜி.ஆரை தம் குலதெய்வமாக மனதுக்குள் நினைத்து வணங்கி வருகின்றனர்.

போராட்டத்தில் பெண்கள்

ஒரு முறை தமிழகம் எங்கும் இருந்து நெசவாளர்கள் சென்னைக்கு வந்து ஒரு போராட்டம் நடத்தினர். அப்போது சைதை துரைசாமி அவர்களும் மற்ற தொண்டர்களும் போராட்டக்காரர்களுக்கு ஏதேனும் உதவி செய்ய வேண்டும் என கருதி எம்.ஜி.ஆரை அணுகி ‘அண்ணே நெசவாளர்கள் பத்தாயிரம் பேர் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். இவர்களுக்கு இங்கு சாப்பாடு கிடைக்கவில்லை; கிடைக்கும் சாப்பாடும் விலை அதிகமாக இருக்கிறது; இவர்களால் வாங்கி சாப்பிட முடியவில்லை; பலர் பசியால் வாடுகின்றனர் என்றனர். சரி போ ஏற்பாடு செய்கிறேன் என்றார் எம்.ஜி.ஆர்.

மதியம் போராட்டக் களத்துக்கு எல்டாம்ஸ் ஓட்டலில் இருந்து 20,000 உணவு பொட்டலங்கள் வந்து இறங்கின. சைதையார் உடனே எம்.ஜி.ஆரை தொடர்பு கொண்டு “அண்ணே இருபதாயிரம் பொட்டலம் வந்திருக்குண்ணே. நான் பத்தாயிரம் தான் சொன்னேன்” என்றார். எம் ஜி ஆர் “போராட்டக்காரர்களோடு அவர்கள் மனைவிகளும் வந்திருக்கிறார்களே;

அவர்களை பட்டினியாக போடவா? அதனால் நான் தான் இருபதினாயிரம் தயார் செய்யச் சொன்னேன் என்றார். இந்தப் பதிலை கேட்ட சைதையார் கண் கலங்கிவிட்டார்.

எம்.ஜி.ஆர். ஒரு பிரச்சனையை அனைத்து பரிமாணங்களிலும் ஆலோசித்து முடிவெடுப்பார். ஒருவரை விட்டு ஒருவர் உணவருந்துவது ஈருடல் ஓருயிராய் இணைந்திருக்கும் நல்ல கணவன் மனைவிக்குள் நடக்காது என்பதை எம்.ஜி.ஆர். அறிவார். எனவே இருவருக்குமாக சேர்த்து உணவளித்தார். அன்று மதிய உணவு வயிறார சாப்பிட்ட நெசவாளர்களின் மனைவிமார் எம்.ஜி.ஆரை மனமார வாழ்த்தி இருப்பார்கள். கணவன்மார் மனைவியும் பசியாறினாளே என மகிழ்ந்திருப்பர்.

கணவனும் மனைவியும் இணைந்து வாழ வேண்டும். அவர்கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து தங்களின் பிரச்சனைகளைப் பிறரறியாத வகையில் தங்களுக்குள் தீர்த்துக்கொண்டு அன்பாக வாழவேண்டும் என்பதில் அதிக அக்கறை உள்ளவர் எம்.ஜி.ஆர். அவர் திருமண விழாக்களுக்கு போகும் போது மணமக்களுக்கு இதையே அறிவுரையாக கூறுவார். அவர்கள் இணைந்து வாழ தன்னாலான உதவிகளை செய்வார். ஒரு பெண்ணுக்கு நல்ல மண வாழ்க்கை அமைய வேண்டும் என்பதில் ஆர்வமும் அக்கறையும் கொண்டவர். மனிதாபிமானம் மிக்க நடவடிக்கைகளை எடுப்பவர் என்பதை விளக்கும் சிறந்த உதாரணங்களாக மேற்காட்டிய சம்பவங்கள் திகழ்கின்றன.

மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்

எம்.ஜி.ஆரின் கடைசி படமான மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் தஞ்சை சோழ மண்ணைச் சேர்ந்த கருணாநிதியிடம் இருந்து தமிழகத்தை மீட்ட எம்.ஜி.ஆரை மதுரை பாண்டியன் எனக் குறித்த படம் ஆகும். இப்படத்தில் அவர் ஒரு முதியவரை போலவும் லதா அவரது இளம் சீடர் போலவும் மாறு வேடம் பூண்டு வரும் காட்சியில் ஒரு மூதாட்டியிடம் இவர்கள் கூழ் வாங்கி குடிப்பதாக ஒரு காட்சி வரும் அக்காட்சியில் உணவின் மகத்துவத்தை 'வயிறார சப்பிட்ட பின்பு மனதார வாழ்த்துகிறார்களே அந்த வாழ்த்து உண்மையானது அதை நம்பலாம்' என்பார். இது படத்துக்காக மட்டும் எழுதப்பட்ட வசனம் அல்ல. நிஜ வாழ்க்கையில் இது அவருடைய நம்பிக்கை. இந்த நம்பிக்கையின் காரணமாக அன்று நெசவாளர்களின் மனைவிமாருக்கும் உணவளித்தார். அவர்கள் தம் நன்றிக்கடனாக எம்.ஜி.ஆருக்கு வாக்களித்தனர்.

எம்.ஜி.ஆர். ஒருவருடைய துன்பத்தை அவரது கோணத்தில் இருந்தும் ஆராய்ந்து உதவிகளை செய்ய முன் வருவார். வறட்டு தர்ம நியாயங்களை பேசி மற்றவர்களை வருத்தப்பட வைக்க மாட்டார். எம்.ஜி.ஆர். ஆணாதிக்கம் பிடித்த சமுதாயத்தின் ஓர் ஆண் பிரதிநிதியாக இருந்து ஆராயாமல் ஒரு தகப்பனைப் போல ஒரு மூத்த சகோதரனை போல பெண்களின் பிரச்சனையை அணுகியதால் இவர்களின் கண்ணீர் துடைக்கப்பட்டது. அவர்களும் எம்.ஜி.ஆரை தம் உயிரினும் மேலாக மதித்து தங்கள் காலம் வரை மட்டுமல்லாது தங்கள் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் காலம் வரை அவரை நினைவில் இருத்தி போற்றி புகழ்ந்து அவரது கட்சிக்கு வாக்களித்து வருகின்றனர்.

8. எம்.ஜி.ஆர். காதல் பாடல்களில் மலரும் மணமும் – பகுதி 1

சங்க காலம் தொட்டு காதலன் காதலிக்கு பூக்களும் தழைகளும் சேர்த்து கட்டிய பூங்கொத்தை பரிசாகத் தரும் பழக்கம் இருந்து வருகிறது. இதை கையுறை என்கிறது சங்க இலக்கியம். கையுறை என்பது காதல் பரிசு அல்ல; அன்பு காணிக்கை. ஏனென்றால் தலைவனோடு பழகிய பரத்தை அவனது மகனை தெருவில் கண்ட போது அச் சிறுவனைத் தன் வீட்டுக்குள் அழைத்துச் சென்று தங்கப் பூண் ஒன்றை நெய் தடவி கையில் மாட்டி விடுகிறாள் இதுவும் கையுறை தான்.

சங்க இலக்கியத் தோழி காதலன் கையுறையாக 'தழையும் மலர்களும் சேர்த்து கட்டிக்' கொடுத்து அதை தலைவியிடம் கொடுத்து தன் காதலை



அவளிடம் வெளிப்படுத்தும்படி சொல்லும்போது அவள் அதை பெற மறுத்துவிடுகிறாள். இதை தொல்காப்பியம் கையுறை மறுத்தல் என்கிறது. தமிழர் வாழ்வின் பண்பாட்டு வளர்ச்சிக்கு ஆதாரமாக விளங்கும் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் ஆதிகாலம் தொட்டு காதலன் காதலிக்கு இடையே பூக்கள் அன்பளிப்பாக வழங்கப்படுவதை தெரிவிக்கிறது.

கூந்தலில் பூச்சூட்டடல்

கூந்தலில் முதன் முதலாக பூச்சூட்டுதல் காதலன் காதலிக்கு தரும் அன்பளிப்பாக இருப்பதால் தான் அவன் இறந்த பிறகு பூ களைதல் ஒரு கைம்மைச் சடங்காயிற்று. தன் மகளின் கூந்தலில் பூ மணப்பதை உணர்ந்த சங்க காலத்தாய் தன் மகள் யாரையோ காதலிக்கிறாள் என்பதை புரிந்துகொள்கிறாள். அதுவரை பெண்கள் தலையில் பூச்சூடுவது கிடையாது. தலைமாலை என்னும் கண்ணி ஆண்களுக்கு மட்டுமே உரியதாகும். இன்றும் சில சமூகத்தினர் திருமண நிச்சயதார்த்தம் செய்யும் சடங்காக பெண்ணுக்கு பூ வைத்தல் சடங்கு நிகழ்த்துகின்றனர். அதாவது அவளுக்கு பூ வைப்பதால் இனி அந்த பெண் ஒரு ஆணுக்கு உரியவள் ஆகிறாள்.

நாட்டுப்புறக் காதல் பாடலில் பூக்கள்

சங்க இலக்கியப் பாடல் மட்டுமல்லாது நாட்டுப்புறப் பாடல்களிலும் காதலன் தன் காதலிக்கு பூ வாங்கி கொடுத்து தன் அன்பை தெரிவிப்பது பதிவாகி உள்ளது.

ரயில் மேலே போற பெண்ணே
ரோஜாப்பூ வாங்கி தாறேன்
ரயிலை விட்டு கீழிறங்கி வா வா வா

மலை மேலே போற பெண்னே
மல்லிகை பூ வாங்கி தாறேன்
மலையை விட்டு கீழிறங்கி வா வா வா

பூத்தரு புணர்ச்சி

காதல் தோன்றும் களங்களாக தொல்காப்பியர் விளக்கும்போது மூன்றினை குறிப்பிடுவார் அவற்றில் ஒன்று பூத்தருப புணர்ச்சிஆகும். காதலி ஆசைப்படும் பூவை அவளுக்கு பறித்துக்கொடுத்து அவளை மகிழ்வித்து அவள் அன்பை பெறுவதாகும். அன்பே வா படத்தில் சரோஜா தேவி, எம்.ஜி.ஆரிடம் 'அந்த பூவை பறித்து தாருங்கள் அதை என் கன்னத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்' என்று ஆசை காட்டி அவரை ஜில் தண்ணீரில் விழ வைத்து கார் சாவியை கொண்டு வந்து விடுவார். பிறகு அதனால் அவருக்கு டபுள் நிம்மோனியா வந்துவிட்டதாக கருதி உருகுவார். இப்படியாக அவர்களுக்குள் காதல் மலரும் வளரும். இதில் ஒரு காதல் கனவு காண்பார் சரோஜா தேவி

ராஜாவின் பார்வை
ராணியின் பக்கம்
கண் தேடுதே சொர்க்கம்
கை மூடுதே வெட்கம்
பொன் மாலை மயக்கம்
பொன் மாலை மயக்கம்



என்ற பாடல் ஒரு பிரெஞ்சு மொழி படத்தை பார்த்து அது போல ஏ வி எம் செட்டியார் எடுக்க ஆசைப்பட்டு எடுத்த பாடல் காட்சி ஆகும். அந்த காட்சியில் சரோஜாதேவியின் கிரீடம், உடை ஆகியன எலிசபெத் மகாராணியின் கிரீடம் மற்றும் உடையை பார்த்து வடிவமைத்ததாகும். இன்று வரை எம்.ஜி.ஆர். ரசிகர்களின் விருப்பப் பாடலாக இப்பாடல் இருந்து வருகிறது.

ஏன் பூ தர வேண்டும்?

பூவின் மணம் மனதை மயக்கும். இங்குள்ள பூக்கள் தான் மணக்கும். வெளிநாடுகளில் கடும் பனி பெய்வதால் அங்கு பூக்கள் மணக்காது. மேலும் அங்கு வெப்ப நாடுகளை போல பல வகை பூக்களும் கிடையாது. வெளி நாட்டினரை அதிகமும் மயக்கும் ரோஜாப்பூ கூட வளை குடா நாடுகளில் தான் அதிகமாகப் பூக்கின்றது.

மலரும் மங்கையும் ஒரு ஜாதி
தன் மனதை மறைப்பதில் சரி பாதி

என்றார் திரையிசை கவிஞர். அதனால் பூக்களைப் பார்த்து அவள் மகிழ்ந்தால் தன் காதலை ஏற்றுக்கொண்டாள் என அறியலாம் அல்லது அவள் மனதில் இருப்பதை அறிய இயலாது.

தாழம்பூ

எம்.ஜி.ஆர். ஓர் உண்மை கொலைகாரனை அறிய தோட்டக்காரனாக கே.ஆர்.விஜயா வீட்டில் வந்து சேர்ந்திருப்பார். விஜயாவுக்கு அவர் பட்டதாரி என்பது தெரியும் என்பதால் அவர் ஒரு தலையாக எம்.ஜி.ஆரை காதலிப்பார். அப்போது

ஏரிக்கரை ஓரத்திலே
எட்டு வேலி நிலம் இருக்கு
எட்டு வேலி நிலத்திலயும்
என்ன போட்டால் தோப்பாகும்

எனப் பாடுவார். அதற்கு கே ஆர் விஜயா எம்.ஜி.ஆருக்கு ஈடு கொடுத்து

வாழை போட்டால் தோப்பாகும்
மஞ்சள் வைத்தல் பிஞ்சு விடும்
ஆழமாக உழுது போட்டால்
அத்தனையும் பொன்னாகும்

என்று பதில் பாட்டு பாடுவார். இப்பாடலில் தன் மனக் கருத்தை குறிப்பாக உணர்த்துவார்.

காலம் இன்று கனியும் என்று
கனவு கண்டு வந்து விட்டேன்
கண்ட கனா பலிக்காதோ
கதவு இன்று திறக்காதோ



என்று எம்.ஜி.ஆர் வெளிப்படையாகவே தன் காதலுக்கு வழி உண்டா என்று கேட்பார். அப்போது அவர் கையிலொரு ரோஜா மலர் இருக்கும் இந்த மலரை விஜயாவிடம் உயர்த்தி காட்டி அதை முகர்ந்து பார்த்தபடியே பாடி வருவார். இந்தப் பாட்டில் காதலும் காமமும் களி நடம்புரியும். விஜயா எம்.ஜி.ஆர். அருகே வந்து நின்றதும் அந்த மலரை விஜயாவின் கூந்தலில் செருகுவார். இருவர் மனதிலும் காதல் கனிந்ததை இக்காட்சி அழகாக நயமாக வெளிப்படுத்தும்.

சுண்டி விடும் மல்லிகை பூ

எம்.ஜி.ஆரின் காதல் பாடல்கள் ஸ்வீட்டாக இருக்கும் என்று ஸ்ரீ தேவி ஒரு பேட்டியில் சொன்னார். பெண்களை கவரும் வகையில் நனி நாகரிக முறையில் காதல் காட்சிகளை எம்.ஜி.ஆர். கவனமாக எடுத்திருப்பார். பெண்கள் முகம் சுளிக்காத வகையில் அதே சமயம் ரசிக்கத்தக்க வகையில் இக்காட்சியை தனி கவனம் செலுத்தி எடுப்பார். சண்டை காட்சிக்கு தரும் கவனத்தை காதல் காட்சிக்கும் தருவார்.

எம்.ஜி.ஆரைக் கல்யாணம் செய்ய அனுமதி தராத சூழ்நிலையில் தன் அப்பாவின் வீட்டை விட்டு கிளம்பி வந்து எம்.ஜி.ஆரின் வீட்டில் தங்கியிருப்பார் சரோஜாதேவி. அப்போது ஓர் இரவில் இருவரும் தனியே தோட்டத்தில் சந்திக்கின்றனர். ஒரு பாட்டு பாடும்படி தன் காதலியை கேட்கும் எம்.ஜி.ஆர். அந்த நள்ளிரவில் அங்கு பூத்திருந்த ஒரு மல்லிகை பூவை இலையோடு கிள்ளி தன் உள்ளங்கையில் வைத்து தன் நடுவிரலால் சுண்டி விடுகிறார். அடுத்த காட்சியில் அந்த பூ காதலியின் கொண்டையை அலங்கரிக்கிறது. இது இரு மனம் ஒப்பிய காதல் உணர்வை புலப்படுத்துகிறது.

பாட்டு ஒரு பாட்டு
பாட்டு ஒரே ஒரு பாட்டு – காதல் பாட்டு
ஏட்டினிலும் எழுத்தினிலும்
ஒரே ஒரு பாட்டு – அதை
எழுதும்போது மயக்கம் வரும்
ஒரே ஒரு பாட்டு ;

என்ற இக்காதல் காட்சியில் எம்.ஜி.ஆர். சரோஜாதேவியை அவர் நாடியில் தன் நடு விரலால் சுண்டுவார். அந்தக் காதலின் முதல் தொடுகை. அதே முறையில் அவருக்கு சரோஜாதேவியால் திருப்பி தரப்படும். அவரும் அதே மாதிரி தன் நடு விரலால் எம்.ஜி.ஆரை சுண்டுவார். சிறிய செய்கை ஆனால் பெரிய விளைவு. ஏதோ கேரம்போர்டு விளையாடுவதை போல ஒருவரை ஒருவர் சுண்டி விளையாடுவர். இரவில் தனிமையில் தன் வீட்டில் காதலியை சந்திக்கும் காதலனுக்கு அவளைத் தொட்டு விளையாட ஆசை வரும். அந்த ஆசையை

இருவரும் மிகுந்த கண்ணியத்தோடு வெளிப்படுத்தும் அழகை இப்படத்தில் காணலாம். காதலியை ஒற்றை விரலால் தொடும்போது ஏற்படும் கிளர்ச்சியே இக்காட்சியின் சாரம் ஆகும்.

நீ அறியும் பூவே

சங்க காலத்து காதலன் தழைகளாலும் பூக்களாலும் ஒரு சரம் கட்டி கொடுப்பதும் உண்டு. அவள் தலையில் பூச்சூட்டி முகர்ந்து பார்ப்பதுண்டு. அதனால் தான் பாண்டிய மன்னனுக்கு பெண்கள் கூந்தலில் இயற்கை மணம் உண்டா என்ற சந்தேகம் வந்த போது இறையனார்

கொங்கு தேர் வாழ்க்கை அஞ்ச்சிறை தும்பீ
காமம் செப்பாது கண்டது மொழிமோ

என தும்பியை அழைத்து "நீ அறியும் பூவே" என முடிக்கிறார். இந்த சந்தேகமே இல்லாமல் எம்.ஜி.ஆர். தன் காதல் காட்சிகளில் காதலியின் கூந்தலை தடவுவதும், அதை முகர்வதும் கூந்தலைப் பிரித்து விரலால் அளைவதுமாக ஒரு காட்சியை வைத்திருப்பார். சாவித்திரியுடன் வேட்டைக்காரன் படத்தில் தேனிலவு காட்சியில்

ஒரு கதாநாயகன் கதை சொன்னான்
கண்ணுக்குள்ளும் இந்த நெஞ்சுக்குள்ளும்
ஒரு கதாநாயகன் கதை சொன்னான்

பாட்டு பாடும்போது எம்.ஜி.ஆர். சாவித்திரியின் சடை பின்னலை எடுத்து தன் கழுத்தை சுற்றி போட்டுக்கொள்வார்.

வண்ண மலர் மாலை கட்டி

நீதிக்குப் பின் பாசம் படத்தில் சரோஜாதேவி எம்.ஜி.ஆருக்கு சிறப்பு செய்யும் வகையில் ஒரு விளையாட்டுக் கல்யாணம் போல அங்கு கிடைக்கும் பூக்களை தொடுத்து.

வண்ண மலர் மாலை கொண்டு வடிவழகைத் தேடி வந்தேன்
வாழ வைத்த தெய்வம் என்று வணங்கி நின்றேன் –இனி
வாழ்வும் தாழ்வும் உன்னதென்று என்னைத் தந்தேன்

என்று அந்த மாலையை ஒருவருக்கு சூட்டி பின் இருவருமாக மாலைக்குள் இணைந்து மாலையும் மணமும் போல கலந்து மகிழ்வர்.

மானல்லவோ கண்கள் தந்தது
மயில் அல்லவோ சாயல் தந்தது
தேனல்லவோ இதழை தந்தது
சிலை அல்லவோ உடலை தந்தது

என பாடி எம்.ஜி.ஆர். வருணிப்பார். அதற்கு பதில் பாடும் சரோஜாதேவி

தேக்கு மரம் உடலை தந்தது
சின்ன யானை நடையை தந்தது
பூக்கள் எல்லாம் சிரிப்பை தந்தது
பொன் அல்லவோ நிறத்தை தந்தது

என்பார். இங்கு எம்.ஜி.ஆரின் சிரிப்பை பூக்கள் எல்லாம் தந்தன என்று வருணித்து பாடியிருப்பார்.

எம்.ஜி.ஆரின் மலர்ந்த முகம் அனைவரின் உள்ளத்தை கொள்ளை கொண்டதனால் அவரது சிரிப்பை மலர்கள் எல்லாம் சேர்ந்து தந்ததாக கவிஞர் புனைந்துரைக்கிறார்.

தொழிலாளி படத்தில் புதுமுகமாக ரத்னா அறிமுகம் ஆனார். புதுமுகங்கள் விரைவில் ரசிகர்களிடையே சென்றடைய வேண்டும் என்பதற்காக காட்சிகளில் அதிக சிரத்தை எடுக்கப்படுவது மரபு. காதல் காட்சிகள் இப்படத்தில் மிகுந்த கவனத்துடன் எடுக்கப்பட்டிருக்கும். இருவருக்கும் உரையாடல் வடிவில் அமைந்த பாடல் காட்சி.

என்ன கொடுப்பாய் என்ன கொடுப்பாய்
அன்பை கொடுப்பேன் நான் அன்பை கொடுப்பேன்

என் ஆடிப் பாடி வரும்போது எம்.ஜி.ஆர். பல அடி நீளமுள்ள மலர்ச்சரத்தை வீசி ரத்னாவை தன்னுடன் சேர்த்து பின் இருவரும் அந்த மலர் சரத்தினுள்ளிருந்து வெளியே வருவதாக ஒரு காட்சி அமையும்.

ஏழைக்கும் மகிழ்ச்சி அளிக்கும் மலர்கள்

மலர்களால் சூழப்பட்டிருப்பது என்பது எம்.ஜி.ஆர். படத்தில் மகிழ்ச்சி நிரம்பிய காதல் காட்சிகளில் ஒன்றாகும். பெண்களைக் கவரும் வகையில் காதல் காட்சிகளை அமைக்கும் நோக்கில் இந்த மலர் காட்சிகள் படத்தில் இடம் பெறுகின்றன. மலர் அதிக செலவில்லாதது. ஏழைக் காதலனும் தன் காதலிக்கு ஒரு முழம் பூச்சரம் வாங்கி கொடுத்து

மகிழ்ச்சிப்படுத்த முடியும் என்பதால் இக்காட்சிகள் தன் நிதி நிலைக்கு உட்பட்டு இருப்பதால் அவர்களை காதல் காட்சியில் அதிகளவில் ஒன்றிப்போக வைக்கின்றன. இக்காட்சிகளை காணும் இளம்பெண்கள் காதலிக்கும் போது மலர்ச்சரம் கோர்த்து சூடி காதலரை மகிழ்விப்பது தொல்காப்பியர் காலம் தொட்டு நம் பண்பாட்டில் சிறப்பிடம் பெற்றுள்ளது. காதல் கனிந்து திருமணமான பிறகு கணவன் தன் மனைவியுடன் மகிழ்ச்சியாக பேசும் தருணங்களில் அவள் ஆக்கிப் போடும் உணவும் தொடுத்து சூடும் பூச்சரமும் வானத்து அமுதத்தை போன்றது என்பானாம்.

“ஏனது சுவைப்பினும் நீ கை தொட்டது
வானோர் அமுதம் புரையுமால் எமக்கு”
என அடிசிலும் பூவும் தொடுத்தற்கண்ணும்

புகழ்ந்து மகிழ்வான் என்கிறார் தொல்காப்பியர். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தொல்காப்பியம் அதற்கு முன்னர் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையை எடுத்துரைக்கிறது. அந்தக் காலத்தில் இளைஞரின் காதல் வாழ்வில் மலர்கள் பெற்றிருந்த மகிமையை அதன் இன்றியமையாமையை எடுத்தியம்புகிறது.

மலர் உடை

எம்.ஜி.ஆர். படங்களில் அதிக அளவில் மலர்கள் இடம்பெறும் காட்சிதிருமணமான பின்பு காட்டப்படும் இரவு காட்சி ஆகும். ஆயிரத்தில் ஒருவன் படத்தில் எம்.ஜி.ஆருக்கு புது ஜோடி அறிமுகம். ஜெயலலிதாவை வித்தியாசமாகவும்



சிறப்பாகவும் காட்ட வேண்டும் என்ற நோக்கில் இருவரும் இணைந்து மண வாழ்க்கையை தொடங்கும் காட்சியில் அவருக்கு மல்லிகை மலர்களால் தைக்கப்பட்டது போன்ற ஓர் உடை வடிவமைக்கப்பட்டது. அந்த மலர் உடையில் வரும் ஜெயலலிதாவை பார்த்து எம்.ஜி.ஆர்.

நாணமோ இன்னும் நாணமோ

என்று எம் ஜி ஆர் கேட்க

நாணுமோ பெண்மை நாணுமோ
தன்னை நாடும் காதலன் முன்னே –
திருநாளைத் தேடிடும் பெண்மை
நாணுமோ, நாணுமோ

என ஜெயலலிதா பாடுவதாக ஒரு காட்சி. இந்தப்பாடல் காட்சி இன்றும் பசுமையாக தமிழ் ரசிகர்கள் மனதில் நிற்கும் காதல் பாட்டு காட்சி ஆகும்.

இதயக்கனி படத்தில் ஆடி மாதம் திருமணமாகி ‘ஆவணி மாசம் அஞ்சாம் தேதி’ வரை காத்திருக்கும் எம்.ஜி.ஆர் – ராதா சலூஜா ஜோடி தேனிலவுக்காக பெங்களூர் வந்து ஊரைச் சுற்றி பார்த்துவிட்டு இரவு அறைக்குள் வந்ததும் அங்கு அவர்களின் படுக்கை, மலர் படுக்கையாக அலங்கரிக்கப்பட்டிருக்கும். அப்போது எம்.ஜி.ஆர். அந்த மலர்களை கூட்டி குவித்து ராதாசலூஜாவின் தலையின் மீது கொட்டுவார்.

இந்த படம் வெளிவந்ததும் எம்.ஜி.ஆர். ஒரு ரசிகரை பார்த்து ‘அம்மா படம் பார்த்தார்களா’ என்று கேட்டார் . ‘ஆமாம்’ என்றார். ‘அம்மா என்ன சொன்னார்கள்’ எனக் கேட்டார். ‘வர வர எம்.ஜி.ஆர். படம் கூட பார்க்க முடியாது போல’ என்று சொன்னார்கள். ‘சரி நீ போ’ என்று சொல்லிவிட்டு எம்.ஜி.ஆர். எடிட்டிங் டேபிளில் உட்கார்ந்து மீண்டும்



படத்தில் இருந்து சில நெருக்கமான காட்சிகளை வெட்டி எடுத்துவிட்டு அனைத்து திரையரங்குகளுக்கும் தகவல் கொடுத்தார். அந்த காட்சிகளை வெட்டிவிடுங்கள் என்றார்.

தாய்மார் முகம் சுளிக்கும் காட்சிகள் கணவன் மனைவியின் நெருக்கமான காட்சிகளாக இருந்தால் கூட அவை தன் படத்தில் இடம் பெறக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்தார். பெண்கள் ரசிக்கக்கூடியதாக காதல் காட்சிகள் இருந்ததால் அவரது படங்கள் திரும்ப திரும்ப பார்க்கப்படுகின்றன.



9. எம்.ஜி.ஆர். காதல் பாடல்களில் மலரும் மணமும் –பகுதி 2

பூ என்பது மண்ணும் மரபும் சார்ந்தது; மணம் நிரம்பியது; வண்ணங்கள் கொண்டது. அதன் படைப்பின் நோக்கம் தான் பூத்த செடியை போல இன்னொரு செடியை அல்லது மரத்தை, கொடியை உருவாக்க விதை தர வேண்டும். இந்த விதையை உற்பத்தி செய்ய தன் இனத்தை பெருக்க அந்த பூ படைக்கப்பட்டுள்ளதை போல பெண்ணும் படைக்கப்பட்டுள்ளாள். அவளும் தன் குடும்பத்துக்குரிய வாரிசை பெற்று வளர்க்கக் கடமைப்பட்டவள் ஆகிறாள். இதுவே அவளது படைப்பின் நோக்கமும் சமுதாயக் கடமையும் ஆகும். எனவே தான் பெண்ணை பூவுக்கு உவமையாக கூறுகின்றனர். பூவும் பெண்ணும் ஒரே இனமாக கருதப்படுகின்றன. மரபு வழியாக வந்த இக்கருத்தை எம்.ஜி.ஆரும் தன் பாடல்களில் காதல் காட்சிகளில் பெண்கள் விரும்பும் வகையில் பயன்படுத்தியுள்ளார்.

பூ வைத்த பூவை

வையை என்னும் பொய்யா குலக்கொடியான வைகை நதியின் அணைக்கட்டில் மாட்டுக்கார வேலன் படப்பிடிப்பு நடந்தது. மதுரை மல்லிகைப்பூ இல்லாமல் அங்கு ஒரு காதல் காட்சி எடுக்க முடியுமா?. வேலன் எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் இடம்பெறும் காதல் காட்சியில் எம்.ஜி.ஆர். தன் கை நிறைய மல்லிகை பூக்களை வைத்திருந்து அவற்றை

ஜெயலலிதாவின் தலையில் கொட்டுவார். அதில் இருந்து ஒரு மல்லிகை பூவை கையில் எடுத்து ஜெயலலிதா

பூ வைத்த பூவைக்கு பூக்கள் சொந்தமா
பூவுக்கும் தேனுக்கும்
பூச் சிந்தும் போதைக்கும்
ஈக்கள் சொந்தமா
ஐ லவ் யு ஐ லவ் யு ஐ லவ் லவ் யூஉ

எனப் பாடுவதாக காதல் காட்சி தொடங்கும். இந்த அணைக்கட்டில் உள்ள ஒவ்வொரு சிலையுடனும் நின்று போஸ் கொடுத்து பாடுவதாக இக்காட்சி எடுக்கப்பட்டிருக்கும். [இங்கு இருந்த கிருஷ்ணர், தொழிலாளி குடும்பம் போன்ற சிலைகளை என் மாமா கருப்பையா ஸ்தபதி செய்தவை ஆகும்.]

காதல் பூ

கண்ணன் என் காதலன் படத்தில் வாணிஸ்ரீ எம்.ஜி.ஆருடன் முதல் முறையாக ஜோடி சேர்கிறார். கதைப்படி பர்மா பெண் என்பதால் அதிகம் கவர்ச்சி காட்டும் வாய்ப்பு அப்படத்தில் அவருக்கு கிடைத்தது. கண்கள் இரண்டும் விடி விளக்காக என்று தொடங்கும் ஒரு பாடல் காட்சியில்

முத்தம் என்ற புத்தகத்தில் எத்தனை பக்கம் ம் ம்
எண்ணி எண்ணி பார்த்தால் எத்தனை வெட்கம்
இருட்டிலும் படிக்கின்ற எழுத்தல்லவா
சொல்லாமால் புரிகின்ற பொருள் அல்லவா

என்ற வரிகளை எம்.ஜி.ஆரும் வாணிஸ்ரீயும் ஒவ்வொரு வரியாக மாறி மாறி பாடுவர். இந்த

பல்லவியில் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று இலக்கணங்களும் காதலுக்குள் இருப்பதாக சொல்லப்பட்டன. இந்த பாட்டுக் காட்சியில் ஒரு கல் மேடையில் **<u>காதல</u>** என்ற எழுத்துக்கள் பூக்களால் அழகாக அமைக்கப்பட்டிருக்கும்.

அப்போது எம்.ஜி.ஆர்...

கண்கள் இரண்டும் விடிவிளக்காக
கட்டழகு மட்டும் வெட்ட வெளியாக
கைகளிரண்டும் தொட்ட சுகமாகக்
கலந்திருப்போம் நாம் யுகம் யுகமாக

என்று பாடி முடிக்கும் போது தன் கையில் இருந்த ஒரே ஒரு பூவை அந்த காதல என்ற பூ அலங்காரத்தின் கடைசி எழுத்தின் மேல் வைத்து அதை **<u>காதல்</u>** என்று மாற்றிவிடுவார். இது ஒரு நயமான காதல் மலர் காட்சி.



இந்தப்பாட்டும் திருமண நாளிரவை பற்றிய கற்பனை பாடலாக இப்படத்தில் அமைந்தது. இதில் 'கட்டழகு மட்டும்' என்று பாடும் எம்.ஜி.ஆர். அடுத்த வரியை வாணிஸ்ரீ பாடுவார் என்று எதிர்பார்ப்பார். ஆனால் நாணம் காரணமாக வாணிஸ்ரீ பாட மறுத்து தலையை அசைப்பார். பின்பு எம்.ஜி.ஆரே அந்த 'வெட்ட வெளியாக' என்ற வரியை பாடி நடிப்பார். பாட்டில் காட்டப்படும் இந்த காட்சி தமிழ் பெண்ணின் பண்பாட்டை விளக்கும் காட்சி என்பதால் பெண்களை மிகவும் கவர்ந்தது.

கொடுத்தவர் கரமோ தாமரை பூ

எம்.ஜி.ஆரை ரோஜாப்பூ என்றும் தாமரை பூ என்றும் வருணிப்பது உண்டு. எங்க வீட்டு பிள்ளை படத்தில் பெண் வீட்டுக்கு வரும் எம் என் நம்பியாரிடம் மாப்பிள்ளை எப்படி இருப்பார் என்று கேட்கும் போது அவர் ரோஸ் கலந்த சிவப்பு என்பார். பாசம்படத்தில் சரோஜாதேவியுடனான் 'பால் வண்ணம் பருவம் கண்டேன்' என்ற ஒரே ஒரு கனவு காட்சி காதல் பாட்டில் சரோஜாதேவி எம்.ஜி.ஆரை பார்த்து பாடும்போது 'பொன் வண்ணம் அங்கே கண்டேன் பூ வண்ணம் இங்கே கண்டேன்' என்பார். பரிசு படத்தில் சாவித்திரியும் எம்.ஜி.ஆரும் இடம்பெறும்காதல் காட்சியில் எம்.ஜி.ஆரை பார்த்து,

கூந்தல் கறுப்பு ஆஹா
குங்குமம் சிவப்பு ஓஹோ
கொடுத்தவர் கரமோ தாமரை பூ
ம் ம் ம் ம்



என்பார். பதிலுக்கு எம்.ஜி.ஆர். பாடும்போது இதே பல்லவியின் இறுதி வரியை கொண்டவள் கரமோ ரோஜாப்பூ என்பார்.

இரவுக்குறியில் செம்பருத்தி மலர்

குடியிருந்த கோயில் படத்தில் ஜெயலலிதாவை இரவில் ரகசியமாக காண வரும் எம்.ஜி.ஆர். ஒரு செம்பருத்தி பூவைப் பறித்து சன்னல் வழியாக வீட்டுக்குள் எறிவார். அந்த பூ 'சோதனையாக' ஜெயலலிதாவின் அப்பா குடிக்கும் பால் டம்ளரின் மீது வந்து விழும். இதன் பிறகு பல கலாட்டாக்கள் நடந்து முடியும். கடைசியில் இருவரும் தோட்டத்தில் சந்தித்து ஒரு செயற்கை குளத்தின் மீது தொங்கும் ஊஞ்சலில் அமர்ந்தபடி,

நீயே தான் எனக்கு மணவாட்டி - என்னை
மாலையிட்டு கை பிடிக்கும் சீமாட்டி –

நானே தான் உனக்கு விழிகாட்டி
உன்னை வாழ வைக்கக் காத்திருக்கு வழிகாட்டி

எனப் பாடி மகிழ்வர்.

சங்க இலக்கியத்தில் இரவு குறி [இரவு சந்திப்பு - குறி என்றால் குறியிடம்; இரவு குறி என்றால் இரவில் அவர்கள் சந்திப்புக்கு குறிக்கப்பட்ட இடம்] வரும் தலைவன் பெண் வீட்டின் அருகில் வந்து அவளைச் சந்திக்க வேண்டும்; அதுவும் அவள் வீட்டார் கூப்பிடும் சத்தம் கேட்கும் தொலைவுக்குள் இந்த சந்திப்பு நிகழ வேண்டும் என்று ஒரு வரையறை கொடுக்கப்பட்டிருக்கும். இதற்கெல்லாம் வரையறையா? எனக் கேட்டால், ஆம் அப்போது தான் அந்தப் பெண்ணுக்கு பாதுகாப்பு; அவள் அவனை வெளியே எங்கும் போய் இரவில் சந்திக்க கூடாது; அது அவளுக்கு ஆபத்தாகப் போய்விடும். நம் முன்னோர் தொல்காப்பியம்



என்ற இலக்கண நூலில் காதலுக்கும் இலக்கணம் வகுத்து வைத்திருகின்றனர். எம்.ஜி.ஆர். தனது படங்களில் இந்த இலக்கணத்தை பின்பற்றி காட்சிகளை எடுத்திருக்கிறார். அதனால் அவை மரபு மீறாமல் இருக்கின்றன. படம் பார்க்கும் ரசிகர்களுக்கு நம்பும்படியாகவும் இருக்கின்றன. தங்களை அந்தக் காட்சியில் இணைத்து பார்க்கவும் உதவுகின்றன.

தூய்மைக்கு தும்பை பூ

இன்று போல் என்றும் வாழ்க படத்தில் ஒரு பட்டிக்காட்டு பணக்காரனாகத் திருமணத்துக்கு பெண் தேடி சென்னைக்கு வருவார். ராதா சலூஜாவின் தோழிகள் எப்படி பெண் வேண்டும் என்று எம்.ஜி.ஆரை கலாட்டா செய்யும் போது அவரது மணப்பெண் வருணனையில் இதுவரை எவரும் பயன்படுத்தியிராத ஒரு பூ பெயர் இடம்பெறும்.

தும்பை பூ போலே துளசி செடி போலே

ஒரு பெண் தனக்கு மனைவியாக அமைய வேண்டும் எனப் பாடுவார். அக்காட்சியில் கதாநாயகி ராதா சலூஜா வெள்ளை நிறத்தில் நீண்ட உடை [மேக்சி] அணிந்திருப்பார்.

ஒற்றை ரோஜா பூ

ஒன்றே கால் கோடி வசூல் செய்த படமான இன்று போல் என்றும் வாழ்க படத்தில் சென்னையில் நடக்கும் ஆடம்பரங்கள் பட்டிக்காட்டை சேர்ந்த எம்.ஜி.ஆருக்கு பிடிக்காது.

ஆனால் கதாநாயகி ராதா சலூஜா தன் பிறந்த நாள் விழாவுக்கு எம்.ஜி.ஆரை அழைத்திருப்பார். அப்போது எம்.ஜி.ஆர். ஒரு ரோஜாப்பூவை மட்டும் கையில் ஏந்தி வந்து ராதா சலூஜாவுக்கு கொடுத்துவிட்டு வாழ்த்து சொல்வார்.

ஜானகி ராமச்சந்திரன்

எம்.ஜி.ஆரின் காதல் மனைவி ஜானகி அம்மையார் தலை வாரி கொண்டை போட்டு பூ சூடி இருப்பார். அவர் தலையில் பூ இல்லாமல் அவரை எங்கும் பார்க்க இயலாது. எம்.ஜி.ஆரோடு இருக்கும் அனைத்து படத்திலும் அவர் தலையில் பூ சூடியிருப்பதை பார்க்கலாம். இறப்பு வீட்டிற்கு எம்.ஜி.ஆருடன் வரும்போது மட்டும் ஜானகி அம்மையாரின் தலையில் பூ இருக்காது. எம்.ஜி.ஆர். மறைந்த பிறகு அவர் பூச்சூடவில்லை. அவர் தமிழகத்தின் முதல் பெண் முதலமைச்சர் ஆனார். 28 நாட்கள் பதவியில் இருந்தார். அப்போது பல தனியார்பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி அளித்தார். எம்.ஜி.ஆர். அறிவித்த இலவசக் காலணி திட்டத்தைஇவர் தன் ஆட்சிக் காலத்தில் தொடங்கி வைத்தார். அந்த நாட்களில் அவர் தலையில் பூ கிடையாது .

ஜெயலலிதா

ஜெயலலிதா சென்னையில் சர்ச் பார்க் கான்வென்ட்டில் படித்ததால் பள்ளியில் சீருடை அணியும் போது பூ வைக்க அனுமதி இல்லை. அவர் சிறு வயதில் தினமும் பூ வைக்கவில்லை. நடன நிகழ்ச்சிகளில் மட்டும் பூச்சூடினார். பின்னர்

அதற்கும் பிளாஸ்டிக் பூக்கள் வைக்க தொடங்கிவிட்டார். சினிமா நடிகையான பிறகு விழாக்களுக்கு வரும் போது சடை போட்டிருந்தால் தலை நிறைய பூ வைத்திருப்பார். கொண்டை போட்டால் பூ வைக்க மாட்டார். பொதுவாக அவருக்கு பூ வைக்க பிடிக்காது. நல்ல வாசனை செண்ட்களை மட்டும் பயன்படுத்துவார்.

அரசியலில் முதல் வெற்றிக்கு உதவிய பிளாஸ்டிக் பூ

திண்டுக்கல்லில் முதல் அரசியல் களத்தை சந்தித்தார் எம்.ஜி.ஆர். அண்ணா திமுக ஆரம்பித்து ஆறு மாதத்தில் இடைத்தேர்தல் வந்தது. தேர்தலுக்கு பத்து நாட்களுக்கு முன்னால் உலகம் சுற்றும் வாலிபன் திரைக்கு வந்து வெற்றி நடை போட்டது. தேர்தலில் ஐந்து அரசியல் கட்சிகள் தனித்தனியாக மோதின. திமுக தவிர மற்ற அனைத்துக் கட்சிகளும் அண்ணா திமுகவின் வெற்றிக்கு முன்னால் டெபாசிட்டை இழந்தன.

திண்டுக்கல் தேர்தலில் பெண்கள் ஒரு வாக்கு சேகரிப்பு புரட்சி செய்தனர். அண்ணாதிமுக சார்புள்ள பெண்கள் அதன் கட்சி சின்னமான இரட்டை இலையுடன் கூடிய ஒற்றை ரோஜாவை தலையில் சூடிய படியே இருந்தனர். இந்த பூவில் இருந்த இரட்டை இலை பார்ப்பவர் கண்களில் பட்டு அண்ணாதிமுகவின் சின்னத்தை நினைவூட்டிய படியே இருந்தது. ஒரு காங்கிரஸ் பிரமுகர் வீட்டில் இந்த பூவால் பெரிய பிரச்சனையே வந்துவிட்டது. ஆனால் அந்தப் புது மருமகள் கணவரை பிரிய நேரிட்டாலும் கூட அந்த பூவை அகற்ற மாட்டேன்; எம்.ஜி.ஆர். மீதான பற்றை

மாற்றிக்கொள்ள மாட்டேன் என்று உறுதியாகத் தெரிவித்துவிட்டார். பெண்களின் இந்த மனஉறுதியும் ஒற்றை ரோஜாவும் திண்டுக்கல் தேர்தலில் எம்.ஜி.ஆருக்கு அமோக வெற்றியை அளித்தது. அரசியல் பற்றி அதிக ஆர்வமோ விருப்பமோ இல்லாமல் இருந்த பெண்கள் எம்.ஜி.ஆர். அரசியல் கட்சி தொடங்கியதும் அவரது வெற்றியை தமது வெற்றியாகக் கருதினர். பிளாஸ்டிக்காலான இரட்டை இலையுடன் கூடிய ஒற்றை ரோஜா அண்ணாதிமுகவின் சின்னமாக பெண்களின் கூந்தலில் ஒய்யாரமாக இடம் பெற்றது. எம்.ஜி.ஆரின் பொது கூட்டங்களுக்கு வரும்போதும் பெண்கள் இப்பூவைச் சூடிக்கொண்டனர்.



10. எம்.ஜி.ஆர். கொடுத்த காதல் பரிசு

எம்.ஜி.ஆர். படங்களை விரும்பி பார்ப்பதற்கு ஒரு முக்கிய காரணம் அவர் தன் படங்களில் பெண்களை மென்மையாக நடத்திய விதமும் அவர்களுடைய உணர்வுகளை மதித்து நடந்த விதமும் வயதானவர்களை தாயாகவும் இளம்பெண்களை சகோதரியாகவும் காதலியை சம மரியாதையுடனும் நடத்திய விதமும் என்று உறுதியாகக் கூறலாம். நிஜ வாழ்விலும் அவர் பெண்களைப் போற்றி பாதுகாத்து வந்தார். அவருடன் இணைந்து தன் திரையுலகப் பயணத்தை தொடங்கி அவருடனேயே நடித்த ஜி.சகுந்தலா, அவர் நாடகமன்றங்களில் நடித்தபோது தான் முதலில் சென்று விடாமல் பெண்கள் செல்லும் காரை முதலில் பாதுகாப்பாக அனுப்பிவிட்டு அவர்களுடன் மற்றவர்கள் செல்லும் காரை அனுப்பிவிட்டு பிறகு கடைசியாக எம்.ஜி.ஆர். தனது காரில் கிளம்புவார் என்றார். ஒரு முறை நாடகம் முடிந்து இரவில் வரும்போது காவிரியில் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. சாலைகளிலும் பெருவெள்ளம் ஓடிக் கொண்டிருந்தது, எம்.ஜி.ஆர். தனது காரை விட்டிறங்கி தலையில் பெரிய தலைப்பாகை கட்டியபடி கையில் நீண்ட டார்ச் லைட்டுடன் சாலையில் நின்றபடி கார்களை கவனமாக அனுப்பிவிட்டு பின்பு கடைசியாக தனது காரில் ஏறி வந்தார். அப்போது வேறு பலரின் கார்களும் அந்த சாலையில் வந்துகொண்டிருந்தன. அவைகளையும் எம்.ஜி.ஆர். ஒன்றன் பின் ஒன்றாக போக வழி காட்டி உதவினார். எனவே, பெண்களை

வெளியே அழைத்து செல்லும்போதும் மிகவும் கவனமாக அழைத்து சென்று திரும்புவார். அவர்களுக்கு ஒரு பிரச்சனை என்றாலும் உடனே விசாரித்து தீர்த்து வைப்பார்.

காதல் காட்சிகளில் மிக மென்மையாக கனிவாக நடந்து கொள்ளும் எம்.ஜி.ஆர். சில படங்களில் காதலிக்கு பரிசளித்த காட்சிகளும் உண்டு. ஒருவர் மற்றவருக்கு அளிக்கும் பரிசு என்பது ஒருவருடைய குணநலன்களை வெளிப்படுத்தும் அம்சமாக திகழ்கிறது; அது பெறுபவருக்கு நன்மை அளிப்பதாக இருக்க வேண்டும்; கொடுப்பவரின் உள்ளத்தின் உண்மையை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும்; என்னிடம் இருக்கிறது என்று எதையாவது தூக்கி கொடுத்து விடுவது உண்மையான பரிசாக இருக்காது; பரிசைப் பெற்றுக் கொள்வோர் மனதுக்கும் வாழ்க்கைக்கும் ஏற்றதாக



பயன் அளிப்பதாக இருந்தால் மட்டுமே அந்த பரிசு உண்மையான பரிசாக இருக்கும்.

காதலிக்கு பரிசளிக்கும்போது எம்.ஜி.ஆர். அந்த காட்சியை மிக அருமையாக தன்னுடைய இமேஜுக்கு இன்னும் கூடுதல் பலம் சேர்ப்பதாக அமைத்திருப்பார். ஒவ்வொரு காட்சியையும் அவர் அப்படித்தான் அமைக்கின்றார் என்றாலும் தான் திருமணம் செய்துகொள்ளப் போகும் பெண்ணோடு ஆன தொடர்பு [interaction]மிகச் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதில் அவர் கூடுதல் கவனம் செலுத்தி இருப்பார்.

எம்.ஜி.ஆர். நடித்த பரிசு படத்தில் எம்.ஜி.ஆர். தன்னை ஓடத்தில் அழைத்துப்போய் கரையில் சேர்க்கும் ஓடக்கார பெண்ணான சாவித்திரிக்கு ஐந்து ரூபாய் பரிசளிப்பார். அந்த இடத்துக்கான பயணக்கட்டணம் அந்த காலத்தில் ஐம்பது காசு அல்லது ஒரு ரூபாய் ஆக இருந்திருக்கலாம். ஆனால் இவர் ஒரு முழு ஐந்து ரூபாய் நோட்டை அப்பெண்ணிடம் கொடுத்தார். அந்த ஐந்து ரூபாயை வைத்து ஒரு பாட்டு காட்சியும் அந்தப் படத்தில் உண்டு. அந்த பாட்டு காட்சி அவர்களின் காதலை அதன் புனிதத்தை வெளிப்படுத்துவதாகவும் அந்த ஐந்து ரூபாய் நோட்டு ஒரு காதல் பரிசு என்பதையும் புலப்படுத்தும்.

எண்ண எண்ண இனிக்குது
ஏதேதோ நினைக்குது
வண்ண வண்ண தோற்றங்கள் அஞ்சு ரூபா - கண்ணை
வட்டமிட்டு மறைக்குது அஞ்சு ரூபா

என்று தொடங்கும் இந்த பாடல் பேச்சுவழக்கில் அஞ்சு ரூபா என மகிமைப்படுத்தப்பட்டு இருக்கும் இந்த காதல் பரிசு முக்கியத்துவம் இத்துடன் முடிந்து விடவில்லை.

எம்.ஜி.ஆருக்கும் சாவித்திரிக்கும் திருமணம் நடைபெறாது. எம்.ஜி.ஆருக்கும் புத்தி சுவாதீனமில்லாத ராகினிக்கும் திருமணம் நடந்து விடும். அப்போது அந்த திருமணத்துக்கு வரும் சாவித்திரி இந்த அஞ்சு ரூபாயை எம்.ஜி.ஆருக்கும், எம்.ஜி.ஆர். தன் கழுத்தில் தனக்கு அணிவித்த தங்கச்சங்கிலியை மணமகள் ராகினிக்கும் பரிசாக கொடுப்பார். பின்னர் ராகினி இறந்துபோன பிறகு மீண்டும் காதலர் இணைவர்.

எம்.ஜி.ஆர். படத்தில் எந்த சூழ்நிலையிலும் அவர் தன் காதலியை விட்டு நிரந்தரமாக பிரிந்து சென்றதாக கதை அமையாது. இடையில் ஏற்படும் பிரிவு தற்காலிகமானதாகவே அமைவதால் பெண்கள் தைரியமாக படம் பார்க்க முன் வருவர். எம்.ஜி.ஆர். தன்னை நம்பிய பெண்களை நட்டாற்றில் விடுவதில்லை என்ற எண்ணம் வலுப்பட்டதால் அவரை பெண்கள் இறுதி வரை நம்பினர். அந்த நம்பிக்கையில் தான் அண்ணாதிமுக கட்சிக்கு வீட்டினர் எதிர்ப்பையும் மீறி துணிந்து வாக்களித்தனர்.

மன்னாதி மன்னன் படத்தில் அவர் தான் காதலித்த நாட்டியமாடும் குலத்தை சேர்ந்த பத்மினியை மணக்காமல் தன் தாயின் மானம் காக்க மேற்கொண்ட போராட்டத்தில் அவர் சோழ இளவரசி அஞ்சலி தேவியை மணக்க நேர்ந்தது.

கணையாழி இங்கே மணவாளன் அங்கே
காணாமல் நானும் உயிர் வாழ்வது எங்கே

என பத்மினி பாடும் பாடல் திரையிசை வரலாற்றில் தனக்கென ஓர் இடத்தை பிடித்தது. தாய்க்குப் பின் தாரம் என்ற கருத்து அவரது ரசிகர்கள் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்து அல்லவா. எனவே இப்படத்தில் தாய்க்காக நடத்திய போராட்டத்தில் அவர் தன காதலியை இழந்துவிட்டார். இது ஏற்றுக்கொள்ள கூடியதாக அமைந்ததால் தான் படம் பெரியளவில் வெற்றி பெற்றது. எம்.ஜி.ஆர். படங்கள் அவர் ஒரு ரட்சகர், நல்லவர்; அன்பானவர்; நேர்மையானவர் எனப் பெண்களுக்கு நம்பிக்கை ஊட்டின. இதனால் அவர் படங்களில் பிழியப் பிழிய அழ வேண்டிய சோகம் இருக்காது.

உழைப்புக்கான பரிசு

பரிசு படத்தில் எம்.ஜி.ஆரின் பண வசதியை காட்டும் விதமாக அவர் சாவித்திரிக்கு அளித்த தங்கச்சங்கிலி அமைகின்றது; ஆராய்ச்சியாளர் என்ற பெயரில் அங்கு வந்திருக்கும் காவல்துறை அதிகாரி என்பதால் அவருடைய பண வசதிக்கு ஏற்ற வகையில் தன் வருங்கால மனைவிக்கு அவர் தங்கச்சங்கிலி அணிவிப்பது இயற்கை. ஆனால் ஓடக்காரப் பெண் பத்து மடங்கு அதிகமான கூலியைக் கொடுப்பது அந்த உழைப்பின் பலனை உழைப்பின் உயர்வை அவர் உணர்ந்திருப்பதை எடுத்துக்காட்டுகிறது. மேலும் உழைப்பாளிகளின் பேர் உழைப்பாளிகளின் மீது தனக்குள்ள அபிமானத்தையும் தன் படம் பார்க்க வரும்

ரசிகர்களுக்கு அவர் இந்த ஐந்து ரூபாய் மூலம் உணர்த்துகிறார்.

எம்.ஜி.ஆர். நிஜ வாழ்விலும் அவர் கண்டவருக்கெல்லாம் உதவும் தன்மை உடையவர் என்பதால் இன்னார் இனியார் எனாமல் யாருக்கு உதவினாலும் அவர்கள் எதிர்பார்த்ததை விட கூடுதலாக பணம் கொடுத்து அவர்களை இன்ப அதிர்ச்சிக்குள்ளாக்கி அதை கண்டு மகிழ்ச்சி அடைவது அவருடைய இயல்பாகும். 'ஈத்துவக்கும் இன்பம்' என்பதற்குப் பேரிலக்கணமாகத் திகழ்ந்தவர் எம்.ஜி.ஆர். எனவே இந்த கட்டணமான ஐந்து ரூபாய் ஏதோ படத்துக்காகவோ ஒரு பெண்ணை மயக்குவதற்காகவோ எடுக்கப்பட்ட காட்சி அல்ல. இயற்கையிலேயே அவர் ஒன்றுக்கு பத்தாக செய்யும் இயல்புடையவர் என்பதை விளக்கிக் காட்டும் ஒரு காட்சியாகும்.

இனி உண்மையில் நடந்த ஒரு சம்பவத்தை இங்கு விளக்கிக் கூறுவோம். ஒருமுறை எம்.ஜி.ஆர். காரில் பயணம் செய்து கொண்டிருந்தபோது கார் நின்று விட்டது என்ன கோளாறு என்று தெரியாமல் அனைவரும் தவித்துக் கொண்டிருந்த போது அந்தப் பக்கமாக வந்த ஒரு இளைஞன் தனக்கு கொஞ்சம் கார் ரிப்பேர் தெரியும் என்றும் தான் அதை சரிசெய்ய முயல்வதாகவும் கூறினார். எம்.ஜி.ஆர். உடனே சரி என்று சம்மதித்தார். அவன் பரபரவென்று இயங்கினான். வெகு சுறுசுறுப்பாக மடமடவென்று அந்த வேலையை செய்து முடித்தான். அவனுடைய சுறுசுறுப்பையும் வேலை நுட்பத்தையும் வேலைத் திறனையும் கண்ட எம்.ஜி.ஆர். அவனுக்கு ஏதாவது

செய்ய வேண்டும் என்று நினைத்தார். மற்றவர்களாக இருந்தால் வேலைக்கேற்ற கூலியைக் கொடுத்து விட்டு கூடுதலாக 100 200 கொடுத்து அனுப்பியிருப்பார்கள். ஆபத்து காலத்தில்உதவியவர்களுக்கு தங்கள் நன்றிக் கடனை செலுத்துவது நல்லவர்களாகிய எல்லோருக்கும் இருக்கும் பண்பு தான். ஆனால் எம்.ஜி.ஆர் .சராசரி மனிதர் அல்லவே; எனவே அவர் இத்துடன் நிறுத்திக் கொள்ளவில்லை.

எம்.ஜி.ஆர். அந்த இளைஞனுக்கு நிரந்தரமாக ஒரு தொழிலை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நினைத்து அவர் முப்பது சைக்கிள்கள் வாங்கப் பணம் கொடுத்தார். அந்த இளைஞனுக்கு ஒரு சைக்கிள் கடையை உருவாக்கிக் கொடுத்தார். பின்பு ஒரு முறை அந்த இளைஞரை எம்.ஜி.ஆர். சந்தித்தபோது அவர் தனது கடையின் சைக்கிள்களில் எம்.ஜி.ஆர். என்று பெயிண்டால் எழுதியிருந்தார். அப்போது எம்.ஜி.ஆர். அவரை பார்த்து ‘‘நீ இப்படி செய்யாதே; நீ எம்.ஜி.ஆர். என்று எழுதி வைத்தால் என் ரசிகர்கள் மட்டும் தான் உன்னிடம் சைக்கிள் எடுப்பார்கள்; காங்கிரஸ்காரர்கள் பொதுமக்கள் உன்னிடம் சைக்கிள் எடுக்கத் தயங்குவார்கள். அதனால் நீ எம்.ஜி.ஆர். என்ற பெயரை அழித்துவிட்டு எல்லோருக்கும் பொதுவான ஒரு சைக்கிள் கடையை நடத்திக் கொண்டு வா’’ என்று அவருக்கு அறிவுரை கூறினார். இவர் தான் எம். ஜி .ஆர்.

முப்பது என்பது என்ன கணக்கு என்பது தெரியவில்லை. மதுரையில் சின்னமுத்து என்ற

ரசிகருக்கு/ அதிமுக தொண்டருக்கு / ஒரு ரிகஷாக்காரருக்கும் எம்.ஜி.ஆர். முப்பது ரிக்ஷா வாங்கி கொடுத்து தனது ஆட்களுக்கு வழங்கச் சொல்லி அவர்களுக்கு சொந்த தொழில் ஏற்படுத்தி கொடுத்தார். அவரை நிர்வாகம் செய்துகொள்ளும்படி கூறியிருந்தார். இன்றைக்கும் தீவிர ரசிகராக இருக்கும் சின்னமுத்து என்ற எம்.ஜி.ஆர். [அவரது பட்டப்பெயர்] எம்.ஜி.ஆரை பற்றி நன்றியோடு மணிக்கணக்காக பேசுகிறார்.

சைக்கிள் கடை வைக்க தானே உதவி செய்து இருந்தாலும் கூட தன்னுடைய பெயர் பிரபலம் அடைவதை விரும்பாமல் அந்த உழைப்பாளி நல்ல முறையில் முன்னேறவேண்டும் அவனுடைய உழைப்புக்கேற்ற உயர்வை அவன் தன் வாழ்வில் அடைய வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் அந்த இளைஞனுக்கு எம்.ஜி.ஆர். அறிவுரைகளை வழங்கினார். ஒரு டியுப் லைட்டை கோயிலுக்கு கொடுத்துவிட்டு அதில் தன் பெயரை சிவப்பு பெயிண்டில் எழுதி வைக்கும் மனிதர்களுக்கு நடுவில் எம்.ஜி.ஆர். ஒரு தனி மனிதராகவே திகழ்ந்தார்.எம்.ஜி.ஆர். தனது படத்தில் மட்டும் உழைப்பாளிகளுக்கு ஒன்றுக்கு பத்தாக கூலி கொடுத்து அவர்களின் உழைப்பின் பெருமையை உயர்த்த வேண்டும் என்று நினைப்பவர் கிடையாது நிஜவாழ்விலும் அவர் உழைப்பின் பெருமையை உயர்த்த தன்னாலான அனைத்து காரியங்களையும் செய்து வந்தார். இன்னும் பலருக்கு எம்.ஜி.ஆர். இதுபோன்ற உதவிகளை அவர்களின் உழைப்பின் மேன்மை சிறப்புற வேண்டி செய்திருக்கின்றார்.

காதல் பரிசாக திருக்குறள்

பொதுவாக காதலிக்கு ஒரு காதலன் பரிசளிக்கும்போது மலர் , மலர் மாலை, விலை உயர்ந்த சேலை துணிமணிகள் ஆடை ஆபரணங்கள், நகைகள் போன்றவற்றை வழங்குவது இயல்பு. ஆனால் எம்.ஜி.ஆர். சற்று வித்தியாசமானவராக சில படங்களில் வித்தியாசமான பரிசுகளை அளித்தார். ரகசியப் போலிஸ் 115 படத்தில் தான் காவல்துறை அதிகாரி என்பதை மறைத்து நாடக வாய்ப்பு தேடும் ஒரு ஏழை இளைஞனாக நடித்திருப்பார். இப்படத்தில் ஜெயலலிதா பெரிய பணக்காரர் வீட்டுப் பெண்; அவருடைய பிறந்தநாளுக்கு பரிசாக தராமல் அவருடைய பிறந்தநாள் கொண்டாட்டத்தின்போது எம்.ஜி.ஆர். ஹாப்பி பர்த்டே டூ யூ என்று பாடும் பாடலில் கலந்துகொண்டு ரகசியமாக ஜன்னல் வழியாக நின்று பார்த்தபடி பாடுவார். அதன்பின்பு ஜெயலலிதாவை யாருக்கும் தெரியாமல் தோட்டத்திற்கு வரும்படி அழைத்து அங்கு வைத்து அவருக்கு ஒரு சின்ன பாக்கெட் திருக்குறளை பரிசாக அளிப்பார். அப்போது அவருக்கு ஒரு திருக்குறளை வாசித்து காண்பித்து இது போல வாழவேண்டும் என்று சொல்லியும் காட்டுவார்.

திருக்குறள் என்ற நூல் உலகப் பொதுமறையாக கொள்ளப்படவேண்டிய மிகச் சிறந்த நூல். எம்.ஜி.ஆர். மதம் இனம் மொழி நாடு வேறுபாடுகளை கடந்த மனிதநேயவாதி என்பதால் இந்நூலின் மீது அவருக்கு தீவிர பற்றும் பிடிப்பும் இருந்தது. அவர் திருக்குறள் வாசிப்பதாக

சினிமாவில் தோன்றும் காட்சிகள் வேறு சில படங்களிலும் உண்டு. இது மட்டுமல்ல அவர் தன் வீட்டில் ஒரு குழந்தை பிறந்த போது அந்த குழந்தைக்கு அதன் பெற்றோரிடம் எழுதிக்கொடுத்த வாழ்த்து மடலில் ஒரு திருக்குறளை மேற்கோள் காட்டி குறள் போல நீ வாழ வேண்டும் என்று எழுதிக் கொடுத்திருக்கிறார்.

தந்தை மகற்காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்

என்ற குறளை எழுதிக் கொடுத்தார். அதற்கு கீழ் கையெழுத்திடும்போது எம்.ஜி.ராமச்சந்திரன் என்ற பெயருடன் வீட்டில் தன்னை அந்த குழந்தையின் தாய் அழைக்கின்ற சேச்சா என்ற பெயரையும் சேர்த்து எழுதி தருகின்றார். வீட்டில் அவரை அவருடைய அண்ணன் பிள்ளைகள் சித்தப்பா என்ற பொருளில் சேச்சா என்று அழைத்தனர். அவருடைய மனைவியின் சகோதரர் மணி அவர்களின் குழந்தைகளும் அவரை சேச்சா என்றே அழைத்து வந்தனர் எல்லா குழந்தைகளுக்கும் அவர் சேச்சா தான்.

எம்.ஜி.ஆர். எழுதிக்கொடுத்த வாழ்த்து மடல் தன்னுடைய குறிப்பேட்டில் தன் வீட்டில் பிறந்த ஒரு குழந்தைக்கு அதன் பெற்றோரிடம் எழுதிக்கொடுத்தது தானே தவிர மக்களுக்காக தேர்தலுக்காக எழுதிக் கொடுத்தது அல்ல. அந்த மடலிலும் அவர் திருக்குறளை தான் மேற்கோள் காட்டியுள்ளார். அவருடைய உள்ளத்தின் ஆழத்தில் திருக்குறளுக்கு என்று தனியாக ஓர் இடம் இருந்திருக்கிறது. திருக்குறளை அவர் மிகவும்

நேசித்தார். வாசித்தார். குறள் காட்டிய வழியில் வாழ வேண்டும் என்று நினைத்திருக்கிறார். அவர் தன்னுடைய வளர்ப்பு மகன் ராதாவிடம் தினமும் பத்து திருக்குறள் படித்து தன்னிடம் ஒப்பித்து விட்டு தான் தூங்கப் போக வேண்டும் என்று சொல்வாராம் இதை ராதாவே என்னிடம் தெரிவித்தார். அவர் தன்னுடைய பிள்ளைகள் திருக்குறள் செல்வர்களாக திகழவேண்டும் என்பதில் அக்கறையும் கவனமும் செலுத்தி வந்திருக்கிறார்.

எம்.ஜி.ஆரின் மனங்கவர்ந்த நூல் திருக்குறள் என்பதில் ஐயமே இல்லை. ஒருவேளை அவர் இன்னும் சில வருடங்கள் ஆட்சியில் இருந்திருந்தால் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் அவர் திருக்குறளை இலவசமாக வழங்கி இருக்கக்கூடும். நம்நாடு படத்தில் அவர் குழந்தைகளிடம் பாடும் பாடலில்

மலர் போல சிரித்து நீ குறள் போல வாழு

என்று ஒரு வரி இடம்பெறும். இந்த வரி ஏதோ கவிஞர் எழுதியதால் எம்.ஜி.ஆர். வாய் அசைத்த வரிகள் அல்ல அது அவருடைய உள்ளத்தின் ஆழத்தில் இருந்து தோன்றிய வார்த்தைகள்தான்.

காதலிக்கு ‘புருச்’

எம்.ஜி.ஆரின் படங்களில் காதலிக்கு வெவ்வேறு பரிசுகளை தருவதாகத்தான் காட்சிகள் அமைந்திருக்கின்றன. எங்கள் தங்கம் படத்தில் காதலியின் பிறந்த நாளன்று மாறுவேடத்தில் வந்து அவருக்கு ஒரு ‘புருச்’ குத்திவிடுவார். இந்த காட்சி

காதல் ரசம் பொங்க நயமாக நாசுக்காக கண்ணியமாக எடுக்கப்பட்டிருக்கும். பெண்களை கவரும் வகையில் இந்த காட்சி மிக அற்புதமாக வசனமே இல்லாமல் படம் பிடிக்கப்பட்டிருக்கும். இந்த காட்சியில் வசனம் அல்லாத நடிப்பு மட்டுமே உள்ள ரசமான இடங்களும் உண்டு.

எம்.ஜி.ஆர். ஒரு ‘புருச்சை’ கொண்டு வந்து ஜெயலலிதாவுக்கு கொடுப்பார். அப்போது ஜெயலலிதா வாங்க மறுத்து தலையை அசைத்து விட்டு அந்தப் ‘புருச்சை’ எம்.ஜி.ஆரே தன்னுடைய மேலாடையில் [ஒரு நீண்ட கவுன்] குத்திவிடும்படி விரலால் சைகை காட்டுவார். ஜெயலலிதா சுட்டிக் காட்டிய இடத்தில் “எப்படி நான் அங்கே புருச்சை குத்துவது” என்று கேட்பதுபோல எம்.ஜி.ஆர். வசனமின்றி முக ஜாடையால் கை அசைவால் கேட்பார். இந்தக் காட்சியில் எம்.ஜி.ஆர். அற்புதமாக நடித்திருப்பார். எம்.ஜி.ஆரின் நிலைமையை நினைத்து திரையரங்கில் ரசிகர்கள் சிரிப்பார்கள். எம்.ஜி.ஆர் முகத்தில் காதல், தர்மசங்கடம், நாணம் ஆகிய அனைத்தும் வெளிப்படும் விதமாக மிக அருமையாக வசனமே இல்லாமல் இக்காட்சி அமைந்திருக்கும். ஆனால் ஜெயலலிதா உறுதியாக இருப்பதாக எம்.ஜி.ஆர். அந்த ‘புருச்சை’ குத்துவார். ஆனால் குத்தும்போது அதன் ஊசிப்பகுதி ஜெயலலிதாவின் உடம்பில் பட்டதும் ஜெயலலிதா ‘ஆ’ என்று கத்தி விடுவார். உடனே எம்.ஜி.ஆர். பதறிப்போய் தன் காதலியிடம் சாரி [SORRY] என்று கேட்டுக்கொண்டு ‘முன்ன பின்ன நான் இதுபோல் குத்தியதில்லை அல்லவா; அதனால் இப்படி தெரியாமல் நடந்துவிட்டது’ என்பது போல

முகத்தை பரிதாபமாக வைத்துக்கொண்டு மிக கவனமாக இந்த புருச்சை குத்தி விடுவார். பின்னணி இசை கூட தாம் தூம் என்று அலறாத வசனம் இல்லாத இந்த காட்சி இருவரும் ரகசியமாக சந்தித்து மகிழும் காட்சியாக அமைந்திருக்கு . மிக அமைதியாக அதே நேரத்தில் ஆழமான உணர்ச்சிகளை பிரதிபலிக்கும் வகையில் ஒருவருக்கொருவர் அவர்களின் அன்பின் ஆழத்தை பரிமாறிக் கொள்ளும் விதத்தை காட்டும் வகையில் மிகவும் சிறப்பாக எடுக்கப்பட்டிருக்கும். இதுபோன்ற காதல் பரிசு எம்.ஜி.ஆர் படத்தில் உண்டு.


உலகம் சுற்றும் வாலிபன் படம் தமிழ் திரையுலகில் அதிக வசூல் பெற்ற படமாகும். கிராமங்களில் மழைக்காலத்தின் போது எவரும் படத்துக்கு வர மாட்டார்கள்; ஆனால் எம்.ஜி.ஆர். படம் போட்டால் மட்டும் எந்த மழையிலும் வெயிலிலும் ஆண்களும் பெண்களும் வந்து அந்த படத்தை பார்த்துவிட்டுப் போவார்கள். எம்.ஜி.ஆர். படங்கள் மட்டும் இல்லையென்றால் சின்ன திரையரங்குகளில் உரிமையாளர்கள் இரண்டு மூன்று மாதம் முழு நஷ்டத்தை அனுபவிக்க வேண்டியிருக்கும். எம்.ஜி.ஆர். படங்களால் மட்டுமே பல திரையரங்குகள் லாபமாக இன்றும் ஓடிக்கொண்டிருக்கின்றன. இன்றைக்கும் ஒரு வாரம் திரையிடப்பட்டு எம்.ஜி.ஆர். படங்கள் இலட்சத்துக்கு அதிகமாக வசூல் செய்துவிடுகின்றன. நேற்றும் இன்றும் என்றும் எம்.ஜி.ஆரால் லாபம் அடைந்தவர்கள் திரையுலகில் இருக்கின்றனர். இன்றைக்கும் எம்.ஜி.ஆர். பற்றி நடக்கும் நிகழ்ச்சிகள்

அவற்றை நடத்துவோருக்கும் நிகழ்ச்சியில் பங்கு பெறுவோருக்கும் நல்ல பண வரவை தந்து கொண்டிருக்கின்றன. இதனை யாராலும் மறுக்க இயலாது. எம்.ஜி.ஆர். யானையை போலே இருந்தாலும் ஆயிரம் பொன் மறைந்தாலும் ஆயிரம் பொன். செத்தும் கொடுத்த சீதக்காதியாக அவர் திகழ்கிறார். எம்.ஜி.ஆர். ரசிகர்கள் மட்டுமே ஒளிவிளக்கு ஐம்பதாண்டுவெளியீட்டு விழா போன்ற நிகழ்ச்சிகளை தொடர்ந்து தங்களின் சொந்தப் பணத்தைக் கொண்டு நடத்துகின்றனர்.

உலகம் சுற்றும் வாலிபன் வெளிநாடுகளில் எடுக்கப்பட்ட படம் என்பதோடு அது ஒரு இருபதாம் நூற்றாண்டின் விஞ்ஞானியின் கதை சர்வதேச போலீசார் ஒருவரின் கதை என்பதாக அது ஆங்கில படத்துக்கு இணையாக ஒரு சர்வதேச தளத்தில் வைத்து பார்க்கப்படும் படமாக எடுக்கப் பட்டிருக்கும். அதேவேளையில் அந்த படத்தில் அமைந்துள்ள பாடல்களும் நகைச்சுவை காட்சிகளும் தமிழ் ரசிகர்களின் உள்ளத்தை கொள்ளை கொள்வதாக அமைந்தன. மேலும் லிவிங் டுகெதர் என்ற முறையிலும் எம்.ஜி.ஆர். – மஞ்சுளா தொடர்பான காட்சிகள் புரிந்துகொள்ளப்படுவதாக இருக்கும்.

இன்றைய நவீன உலகில் இளைஞர்களின் வாழ்க்கை முறை பெற்றோர்களை விடுத்து தனியாக வாழ்கின்ற ஒரு வாழ்க்கை முறையாக உள்ளது. இதுவும் அந்த படத்தில் இடம் பெற்றிருக்கும் அந்த படத்தில் கதாநாயகன் கதாநாயகி யாருக்குமே பெற்றோர் கிடையாது. கதாநாயகன் கதாநாயகி

திருமணத்தை கூட அவருடன் இருக்கும் ஒரு சமையல்காரர் தான் நடத்தி வைப்பார். இந்த படத்தில் அண்ணன் எம்.ஜி.ஆர். தன் காதலி மஞ்சுளாவுக்கு ஒரு தங்க சங்கிலி பரிசளிப்பார். அது வெறும் பரிசாக மட்டும் இருக்காது அந்த கதையின் நகர்வுக்கு ஒரு முக்கிய காரணியாக இருக்கும். அணு விஞ்ஞானியாக வரும் எம்.ஜி.ஆர் தன்னுடைய ஆராய்ச்சிகளை முடித்துவிட்டு ஓய்வெடுப்பதற்காக உலகம் சுற்றக் கிளம்புவார். அப்போது தன் காதலிக்கு இந்தத் தங்கச் சங்கிலியை அணிவிப்பார். இப்போதைக்கு இந்த சங்கிலி அணிவிக்கிறேன். விரைவில் மணமாலையை தருகிறேன் என்று சொல்லிவிட்டு அது திருமணத்திற்கு முந்திய காதல் பரிசு என்பதை நமக்கு சொல்லாமல் சொல்லி வைப்பார். இந்தச் சங்கிலியின் பதக்கத்திற்குள் அவர் ஒரு முக்கியமான ரகசிய குறிப்பை வைத்திருப்பார். அவருடைய ஆராய்ச்சிக் குறிப்பு எங்கு பத்திரமாக வைக்கப்பட்டிருக்கிறது என்பதை குறிக்கும் வகையில் ஒரு ரகசிய குறிப்பை எழுதி அதை நான்காக கிழித்து அதன் ஒரு பகுதியை காதலிக்குப் பரிசளித்த சங்கிலியின் டாலருக்குள் வைத்திருப்பார். அந்த சங்கிலி வெறும் காதல் பரிசு மட்டுமல்ல அவருடைய ஆய்வுக்குறிப்புகள் அடங்கிய ரகசிய பொக்கிஷமாகவும் இருக்கின்றது. இதுதான் எம்.ஜி.ஆரின் ஒரு தனித்திறன். அவருடைய கதைகளில் தனிநபர் கதையும் பொது பிரச்சனையும் ஒன்றோடு ஒன்று இணைந்து VENN DIAGRAM போல அமைந்திருக்கும். நடுவில் இருக்கும் அமைப்பில் எம்.ஜி.ஆர். இருந்து மூன்று வளையத்தில் இடையில்



ஏற்பட்டிருக்கும் சிக்கல்களை பிரித்து தனித்தனியாக எடுத்து வைப்பார்.

உலகம் சுற்றும் வாலிபன் படத்திலும் இவருடைய ஆராய்ச்சிக் குறிப்பு இருக்கும் இடமும் இவருடைய அன்பு காதலியின் பரிசும் ஒன்றாக இருக்கும். இந்த சங்கிலி மஞ்சுளாவிடம் இருந்து அவருடைய தோழி சந்திரகலாவுக்கு மாறிவிடும். பிறகு சந்திரகலாவின் கழுத்திலிருந்து தமிழ்நாட்டைச் சேர்ந்த திருடன் ஒருவன் பறித்துவிடுவான். அவனிடமிருந்து இன்னொரு திருடனால் பறிக்கப்பட்டு இடம் மாறி விடும். சங்கிலி தான் மாறுமே தவிர டாலர் இந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த காமெடியனான நாகேஷின் கையிலேயே தங்கிவிடும். இவ்வாறாக இந்த காதல் பரிசு இந்த கதையின் ஓட்டத்துக்கு உதவியாக இருக்கும்.

காதல் பரிசுகளுக்கு சில மாதிரிகள்

இக்கட்டுரையில் எம்.ஜி.ஆர். பெண்களின் மனதை கவரத்தக்கவகையில் படங்களில் அவர் வழங்கிய சில காதல் பரிசுகளையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் கண்டோம். உழைப்புக்கு ஒரு அஞ்சு ரூபாய், காதலுக்கு ஒரு புருச்; கதை ஓட்டத்துக்கு டாலருடன் கூடிய தங்கச் சங்கிலி என மூன்று பரிசுகளை கண்டோம். இவை படம் பார்ப்பவரால் மறக்க முடியாத பரிசுகள் ஆகும். குறிப்பாக பெண்கள் மனதில் என்றும் நிலைத்து நிற்பவை ஆகும்.

வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர் நூல் வரிசை – 5

